
கோகுலம்


GOKULAM


ஜனவரி '92 ரூ. 3/-




காகிதக் கப்பல் போட்டிங்க!
செலித்தால் பரிசு தாருங்க!

கோகுலம்





1992 - ஜனவரி மாத இதழ்
மலர் : 9 இதழ் : 12

அருமைச் சிறுவர் சிறுமியரே,

உங்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு - பொங்கல் வாழ்த்துகள். இந்தப் புத்தாண்டில் அமைதியும் நல்லெண்ணமும் தழைத்தோங்கி உலக மக்கள் அனைவரும் சகோதர பாசத்தோடு வாழ வேண்டும் என்று இறைவனை வேண்டுவோம்.

டிசம்பர் கோகுலத்தைப் பாராட்டி மிக அதிக அளவிலான கடிதங்கள் வந்துள்ளன. இன்னமும் வந்து கொண்டிருக்கின்றன. கிருஸ்துமஸ் இதழை வெளியிட்டது போல் ரம்சான் இதழ் வெளியிடுவீர்களா என்று முஸ்லீம் வாசகர்கள் பலர் கேட்டிருக்கிறார்கள். கண்டிப்பாக முயற்சி செய்வோம் என்று அவர்களுக்குக் கூறுகிறேன்.


'எங்கள் ஊரில் நடந்தது' பகுதிக்கு தினமும் நிறையக் கடிதங்கள் வருகின்றன. அடுத்த இதழில் இருந்து இது வெளிவரும்.

கோகுலத்திற்குக் கதை, பாட்டு, எழுதியனுப்பும் பலர், தங்கள் முகவரியைத் தருவதில்லை. சரியான முகவரி இல்லாதவற்றை எப்படி வெளியிட முடியும்? எனவே தம்பி தங்கைகள் அனுப்பும் கதை, பாடல்களில் தங்கள் முழு முகவரியையும் தவறாது எழுதியனுப்ப வேண்டும். அதோடு தங்கள் வயதையும் குறிப்பிட வேண்டும். எதைப் பற்றி எழுதலாம் என்று பலர் கேட்கிறார்கள். உங்களைப் போன்ற தம்பி தங்கைகளுக்கு படிக்கச் சுவையானதாக நீங்கள் கருதும் எதைப் பற்றியும் எழுதலாம். அவை உங்கள் சொந்தக் கற்பனையாக இருக்க வேண்டும். வேறு பத்திரிகைகளில் வெளியானவையாக இருக்கக் கூடாது!

'கேளுங்கள் சொல்லப்படும்' பகுதிக்கும், 'கேட்கட்டுமா டாக்டர்?' பகுதிக்கும் கேள்விகளைக் கேட்கும் போது, ஒரு கார்டில் ஒரே ஓர் கேள்வியை மட்டும் கேளுங்கள்! திண்டிவனத்தில் இருந்து ஒரு தம்பி இருபது கேள்விகளை ஒரே கார்டில் கேட்டு திக்குமுக்காட வைத்து விட்டான்! பலரும் விடாமல் கேட்டுக் கொண்டதற்கு ஏற்ப கேளுங்கள் சொல்லப்படும் பகுதி மூன்று பக்கங்களாக்கப்பட்டுள்ளது. உங்களுக்கு மகிழ்ச்சிதானே?

பாடல் எழுதுவோருக்கு, கதை எழுதுவோருக்கு, நகைச்சுவை எழுதுவோருக்கு, என்று போட்டி வைத்தது போல் விடுகதை எழுதுவோருக்கும், ஓவியம் வரைவோருக்கும் போட்டி வைக்க வேண்டும் என்று ஏராளமானோர் எழுதியிருக்கிறார்கள். அடுத்த இதழில் விடுகதைப் போட்டி. மகிழ்ச்சிதானே?

இந்த இதழோடு உங்கள் கோகுலத்திற்கு ஒன்பது வயது முடிவடைகிறது! பத்தாவது ஆண்டில் உங்களை மேலும் மகிழ்விக்க வைக்கும்படி பல புதுமைகளை நீங்கள் எதிர்பார்க்கலாம் என்று இப்பொழுதே கூறி வைக்கிறேன்.



அன்புடன்,

(கௌரவ ஆசிரியர்)

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் - பாரதியார்.



சொர்க்கம்!

ஒரு பாதிரியார் கடவுள் பக்தியுடன் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்து வாழ்ந்து வந்தார். 'ஒரு நாள் தேவதூதன் பாதிரியார் முன் தோன்றி, ''பாதிரியாரே, உமது சேவையில் மகிழ்ந்து உம்மை சொர்க்கத்துக்கு அழைத்துப் போக ஆண்டவர் என்னை அனுப்பியுள்ளார், புறப்படுங்கள்'' என்றான்.

பாதிரியார் ''என்னால் இப்போது வர முடியாது. ஏனென்றால் இங்கே சிறிய செடிகள் நிறைய இருக்கின்றன. அவற்றிற்குத் தண்ணீர் ஊற்றி வளர்க்க வேண்டும். இல்லையேல் வாடி விடும், இவை வளர்ந்து மக்களுக்குப் பயன் பட வேண்டுமே? அதற்காகவாவது சிறிது காலம் நான் இங்கே இருக்க வேண்டும்'' என்றார். தேவதூதன் சென்று விட்டான்.

பின்பு ஒரு நாள் தேவதூதன், பாதிரியார் முன் மறுபடி தோன்றி, கடவுள் பாதிரியாரை அழைப்பதாகக் கூறினான். இந்த முறை பாதிரியார், ''என்னிடம் சிறிய பூனைக்குட்டி ஒன்று துரத்தும் நாய்களிடமிருந்தும், பையன்களிடம் இருந்து தப்பி அடைக்கலமாக வந்துள்ளது. எனவே என்னால் இப்போது வர இயலாது'' என்றார்.

இன்னும் சிறிது காலம் கழிந்தது. தேவதூதன் மீண்டும் தோன்றி, பாதிரியாரை அழைத்தான்.

பாதிரியார் சொன்னார், 'மன்னிக்க வேண்டும். என்னிடம் ஏழை அனாதைச் சிறுவர்கள் பலர் வந்து சேர்ந்துள்ளனர். அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டும். அது முடிந்ததும் கடவுளிடம் வர விரும்புகிறேன்' என்றார். தேவ தூதன் சென்று விட்டான்.

சிறிது காலம் சென்றது. இந்த நிலையில் பாதிரியார் சொர்க்கம் செல்ல விரும்பினார். எனவே, அவர் ஆண்டவனை நோக்கிப் பிரார்த்தனை செய்தார். ஆண்டவன் அவர் முன் தோன்றி ''என்ன வேண்டும்?'' எனக் கேட்டார்.

பாதிரியார் சொன்னார், ''ஆண்டவரே, இப்போது என்னுடைய கடமைகளும் பொறுப்புகளும் முடிந்து விட்டன. எனவே, நான் இப்போது உமது விருப்பப்படி சொர்க்கம் வர விரும்புகிறேன்.''

கடவுள் சிரித்தார். 'திருத்தொண்டரே! இவ்வளவு நாளும் நீங்கள் எங்கேயிருந்ததாக நினைப்பு? பூவுலகில்தான் இருந்தீர்கள் என்றாலும், இதையே நீங்கள் சொர்க்கமாக அல்லவா மாற்றியிருந்தீர்கள்! இதில் உள்ள உண்மையான சுகத்தை விடவா சொர்க்கத்தில் சுகம் கிடைக்கும்?'' என்று பிறர் தொண்டில் சொர்க்கம் கண்ட அந்தப் புண்ணியரை அன்புடன் பார்த்தார் இறைவன்.

- ப. பிரேமா.

ஒரு நாள் முல்லா ஏதோ ஒரு விஷயமாக மன்னரைச் சந்திக்க அதி காலையில் அரண்மனைக்குச் சென் றார்.

அந்தச் சமயத்தில் மன்னர் தமது பரிவாரங்களுடன் காட்டுக்கு வேட்டையாடப் புறப்பட்டுக் கொண் டிருந்தார்.

காட்டுக்கு வேட்டையாடப் புறப் பட்டாலோ, அல்லது போர்க்களம் நோக்கிப் புறப்பட்டாலோ எதிரே முல்லா மாதிரி யாராவது வந்து அவர் முகத்தில் விழிக்க வேண்டியது நேர்ந் தால் விபரீதமான; எதிர்மறையான பலன் கிடைக்கும் என்பது அப்போது நிலவிய ஒரு நம்பிக்கை.

காட்டுக்கு வேட்டையாடப் புறப் பட்ட சமயம் முல்லாவின் முகத்தில் விழிக்க நேர்ந்ததால், அன்று விபரீத மான பலன் கிடைக்கும் என்று எண் ணிய மன்னர், முல்லாவின் மீது கடுங் கோபம் கொண்டார்!

மன்னர் உடனே காவலர்களை அழைத்து முல்லாவைச் சிறையி லடைத்துக் கசையடி தருமாறு உத்தர விட்டார். பிறகு வேட்டையாடக் காட் டுக்குச் சென்றார்.

அன்று வழக்கத்திற்கு விரோதமாக வேட்டை மிக உற்சாகமாக அமைந் தது. ஏராளமான கொடிய வன விலங் குகள் எதிர்ப்பட்டன. உற்சாகத்துடன் வேட்டையாடி மகிழ்ந்தார் மன்னர்.

மிக மகிழ்ச்சியுடன் அரண்மனை திரும்பிய மன்னருக்கு, முல்லாவைப் பற்றிய நினைவு வந்தது. உடனே காவ லர்களை அனுப்பி சிறையில் இருந்து

அடையுங்கள் சிறையில்!

முல்லாவை அழைத்து வரச் சொன் னார்.

முல்லா வந்து சேர்ந்ததும் அவரை நோக்கி "முல்லா அவர்களே? உமது



முகத்தில் விழித்தால் சரியான வேட்டை அமையாது என்று நினைத்தேன். ஆனால், நான் நினைத்ததற்கு மாறாக நல்ல முறையில் உற்சாகமாக வேட்டையாட முடிந்தது. ஏராளமான வனவிலங்குகளைக் கொன்றேன். அர்த்தமில்லாமல் உங்களுக்குத் தண்டனை அளித்ததைப் பொருட்படுத்த வேண்டாம்'' என்று மன்னர் கேட்டுக் கொண்டார்.

முல்லா மன்னருக்கு வணக்கம் செலுத்தி ''மன்னர் அவர்களே! நடந்து போன நிகழ்ச்சியினை நான் மனத்தில் கொள்ள மாட்டேன். ஆனால், நடைபெற்ற இந்த நிகழ்ச்சி தொடர்பாக ஒரு பெரிய உண்மையை நான் உணர்ந்து கொண்டேன்'' என்றார்.

''என்ன உண்மை?'' என்று மன்னர் முல்லாவைக் கேட்டார்.

''மன்னர் அவர்களே! தாங்கள் கோபித்துக் கொள்ளாமல் இருந்தால் அந்த உண்மையைப் பற்றி நான் சொல்கிறேன். என் முகத்தில் தாங்கள் விழித்ததால் உங்களுக்குச் சிறந்த பயன்கள் கிடைத்தன. ஆனால், உங்கள் முகத்தில் நான் விழித்ததற்காக எவ்வளவு கடுமையான தண்டனைகளுக்கு உட்பட நேர்ந்தது? உண்மையான துரதிருஷ்டசாலி யார் என்பதை நான் விளங்கிக் கொண்டு விட்டேன்.''

முல்லா கூறியதைக் கேட்டு மன்னர் வெட்கத்தால் தலை குனிந்தார்.

- ந. நவமணி. நல்லாலம்.



தோசையின் மகிமை!

மிகப் பசியுடன் இருந்த ஒரு குடியானவன். ஒரு ரொட்டி வாங்கிச் சாப்பிட்டான். பசி அடங்கவில்லை. மேலும் ஒரு ரொட்டி வாங்கி உண்டான். அப்போதும் பசி அடங்காது போகவே, மூன்றாம் முறையாக ஒரு ரொட்டி வாங்கித் தின்றான். அப்படியும் வயிறு நிறையவேயில்லை. எனவே, நான்காம் முறை ஒரு தோசையை வாங்கித் தின்றான். பசி அடங்கிற்று. உடனே தன் கையால் தலையில் அடித்துக் கொண்டே ''என்னைப் போன்ற மூடன் இருப்பானோ! மூன்று ரொட்டிகளை வீணாக வாங்கித் தின்று விட்டேனே! முதலிலேயே ஒரு தோசையை வாங்கிச் சாப்பிட்டிருந்தால் வயிறு நிறைந்திருக்குமே!'' என்று கூறி அலுத்துக் கொண்டான்.

- டி. சிவக்குமார், அரியூர்.



உலகநாதனின் உலக்கை!

ஏமாந்தபுரி என்று ஓர் இராஜ்யம். அதை ஆண்ட மன்னர் பெயர் உலக நாதர்.

சிறுவயதிலிருந்தே உலகநாதர் மற்ற நாட்டு இளவரசர்களிடமிருந்து மாறுபட்டவராக இருந்தார். அரச குமாரர்களுக்கான குதிரையேற்றம், வாள் பயிற்சி, கல்வி கேள்விகளில் அவர் ஆர்வம் காட்டவில்லை. அவருக்குப் பிடித்தமானவை நாடாப் பொக்கடா தின்பதும், சேமியா பாயசம் குடிப்பதும், இல்லி தாண்டு ஆடுவதும்தான்!

பெரிய மகாராஜாவின் தொந்திரவைப் பொறுக்க முடியாது கல்விகற்க குருகுல வாசம் போனார். அங்கேயும் நாடாப் பொக்கடா, சேமியா பாயசம் செய்யச் சொல்லிப் பிடிவாதம்! மற்ற மாணவர்களையும் அழைத்துக் கொண்டு இல்லி தாண்டு ஆடினார். ஒரே வாரத்தில், 'இளவரசரால் மற்ற மாணவர்களும் கெடுகிறார்கள் என்று குரு அவரைத் திரும்ப அனுப்பிவிட்டார்!

மகாராஜா, உலகநாதரைத் திருத்த எடுத்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை. அதே வருத்தத்தில் அவர் மறைந்தார். எந்த விதமான தகுதியும் இல்லாத உலகநாதர் ஏமாந்தபுரியின் மன்னராக முடி சூட்டப் பட்டார்.

அவைப் புலவர் புதிய மன்னரைப் புகழ்ந்து பாட எழுந்தார். உலகநாதரின் பெருமை மிக்க முன்னோர்களைப் புகழ்ந்து பாடி, அவர்களைப் போல் உலகநாதரும் பெருமையோடு ஆண்டு புகழ் பெற வேண்டும் என்று கவிதையால் வாழ்த்தினார்.

அரசகுல வழக்கப்படி, பாடிய அவைப் புலவருக்குப் பரிசளிக்க பணியாளர்கள் விலை உயர்ந்த முத்து மாலையையும் பணமுடிப்பையும் தட்டில் எடுத்து வந்தனர்.

''இருங்கள்'' என்று அவர்களைத் தடுத்து நிறுத்திய உலகநாதர், ''அவைப் புலவரே, எனது மனம் கவர்ந்த இல்லி தாண்டு ஆட்டத்தைப் புகழ்ந்து ஒரு கவிதை பாடுங்கள்'' என்று உத்தரவிட்டார். பெரும் அறிஞரான அவைப் புலவர் திகைத்துப் போனார்.

''நீர் இல்லித்தாண்டு ஆடியிருந்தால் தானே அதைப் பற்றிக் கவிதை பாட வரும்?' என்று ஏளனமாகக்

சின்னபாபு

கேட்ட உலகநாதர், ''இங்குள்ள புலவர் களில் யாராவது இல்லித் தாண்டு ஆட்டத்தின் அருமை பெருமைகளைப் புகழ்ந்து கவி பாடினால், இந்த விலை மிக்க முத்து மாலையும் பணமுடிப்பும் பரிசாகக் கிடைக்கும்'' என்றார்.

எல்லாப் புலவர்களும் திகைத்து செய்வதறியாது இருக்க, ஒரு அரை குறைப் புலவர் எழுந்து வந்தார்.

''இல்லி தாண்டு ஆடுங்கள்
காலை மாலை ஆடுங்கள்
எல்லை இல்லா ஆனந்தம்,
அதுவே நமக்குத் தந்திடும்''

என்று அரைகுறைப் புலவர் பாடி னார். உலகநாதர் மட்டுமே கைதட்டிப் பாராட்டி மகிழ்ந்தார். ''இல்லி தாண்டு ஆட்டத்தின் பெருமைகளைப் பாடத் தெரியாதவர்கள் அவைப் புலவராக இருக்க அ ரு க தை அற்றவர்கள். அவர்கள் எனக்குத் தேவையில்லை. நாளை முதல் நீங்கள்தான் அவைப் புலவர்'' என்று பரிசளித்தார்.

அ டு த் த ப டி ய ா க உலகநாதர் அமைச்சரைப் பிடித்தார்.

''இல்லித் தாண்டு ஆடத் தெரியுமா உங்களுக்கு? தெரியாவிட்டால் உடனே ஆடக் கற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறினார்.

அமைச்சர் திறமையான அறிவாளி. ''மன்னவா, நான் எண்பது வயதுக் கிழவன். இனிமேல் கற்பது என்பது



முடியாது. அதனால் நான் விலகிக் கொள்கிறேன். நன்கு கில்லித் தாண்டு ஆடத் தெரிந்த ஒருவரை அமைச்ச ராக்கிக் கொள்ளுங்கள்'' என்று கழன்று கொண்டார்.

கில்லித் தாண்டு ஆடத் தெரிந்த ஒரு வரை அமைச்சராக்கிக் கொண்டார் உலகநாத மன்னர்.

உலகநாதர் உடனடியாகப் பல மாறுதல்களைப் புகுத்தினார். அரசு விருந்துகளில் நாடாப் பொக்கடாவும் சேமியா பாயசமும் கட்டாயமாக்கப் பட்டன. அரசுப் பணிகளில் ஆட்களை நியமிக்க கில்லித் தாண்டு தெரிந்திருப் பது சிறப்பான தகுதியாக்கப்பட்டது. எல்லா ஊர்களிலும் கில்லித் தாண்டு கற்பிக்க பயிற்சி நிலையங்கள் ஆரம் பிக்கப்பட்டன அரசு செலவில். கில்லித் தாண்டு ஆட்டத்தில் எல்லா ஊர்களி லும் போட்டிகள் நடை பெற்று, வெற்றி பெற்றவர்களுக்கு அரசாங்க செலவில் வெள்ளித் தாண்டும், தங்கக் கில்லியும் பரிசு தரப்பட்டன. மிகச் சிறந்த திறமையாளருக்கு 'கில்லி வேந்தர்' என்ற பட்டமும் தரப்பட்டது! மக்கள் தங்கள் தொழில்களை மறந் தனர். கில்லிதாண்டு ஆடிப் பரிசு பெறு வதில் கவனம் செலுத்தினர். நாடு எந்த விதமான பாதுகாப்பும் இல்லாது பல வீனமடைந்தது. இதுதான் சரியான நேரம் என்று பகையரசர்கள் ஒன்று



கூடிப் படையெடுக்கத் திட்டம் போட்டனர்.

செய்தி கிடைத்த போது உலகநாதர் தமது மந்திரிப் பிரதானிகளுடன் கில்லித் தாண்டு ஆடிக் கொண்டிருந்தார். தூதர் தலைவன் வந்து, பகை மன்னர்களின் படையெடுத்து வரும் செய்தியைக் கூறினான். மன்னர் சற்றும் பதற்றமடையவே இல்லை! கடைசியாகப் போட்ட கில்லியைத் தாண்டால் அடித்தார்.

அந்த நேரத்தில் ராஜ வீதி வழியாக முனிவர் ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவரை வெறிநாய் ஒன்று கடிக்கத் துரத்தி வந்தது. அந்த நேரம் பார்த்து மன்னர் அடித்த கில்லி, 'விர்'ரென்று வேகமாகப் பறந்து வந்து நாயைத் தாக்க, அடிபட்ட நாய் வலிதாங்காது முனிவரை விட்டு விட்டுப் பின்னால் திரும்பி ஓடிவிட்டது.

''எனக்கு ஏதாவது வரம் கொடுங்கள்'' என்று முனிவரை விடாமல் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார் உலகநாதர்.

''என்ன வரம் வேண்டுமோ அதை உங்கள் கையால் எழுதிக் கொடுங்கள் தருகிறேன்'' என்றார் முனிவர்.

''என் வலக்கையைத் தூக்கினால் பகைவர்கள் மாய வேண்டும்'' என்று எழுதிக் கொடுத்தார் உலகநாதர். ''வரம் தந்தேன்'' என்று நகர்ந்தார் முனிவர்.

''இனி என்னை வெல்ல யார் இருக்கிறார்கள்?'' என்று வீராவேசத்தோடு போர்க்களம் போனார் உலகநாதர். வலக்கையைத் தூக்கினார். ஊஹூம்! எதுவும் நடக்கவில்லை! எதிரிகள் சிரித்தனர். உலக நாதரையும் அவரது படைகளையும் பாய்ந்து அடித்து நொறுக்கினர். உலகநாதர் உயிர் தப்பி ஓடிவந்ததே பெரிய சாதனையானது! காட்டுக்கு ஓடிப் போனார். வரம் தந்த முனிவர் அங்கே இருந்தார். உலகநாதர் விடுவாரா?

''ஏமாற்றி விட்டீர்களே! இது உங்களைப் போன்ற பெரிய முனிவர்களுக்கு ஏற்றதுதானா?'' என்று அழுது கேட்டார்.


''நான் ஏமாற்றவில்லை. நீங்கள் எழுதிக் கேட்ட படிதான் வரம் கொடுத்தேன். இந்தாருங்கள், நீங்கள் எழுதியதைப் பாருங்கள்'' என்று தான் பத்திரப்படுத்தி வைத்திருந்ததை முனிவர் கொடுத்தார்.

உலகநாதர் வாங்கிப் படித்தார். வலக்கையைத் தூக்கினால் என்ற சொல்லில் 'வ' வுக்குப் பதில் 'உ' வையும், 'மாய வேண்டும்' என்ற சொல்லில் 'மா'வுக்குப் பதில் 'பா'வையும் பிழையாக எழுதியிருந்தார் உலகநாதர்!

''தவறு என்னுடையது அல்ல. உங்களுடையதுதான். மன்னனாகி மக்களுக்குத் தொண்டு செய்யக் கூடிய அருமையான பிறவி உங்களுக்குக் கிடைத்தது. அதற்கு உரிய தகுதிகள் எதையும் முழுமையாகப் பெறாது கில்லித் தாண்டு ஆடி, கோமாளி மன்னனாகி நாட்டை இழந்திருக்கிறீர்கள்! தாய் மொழியில் கூடப் பிழையின்றி எழுத முடியவில்லையே உங்களால்! நீங்கள் மனம் வைத்தால் இப்பொழுது கூடத் திருந்த வாய்ப்பு உள்ளது'' என்றார் முனிவர்.

உலகநாதர் இப்பொழுது கல்வி கற்பதோடு, முறையான மற்ற பயிற்சிகளையும் செய்து வருகிறார். ஏமாந்த புரியின் வருங்கால மன்னராயிற்றே!

[redacted]



★ சிஷெல்ஸ் என்ற தீவுவாசிகளின் சிறந்த பொழுதுபோக்கு ஆமை ரேஸ்தான். ராட்சத ஆமைகள் குழந்தைகளை சுமந்தபடி மணிக்கு ஐந்து கிலோ மீட்டர் வேகத்தில் நகர்கின்றன. குழந்தைகளைக் கடத்தாமல் இருந்தால் சரி!

- எம். ஐ. மொய்தீன், காயல்பட்டினம்.

கிராம மக்களைக் கவர்ந்தவர்!

''உன் அப்பா ஜேம்ஸ் பெரிய பிரபு. உன் வீட்டில் காருக்கா பஞ்சம்? என்னுடைய ஓட்டைக்காரைக் கேட்கிறாயே!'' என்று கேட்டார் ஹாகி.

''ஓட்டை என்பதால் தான் கேட்கிறேன் அது எங்கள் வீட்டில் இல்லையே!'' என்றார் டிலானோ.

''புதிர் போடாதே.... விவரமாகச் சொல்...''

விவரம் இதுதான்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் ஹைடுபார்க் என்பது ஒரு இடம். அதையடுத்து 'போகிப்ஸி' என்று ஒரு நகரம். அதன் மேயர் ஜான் ஸேக். அவரும் டிலானோவும் நண்பர்கள். டிலானோவை எப்படியாவது அரசியலுக்கு இழுத்து விட அவர் விரும்பினார். டிலானோ அப்போது நியூயார்க்கில் வக்கீலாக இருந்தார். ஜானின் விருப்பம் நிறைவேற ஒரு நல்ல சந்தர்ப்பம் வந்தது.

அது 'செனட்' தேர்தல் சமயம். போகிப்ஸி தொகுதிக்கு லூயி சாண்ட்லர் என்பவர் நிறுத்தப்பட இருந்தார். கடைசி நேரம். அவர் போட்டியிலிருந்து விலகி விட்டார். பதிலுக்கு ஜனநாயகக் கட்சி சார்பில் ஒருவர் நிறுத்தப்பட வேண்டும். உடனே, டிலானோவை அந்த இடத்துக்கு நிறுத்த ஜான் ஏற்பாடு செய்துவிட்டார். அதன் தொடர்பாகவே நண்பர்கள் இருவரும் பேசிக் கொண்டதை முதலில் படித்தோம்!

''தேர்தல் பிரசாரத்துக்குத் தான் உன் காரைக் கேட்கிறேன்...''

''குதிரைகள் பூட்டப்பட்ட கோச் வண்டியில் சென்று பிரசாரம் செய்வது தானே வழக்கம்....?''

''அந்த வழக்கத்தை மாற்றி, நாம் காரில் சென்று ஓட்டுக் கேட்டால் அது புதுமையாக இருக்கும் அல்லவா?''

''ஓ..... அதுவும் சரிதான்....'' என்ற ஹாகி ''அப்படியானால் நானே அதை ஓட்டிக் கொண்டு உன்னுடன் வருகிறேன்....'' என்றார் மகிழ்ச்சியுடன். அமெரிக்க நாட்டிலேயே முதன் முதலாகக் காரில் சென்று தேர்தல் பிரசாரம் செய்தவர் டிலானோ தான்.

டிலானோ மற்றொரு புதுமையையும் அப்போது செய்தார். தேர்தலுக்கு நிற்பவர் எல்லாரும் அதுவரையில் தமது ஊர்வலங்களையும் கூட்டங்களையும் நகரங்களில் மட்டுமே நடத்திப் பிரசாரம் செய்து வந்தனர். கிராம மக்களை மதித்து, அங்கு சென்று ஓட்டுச் சேகரிப்பதே கிடையாது. டிலானோ இந்த நிலையைத் தலை கீழாக மாற்றி விட்டார். கிராமங்கள் தான் அவரது உயிர் மூச்சாக இருந்தது. இப்படிக் கிராம மக்களை மதிக்கத் தொடங்கிய முதல் அமெரிக்கத் தேர்தல் வேட்பாளர் டிலானோ தான்.

ஹாகியின் கார் மிகவும் பழையது. - வெரி வெரி ஓல்டு மாடல்! மேல் கூடாரம் அற்றது. ஓடும் போது 'டப டப' என்று பட்டாசுக் கட்டைக் கொளுத்திப் போட்டது போல் சப்தமிட்டவாறு ஓடும். போதாக் குறைக்கு அவர்கள் பயணம் செய்தவை கிராமத்து மண் சாலை. மேடும் பள்ளமும், குண்டும் குழியும் நிறைந்தது. ஓடும் போது உள்ளே இருப்பவர்களை விண்ணுக்கும் மண்ணுக்குமாகத் தூக்கி எறி

ஜானகி மணாளன்

யும். சுற்றிலும் புகை மண்டலம் போல் புழுதி கிளம்பும். வண்டியின் ஓட்டமும் அதிகம் இல்லை. சாலை போடும் எந்திர வண்டியை விடக் குறைவு தான். அதுபற்றியெல்லாம் அவர்கள் கவலைப்படவில்லை. கார் ஓடிக் கொண்டே இருக்கும். அப்போது ஒற்றை வெடியைப் போன்ற 'டப்' என்ற உரத்த ஒலி எழும். அவ்வளவு தான். வண்டி நின்று விடும்!

டிரைவர் ஹாகி இறங்கி அதைச் சரிப்படுத்த முயல்வார். டிலானோவும் கீழே இறங்கி நிற்பார். அது கிராமப் பிரதேசம் அல்லவா? பட்டிக்காட்டான் யானையைக் கண்டது போல் என்பார்களே... அது போல், காரைக் கண்டதும் மக்கள் கூடி விடுவார்கள். சட்டென்று டிலானோ அந்தக் கும்பலைப் பயன் படுத்திக் கொண்டு விடுவார். அவர்களிடம் ஓட்டுக் கேட்டுக் குட்டிப் பிரசாரப் பிரசங்கம் ஒன்றை நிகழ்த்தி விடுவார். கிராம மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். அவர்களை மதித்த முதல் வேட்பாளர் ஆயிற்றே!

இன்னொரு விதத்திலும் டிலானோ முதல் நபர் தான்.

அந்த செனட் தேர்தலில் டிலானோ நகரத்தில் பிரசாரம் செய்யாததால் அவர் நிச்சயம் தோற்று விடுவார் என்றே அனைவரும் நினைத்தனர். ஆனால், அவர் பல்லாயிரக் கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று, செனட் சபை உறுப்பினர் ஆனார். இது நடந்தது 1910 ஆம் ஆண்டு. அது தான் டிலானோவின் முதல் அரசியல் பிரவேசம். அதற்கு மூன்று ஆண்டுகள் முன்பு தான் அவருடைய திருமணம் நடந்திருந்தது. மனைவி பெயர் எலினார். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்கும் பின்னால் ஒரு பெண்மணி இருப்பாள் என்பார்களே அது டிலானோவின் வாழ்வில் முற்றிலும் மெய். எலினார் தன் கணவனுக்குப் பல விதங்களில் உறுதுணையாக நின்றாள்.

1914 ஆம் ஆண்டு. முதல் உலகப் போர் தொடங்கியது. அப்போது டிலானோ கடற்படைத் துறையின் உதவிச் செயலாளராக நியமிக்கப் பட்டார். அப்போது பல நல்ல சீர்திருத்தங்களைச் செய்தார். 1921 ஆம் ஆண்டு முதல் அவருக்குப் போதாத காலம் தொடங்கி விட்டது. அந்த ஆண்டு திடீரென்று அவர் தீராத முடக்குவாத நோயில் படுத்துவிட்டார்.

அதற்காக அவர் வருந்தவில்லை. வழக்கம் போல் உற்சாகமாகச் செயல் பட்டு வந்தார்.

டிலானோவுக்கு ஏற்பட்ட முடக்கு வாதம் பற்றிய செய்தி நாடு முழுதும் பரவியது. லூயி மெட்டனி ஹௌ என்று ஒருவர். கடற்படைத் துறையில் டிலானோவுக்குக் கீழ் பணியாற்றியவர். செய்தி கேட்டதும் ஓடோடி வந்தார். தன் வேலையை ராஜினாமா செய்து விட்டு டிலானோவுடனேயே தங்கி அவருக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்யத் தொடங்கினார்.


ஒரு நாள் டிலானோ வழக்கம் போல் செய்தித் தாளைப் புரட்டிக் கொண்டிருந்தார். அதில் ஒரு செய்தி வந்திருந்தது.

யாரோ ஒரு டாக்டர். ஜார்ஜியாவில் ஒரு கொதி நீர் ஊற்று அற்புத சக்தி உடையது என்றும், அதில் அடிக்கடி குளித்தால் தீர்க்க முடியாத முடக்கு வாத நோயும் குணம் அடைந்து விடும் என்றும் சொல்லியிருந்தார்.

'ஹௌ' துள்ளிக் குதித்தார்.'' உடனே கிளம்புகள் ஜார்ஜியா

''என்ன காளையாரே, கண் சிவக்கக் கோபமாய்ப் பார்க்கறீங்க! பயமா இருக்கே!''

''நீ ஒரு பக்கம்பா. எனக்கு மெட்ராஸ் ஐ!''



வுக்கு.....'' என்று அவரை அங்கு அழைத்துச் சென்று, தங்க வைத்து உரிய முறையில் நீராட்டுவித்தார். அது டிலானோவின் அதிர்ஷ்டமோ அல்லது ஊற்று நீரின் அற்புத சக்தியோ தெரிய வில்லை! அவருடைய நோயில் சற்று குணம் தெரிந்தது. பலம் இழந்திருந்த அவரது கால்களில் மெல்ல மெல்ல சக்தி ஏற்படலாயிற்று. சி கி ச் சை தொடர்ந்தது.

தீராத நோயிலிருந்து அவர் மெல்ல மெல்ல விடுபட்டார். அ ந் த ஏழு ஆண்டுகளிலும் அவர் ஜனநாயகக் கட்சியின் சாதாரண உறுப்பினராக மட்டுமே இருந்தார். 1928 ஆம் ஆண்டுத் தேர்தலில் கட்சி அவரை நியூயார்க் கவர்னர் பதவிக்குப் போட்டியிடக் கேட்டுக் கொண்டது. டிலானோவுக்கு அதுவே பெரிய ஊக்கத்தை அளித்தது. போட்டியிட்டு வெற்றி பெற்றார். மீண்டும் மக்கள் தொண்டு. இரண்டு முறை அவர் கவர்னராகத் தேர்ந்து எடுக்கப் பட்டார்.

1932 ஆம் ஆண்டுத் தேர்தல். டிலானோ அமெரிக்க ஜனாதிபதி பதவிக்கு ஜனநாயகக் கட்சியால் நிறுத்தப் பட்டார். அத்தேர்தலில் அவர் தம்மை எதிர்த்த ஹூவர் என்பவரை 70 லட்சம் வாக்கு வித்தியாசத்தில் வெ ன் று வெள்ளை மாளிகையில் குடியேறினார். அது அமெரிக்க ஜனாதிபதிகள் வாழும் மாளிகை. முதல் வேலையாக, மற்ற அரசாங்க வேலைகளுடன் ஜார்ஜியா கொதி நீர் ஊற்றுக்கு அருகில் சர்க்கார் செலவில் நோயாளிகளுக்கான தங்கு மிட வசதிகளைச் செய்தார். இன்று அது சிறந்த சுற்றுலா மையமாக விளங்கிப் பல நோயாளிகளுக்குப் பயன் பட்டு வருகிறது. டிலானோ தாமும் பல்வேறு அலுவல்களுக்கு இடையே வாரத்துக்கு இரு முறை அங்கு சென்று தங்கி வந்தார்.

ஜனாதிபதியான பிறகும் கூட டிலானோ தாம் நோயிலிருந்து மீள உதவி புரிந்த 'ஹொ'வை மறக்க வில்லை. அ வ ரை யு ம் தம்முடன் வெள்ளை மாளிகைக்கு அழைத்து வந்து விட்டார். அங்கும் 'ஹொ'வின்



தொண்டு தொடர்ந்தது. 1935 ல் 'ஹொ' இறந்துவிட்டார். டிலானோ, அவரது பூத உடலை முழு அரசு மரியாதை களுடன் வெள்ளை மாளிகையிலேயே அடக்கம் செய்து தன் நன்றியையும் மரி யாதையையும் வெளிப்படுத்தினார்.

1936 ஆம் ஆ ண் டு இரண்டாம் முறையாக அவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டு 110 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்று வென்றார். அடுத்து மூன்றாம் தடவையாக 1940 ஆம் ஆண்டில் 50 லட்சம் வாக்குகள் அதிகம் பெற்றார். 1944 ல் நான்காம் முறையாக வும் வெற்றி பெற்றார். இப்படி நான்கு முறை வெற்றி பெற்று ஜனாதிபதியா னவர் அமெரிக்க வரலாற்றில் வேறு எவருமே கிடையாது. இரண்டு தட வைக்கு மேல் இப்பொழுது போட்டி யிட யாரையும் அனுமதிப்பதில்லை.

டிலானோவின் முழுப் பெயர் பிராங்க்ளின் டிலானோ ரூஸ் வெல்ட் என்பது. பிறப்பு 1882 ஜனவரி 30. இடம் நியூயார்க்கில் 'ஹைடு பார்க்' தந்தை ஜேம்ஸ் ரூஸ் வெல்ட். தாய் ஸாரா. அவரது மனைவி பெயர் எலினார். அவர்களுக்கு ஒரு மகள். நான்கு மகன்கள். நிறையப் பேரன் பேத்தி களுடன் நிறைவான வாழ்வு வாழ்ந்து மறைந்தார் அந்த உண்மையான வெற்றி வீரர்!



பூஞ்சோலை என்ற கிராமத்திற்குப் பின்னே ஒரு பெரிய மலை இருந்தது. அந்த மலையில் ஒரு பெரிய குகை இருந்தது. அந்தகுகையில் மூன்று கரடிகள் குடும்பமாக வாழ்ந்து வந்தன. அந்த மூன்று கரடிகளின் பெயர்களும் விசித்தரமாக இருந்தன. அப்பா கரடியின் பெயர் ''அதை பற்றி உனக்கென்ன?'' அம்மாவின் பெயர் ''வாயை மூடு''. மகனின் பெயர் ''தண்டனை'', இவை மூன்றும் காட்டிற்குச் சென்று வேட்டையாடிக் கொண்டு வரும்.

ஒரு நாள் மூன்றும் வேட்டைக்குச் சென்று திரும்பிய போது 'தண்டனை'யைக் காணவில்லை! மற்ற இரண்டும் தண்டனையைத் தேடித்தேடி அலைந்தன. கடைசியில் பார்த்தால் தண்டனையை இரண்டு காவல்காரர்கள் பிடித்து வைத்திருந்தனர். இரண்டும் காவல் நிலையத்திற்கு விரைந்து வந்தன . காவல்காரர் தந்தையைப்

தண்டனை வேண்டும்!

பார்த்து ''உங்கள் பெயர் என்ன?'' என்று கேட்டார். அதற்கு அப்பா கரடி 'அதைப்பற்றி உனக்கென்ன?'' என்றது. காவல்காரர் மீண்டும் மீண்டும் கேட்க அதே பதிலைச் சொன்னது அப்பா கரடி. சலிப்படைந்த அவர், அம்மாவைப் பார்த்து ''அவர்தான் தன் நேரான பெயரைச் சொல்ல மறுக்கிறார். நீங்களாவது உங்கள் பெயரைச் சொல்லுங்கள்'' என்று கேட்டார். அதற்கு தாய்க்கரடி 'வாயை மூடு' என்று தன் பெயரைக் கூறியது. குழம்பிய காவல்காரர் இவர்களை எப்படியாவது அனுப்பினால் போதும் என்று முடிவு செய்து 'உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார் அதற்கு அவை 'தண்டனை வேண்டும்'' என்றன. காவல்காரருக்குப் பைத்தியம் பிடிக்காத குறை! அவர் ஓடியே போய்விட்டார்!

இதற்குள் தண்டனையின் அழுகுரல் கேட்டு இரண்டும் உள்ளே சென்று 'தண்டனை' 'தண்டனை' என்று மகனைக் கட்டிக் கொண்டு தேம்பித் தேம்பி அழுதன. பின் மூன்றும் சந்தோஷமாகக் குகைக்குத் திரும்பின!

- திலீப் குமார், வெள்ளம்பி.

★ உலகிலேயே மிக அதிகமான பற்களை உடையது நத்தை. இதற்கு 1800 மிகச் சிறிய பற்கள் உள்ளன.

- பஞ்சை ஆறு அண்ணாத் துரை.

1800 பற்கள்!





நினைத்தால் நிறம் மாறுமா பச்சோந்தி?

கொய்யா மரக் கிளையில் தலைகீழாக ஊர்ந்து கொண்டிருந்தது ஆண் பச்சோந்தி. நடுப்பகல் நேரம். அதன் நிறம் பச்சையாக இருந்தது.

மீனாவும் நம்பியும் கதவைத் திறந்து கொண்டு தோட்டத்துக்குள் வந்தனர். மீனாவின் கையில் பைனாகுலர் என்ற தொலைநோக்கி இருந்தது. நம்பியின் கையில் உண்டி வில் இருந்தது.

''இந்தக் கொய்யா மரத்தின் பழம் ரொம்ப இனிப்பா இருக்கும். மரத்து நிறையப் பழம் இருக்கு. உனக்கு எந்தப் பழம் வேணும்னு பார்த்துச் சொல்லு. நான் உண்டி வில்லுல அடிச்சுக் கீழே விழ வைக்கிறேன்'' என்று பெருமையாகக் கூறினான் நம்பி.

மீனா பைனாகுலரைக் கண்ணில் வைத்து மரத்தைப் பார்த்தாள்.

''என்ன மீனா! எந்தப் பழம் வேணும்னு கண்டுபிடிச்சுட்டியா? நல்ல பெரிய பழம்தானே?'' என்று ஆவலாகக் கேட்டான் நம்பி.

''நான் கண்டுபிடிச்சது பழத்தை இல்லே, ஒரு பெரிய பச்சோந்தியை. அப்படியே ஓணான் மாதிரியே இருக்கு!'' என்று பைனாகுலரை நம்பியிடம் கொடுத்தாள் மீனா.

''பச்சோந்தியா! எங்கே எங்கே?'' என்று கேட்டபடி பைனாகுலரால் பார்த்தான் நம்பி. அவன் கண்களுக்கு எளிதில் பச்சோந்தி தென்படவில்லை. இவ்வளவுக்கும் அது அதே இடத்தில் தான் இருந்தது.

''கீழேயிருந்து கிளையை எண்ணிக் கிட்டே வா. எட்டாவது கிளை. அதன் வலது வளைவில் ரெண்டாப் பிரியுதே... அங்கே பார்... அதன் அடியில்...'' என்று பச்சோந்தி இருந்த இடத்தை நம்பிக்கு விளக்கி அடையாளம் காட்டினாள் மீனா.

''ஆமாம்! அப்பா எவ்வளவு பச்சையா இருக்கு! இலைக்கும் அதுக்கும் வித்தியாசமே தெரியலையே! பார்த்தா முதலை உடம்பு மாதிரிக் கூட இருக்கே. பாகற்காய் தோல் மாதிரியும் இருக்கு போலிருக்கே!'' என்று வியந்த நம்பி, உண்டி வில்லை எடுத்து பச்சோந்தியைக் குறிபார்த்தான்.

''அண்ணா அண்ணா!'' என்று பதறிய மீனா, ''அது உன்னை என்ன செஞ்சது? வேண்டாம் அண்ணா'' என்று நம்பியின் கையைப் பிடித்து இழுக்க, நம்பியின் குறி தவறி, கல் பச்சோந்தி இருந்த கிளைக்குப் பக்கத்துக் கிளையில் பட்டு, ஓசையை எழுப்பிக் கீழே விழுந்தது.

பச்சோந்தி திடுக்கிட்டு பயந்து போனது. அடுத்த வினாடி அதன் உடல் கருமை நிறம் பெற்றது! அதோடு சுருங்கி மெலிந்தது!

''அடடா! பச்சையா இருந்த பச்சோந்தி இப்போ மெலிஞ்சு கருப்பாப் போயிடுத்தே!'' என்று வியந்தாள் மீனா.

''எனக்குத் தெரியவே இல்லையே!'' என்று தவித்தான் நம்பி.

ரேவதி



''உனக்குத் தெரியாதவரை நல்லது தான். நீதான் உயிரினங்களை வியந்து ரசிக்கத் தெரியாத காட்டுமிராண்டி ஆச்சே'' என்று கடிந்த மீனா, ''வா போகலாம்'' என்று திரும்பினாள்.

''என்ன மீனா? கொய்யாப்பழம் கேட்டே...?''

''கேட்டேன்தான். ஆனால் நீ இப்படிப்பட்டவன்னு தெரிஞ்சிருந்தால், உன்னோடு வந்தே இருக்க மாட்டேன். நீ உயிரினங்களை ரசிக்கத் தெரியாத முரடன்.''


''நீயாக இருந்தால், பச்சோந்தியைப் பார்த்ததும் என்ன பண்ணுவே?''

''பைனாகுலர் வழியாக அதன் நடவடிக்கைகளைக் கவனித்து ரசிப்பேன். இயற்கையின் ஒவ்வொரு உயிரினமும் தனித்தனியான குணங்களைக் கொண்டவை. அவை வியப்பானவை. அவை பற்றி நமக்குத் தெரியாத பல உண்மைகளை நேரடியாக அறிய, இது உதவும். துரதிர்ஷ்டவசமாக நான் இருக்கும் சென்னை ஐந்து மாடிக் குடியிருப்பில், தோட்டமோ செடிகளோ போட வழியே இல்லை. இடமும் இல்லை. இங்கே உங்கள் வீட்டில் இத்தனை பெரிய தோட்டம் இருக்கிறது. எவ்வளவோ உயிரினங்களைக் கவனித்து அவைகளைப் பற்றி அறிந்து கொள்ளும் அரிய வாய்ப்பு உனக்கு இருக்கிறது. ஆனால் நீயோ, பண்பாடோ கலாரசனையோ இல்லாத முரட்டுக் காட்டுமிராண்டியாக இருக்கிறாய்!''

நம்பியின் முகத்தில் குற்ற உணர்வு நிறைந்தது.

''இனிமேல் அப்படி இருக்க மாட்டேன் மீனா. இருவருமாகவே அந்தப் பச்சோந்தியைக் கவனிப்போம்'' என்று சமாதானம் செய்து கொண்டான்.

அபாயம் நீங்கிய உணர்வில் பச்சோந்தி பழைய அளவுக்குத் தன் உடலைச் செய்து கொண்டு மேல் கிளைக்கு ஊர்ந்தது.



''அப்பா! எத்தனை நீளமான விரல்கள். பிடித்துக் கொள்ள வசதியாக எப்படி இருக்கின்றன!'' என்று வியந்தான் நம்பி.

''கண்களைப் பாரேன்! எப்படி உருட்டி உருட்டிப் பார்க்கின்றன!'' என்றாள் மீனா.

இப்பொழுது பச்சோந்தியின் உடல் பழுப்பு நிறமாகி விட்டது!

நடுப்பகல் வெயில் பச்சோந்தியின் உடலில் விழுந்தது. அதன் உடம்பு கருப்பாகியது!

''எப்படித்தான் இது தன் நிறத்தை இஷ்டப்படி மாற்றிக் கொள்கிறதோ தெரியவில்லையே!'' என்று வியந்தாள் மீனா.

''அடிக்கடி தங்கள் கொள்கைகளை மாற்றிக்கிறவங்களை பச்சோந்தின்னு ஏன் கூப்பிடறாங்கன்னு இப்பத்தான் தெரியுது'' என்றான் நம்பி.

காம்பவுண்டு சுவர் அருகே இருந்த சப்போட்டா மரத்தில் தன் உடலைத் தேய்த்து, சட்டை உரித்துக் கொண்டிருந்த பெண் பச்சோந்தியிடம் ஓடி வந்தது ஆண்.

''அடடா! இந்தப் பச்சோந்தி, பாம்பு மாதிரி சட்டை உரிக்கிறதே!'' என்று பைனாகுலரில் பார்த்து வியந்தாள் மீனா.

பச்சோந்தி தன் இஷ்டத்துக்கு நிறத்தை மாத்திக்கும். தண்ணி குடிக்காதுன்னுதான் படிச்சிருக்கேன். இப்படி சட்டை உரிக்கும்னு கேள்விப்பட்டதே இல்லையே!'' என்று வியந்தான் நம்பி.

''இவங்க பேசறதைக் கேட்டியா?'' என்று கேட்டது ஆண் பச்சோந்தி.

''நல்லாக் கேட்டேன். நாம்ப நினைக்கிற போது நம்ப இஷ்டத்துக்கு நம்மால் நிறத்தை மாத்திக்க முடியாது என்பது இவங்களுக்கு எப்படித் தெரியும்? சூழ்நிலையின் குளிர், வெப்பத் தன்மை, நமது பய அதிர்ச்சி உணர்வுகள்தான் நம்மை நிறம் மாற வைக்கின்றன என்ற உண்மை இவர்களுக்குத் தெரியாது. அதோட, கிடைச்சா நாம்ப தண்ணியையும் குடிப்போம். குறிப்பா



இலைகளில் படியும் பனி நீரை நாம்ப விரும்பி நக்கிக் குடிப்போம்கறதும் இவங்களுக்கும் தெரியாது. யாரோ தப்பா சொல்லி வைச்சாங்கன்னா, இவங்களும் அதையே சொல்லிக்கிட்டு இருக்காங்களே! யாரோ சொன்னது சரியா தப்பான்னு பார்க்கணும்னு ஒருத் தனுக்கும் தோணலையே! கண் சிமிட்டு வதைப் போல் நிறம் மாறுவது நமக்கு ஓர் அனிச்சைச் செயல். இது நமது கட்டுப்பாட்டில் இல்லை'' என்றது பெண்.

சட்டை இப்பொழுது முழுவது மாக உரிந்து விட்டது. உரிந்த சட்டை வெண்மையான காற்றாடிக் காகிதம் போல சுருண்டு கிடந்தது!

சப்போட்டா மரத்தில் ஏதோ நிழ லாடியது. வட்டமிட்ட கழுகு ஒன்று, பெண் பச்சோந்தியைக் குறி வைத்துத் தாவிப் பறந்து வந்தது. ஒரே தாவல்! பெண் உ ட லை க் கருப்பாக்கிக் கொண்டு பக்கத்தில் இருந்த புதருக்குள் மறைய, உரிந்து கிடந்த சட்டையைக் கால்களால் கௌவிக் கொண்டு கழுகு பறந்தது.

கழுகு பறந்து போனதும் இரண் டும் வெளியே வந்தன. மரத்தில் ஏறி வசதியாக ஒரு கிளையில் வாலைச் சுருட்டிக் கொண்டு தலைகீழாக அடுத்த கிளைக்கு வந்தன.

அருகே உள்ள கிளைக் கணுவில் ஒரு தத்துக் கிளி வந்து அமர்ந்திருந்தது. ஒரு பக்கக் கண்ணால் நம்பி,மீனாவைக் கவனித்தபடியும், இன்னொரு பக்கக் கண்ணால் தத்துக் கிளியைக் கவனித்த படியும் இருந்த பெண், வாயைத் திறந்து நாக்கை நீட்டியது. பொம்மை களில் உள்ள ஸ்பிரிங் போல் நாக்கு முப்பது செ.மீ. நீளம் நீண்டது! நுனியில் இருந்த கதை போன்ற பகுதி தத்துக் கிளியின் மேல் பட்டு அதை ஒட்ட வைத்துக் கொள்ள, நாக்கை உள்ளே இழுத்துத் தன் சாப்பாட்டை முடித்துக் கொண்டது பெண்! ஆணுக்கு இதே போல் ஒரு கரப்பான் பூச்சி கிடைத்தது!

திடீரென்று புதரில் ஏதோ சல சலப்பு. இரண்டும் தலையைத் தூக்கிப் பார்த்தன. உடல் கருமையாகி விட் டது!

''பாம்பு! கத்தாளிச் செடிக்குக் கீழே போகிறது'' என்றது ஆண்.

''அங்கதாங்க நான் குழி தோண்டி முட்டையிட்டிருக்கேன். இப்பத்தான் மூன்று மாசம் ஆச்சு. இன்னும் ஒரு மாசம் போனா பொரிஞ்சுடும். அதுக் குள்ள இந்தப் பாம்புக்கு இரையாகி டும் போல இருக்கே!'' என்று துக்கம் தொண்டையடைக்கக் கூறியது பெண்.

''போன தடவை, அந்தக் கண்டா முண்டா அறைக்குக் கீழே இருக்கிற வங்குக்குள்ள பத்து முட்டை இட்டேட. இதே பாம்புதான் உடைச்சுக் குடிச் சிட்டுப் போச்சு. அதுனாலேயே இந்த முறை இடத்தை மாத்தினே. அப்படி யும் இந்தப் பாம்பு விடலையே!'' என்று வருந்தியது ஆண்.

கீழே நிழலாடியது. இரண்டும் தாவி புதருக்குள் மறைய, ஏமாந்த கழுகு பாம்பைக் கௌவிக் கொண்டு வானில் பறந்தது!

அறிவியல் உண்மைகள்

★ பச்சோந்தி, பல்லி குடும்பத்தைச் சேர்ந்தது. தரையில் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும். முட்டைகள் பொரிய 4 முதல் 10 மாதங்கள், இடத்தின் வெப்ப நிலைக்கு ஏற்ப ஆகும்.

★ தோலில் உள்ள கண்ணறைகள், நிற அணுக்களால் ஆனவை. ஒளி ஊடுருவிகள். வெப்பம், ஒளி ஊடுருவும் போது இவை விரிந்து சுருங்குகின்றன. கோபம், ஆத்திரம், பயம் ஆகியவையும் இதை விரிந்து சுருங்க வைக்கின்றன. உடனே நிறமாற்றம் நிகழ் கிறது. சூழ்நிலையின் நிறம் இதை பாதிப்பதில்லை. வெப்பமும் குளிர்ந்த தன்மையுமே நிறமாற்றத்தை நிகழ்த்து கின்றன. இந்த மாற்றம் கண்ணிமைப்பது போல் இயற்கையாக நிகழ்கிறது. இது பச்சோந்திக்கு இயற்கை அளித்துள்ள பாது காப்பு.

★ தாக்க வரும் விலங்குகளைப் பயப் படுத்த சுருந்த உடலைக் காற்றால் உப்ப வைத்து பெரிதாகக் காட்டி 'உஸ்'ஸென்று சீறிக் கலங்க வைக்கும்.

அப்படி நடக்கும் என்று வசந்தா கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை.

பேருந்து நிலையத்துக்கு வந்த உடனேயே அவளுடைய தம்பி மணி வேலன் சொன்னான். ''வசந்தா, பணம் பத்திரம்... பஸ் ஸ்டாண்டில கவனக் குறைவா இருந்தோம்னா பணமும் பொருளும் பறி போயிடும்.... எதையும் வேடிக்கை பார்த்துகிட்டு நிற்காதே...''

அவன் சொன்னபடி கவனமாக இருந்தாள். அவனுக்கு அருகிலேயே நின்றாள். பேருந்து வந்ததும் ஏறி அமர்ந்து கொண்டாள். சீட்டும் அவள் தான் வாங்கினாள். எச்சரிக்கையாக அதைப் பையில் வைத்துக் கொண்டாள். ஆனால் வேறொரு விஷயத்தில் அவள் கவனமில்லாமல் இருந்து விட்டாளே! பாளையம் தாண்டியதும் பையிலிருந்த சீட்டை வெளியே எடுத்தாள். கண் இமைக்கும் நேரத்தில் அது அவள் கையிலிருந்து நழுவிப் போயிற்று. அடித்துக் கொண்டிருந்த காற்று அதைப் பறித்துப் போகும் என்று அவள் நினைக்கவில்லை. வெறும் சீட்டாக இருந்தாலும் பரவாயில்லை. நடத்துநரிடம் சொல்லிச் சமாளித்துக் கொள்ளலாம். அவர் தர வேண்டிய பாக்கித் தொகையை எழுதிக் கையெழுத்துப் போட்டிருக்கிற சீட்டாயிற்றே அது! அதைத் தவறவிட்டு இப்போது என்ன செய்வது?

அவள் குழம்பிப் போயிருந்தாள். பேருந்து ஓடிக் கொண்டிருந்தது. மணி வேலன் அங்கே வந்தான்.

''வசந்தா சீட்டைக் கொடு... கண்டக்டரிடம் பாக்கியை வாங்கிக் கொள்ளலாம்....''

அவன் இரண்டு வரிசை முன்னால் தள்ளி உட்கார்ந்திருந்ததால் அவள் சீட்டைத் தவறவிட்டது அவனுக்குத் தெரியாது. அவள் கண்களைக் கசக்குவதைப் பார்த்தான்.

''அக்கா... ஏன் அழுவறே?''

அவன் ஒன்றும் புரியாமல் விழித்தான்.

''என்னக்கா?''

''அந்தச் சீட்டு என் கவனக் குறைவால் பறந்து போயிடுச்சு... பத்து ரூபா கொடுத்தேன். ரெண்டு டிக்கெட்டுக்கு மூணுரூபா போக ஏழு ரூபா வரணும். இப்போ என்ன செய்யறது தெரியலியே....''

அவள் தேம்பத் தொடங்கினாள்.

காற்றில் ஏழு ரூபாய்

பூதலூர் முத்து



''சரி நீ அழாதே... ஏதாவது வழி தெரியுதான்னு யோசிக்கலாம்.''

அவளுக்கு ஆறுதல் கூறிய அவன் அவளுடைய ஸீட்டுக்குக் கீழேயும் அதற்கு முன்னால் நான்கைந்து வரிசைகளுக்குக் கீழேயும் அந்த சீட்டைத் தேடினான். பட்டாணித் தோலும் கடலைத் தோலும்தான் கிடந்தன. ஏமாற்றத்தோடு நிமிர்ந்தான்.

பயணி ஒருவர் கேட்டார் : ''என்ன தம்பி தேடறே?''

விவரத்தைச் சொன்னான்.

''காத்து எப்படி அடிக்குதுன்னு பார்த்தியா? வெளியே பறந்திருக்கும். எதுக்கும் தேடிப்பார்.''

இன்னும் இரண்டு வரிசை தேடிப் பார்த்தான். ஊஹூம். பலனில்லை.

நடத்துநரிடம் சென்றான். சீட்டு பறந்து விட்டதைச் சொன்னான். பரவாயில்லை தம்பி... விழுப்புரம்தானே போய் உட்கார்...''

''அதிலே பின்புறம் ஏழு ரூபாய் சில்லறை பாக்கின்னு நீங்க எழுதிக் கொடுத்திருக்கீங்க...''

''அப்படீன்னா சீட்டு அவசியம் வேணும் தம்பி...! சீட்டு இருந்தாத்தான் பாக்கியைத் தர முடியும்.''

அந்தக் குரலில் ஒரு கண்டிப்பு இருந்தது.

பழையபடி வசந்தா உட்கார்ந்திருந்த இடத்திற்கு வந்தான். அவளிடம் எதுவும் சொல்லவில்லை.

அவள் அரற்றிக் கொண்டிருந்தாள்.

''அத்தை பிரியமா கொடுத்த பணம். ஆளுக்கு அஞ்சு ரூபா எடுத்துக்கச் சொன்னாங்க. டிக்கெட்டுக்குத் தனியா பணம் கொடுத்தாங்க, பணத்தை மாத்தினா உடனே பிரிச்சு எடுத்துக்கலாமேன்னு பத்துரூபாயை மடத்தனமா நான்தான் கொடுத்தேன்...''

''அவ்வளவு அவசரமா அந்தப் பணத்தை நான் உன்கிட்ட கேட்டேனா? வீட்டுக்குப் போயி நிதானமா மாத்தியிருக்கலாம், அல்லது அப்படியே அம்மாகிட்ட கொடுத்திருக்கலாம். சரி அழாதே... டிக்கெட்டை எப்படியாவது கண்டுபிடிக்கிறேன்.''

அவளுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. ஊர் வந்துவிட்டால் உடனே பேருந்து புறப்பட்டு விடும். அதற்கு முன்பாகவே பாக்கியை வாங்கிக் கொள்ளலாம் என்று பையிலிருந்து எடுக்கப்போய் இப்போது எவ்வளவு பிரச்னை! போனால் போகட்டும் என்று விட்டுவிட அவர்கள் குடும்பம் பணக்காரக் குடும்பமா என்ன?

மணிவேலனுக்குக் கொடுத்த ஐந்து ரூபாய் போக மீதி ரூபாயில் என்னென்ன வாங்கலாம் என்று அவள் திட்டமிட்டுக் கொண்டிருந்தாள். கழுத்துக்கு ஒரு மணி வாங்கலாம் என்று முதலில் நினைத்தாள். அதை விட அடுத்த வகுப்புக்குத் தேவையான இரண்டு பழைய பாடப்



புத்தகங்களை வாங்கி விடலாம்... அம்மாவுக்குச் சுமை குறையும் என முடிவு செய்தாள். இப்போது அவளுடைய தேர்கையும் போய் மணிவேலனுக்குச் சேரவேண்டியதும் பாழாகி விட்டது! பாஸ் பண்ணியதற்காக அத்தை மகிழ்ச்சியோடு கொடுத்த பணம். இப்படியா போகவேண்டும்? எண்ணம் அவள் உள்ளத்தை வருத்தியது.

இப்போது மணிவேலனுக்கருகில் ஓர் இடம் காலியாக இருந்தது. அவன் அங்கே உட்கார்ந்து கொண்டான். சிந்தித்தால் வழி கிடைக்கும். ஒரு கதவு மூடினால் இன்னொரு கதவு திறக்கும். அவனுடைய ஆசிரியர் அன்பழகன் சொன்னது அவன் நெஞ்சில் பதிந்திருந்தது. ஒரு நிமிடம் நிதானமாக யோசித்தான். அதே காற்று இப்போதும் அடித்துக் கொண்டிருந்தது. அவனுடைய முகத்தில் ஒரு தெளிவு வந்தது.

''மணி, இன்னும் பதினைஞ்சு நிமிஷத்திலே ஊர் வந்திடுமே...?''

வசந்தாவின் குரலில் கவலை தெரிந்தது.

''நீ கவலைப்படாதே. பத்து நிமி



ஷம் போதும்.. அதுக்குள்ள ஒரு முடிவு தெரிஞ்சிடும்.''

''எப்படி?''

அவள் ஆர்வம் பொங்கக் கேட்டாள்.

அவன் பையிலிருந்து ஒரு தாளை எடுத்து பயணச்சீட்டைப் போல நான்கைந்து துண்டுகள் கிழித்தான்.

டிக்கெட்டைத் தேடச் சொன்னால் துண்டு கிழித்துக் கொண்டிருக்கிறானே! அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவன், சோதனைகள் என்ற பெயரில் வீட்டில் சின்னச் சின்ன பொருள்களாகச் சேர்த்து எதையாவது செய்து கொண்டே இருப்பான். இங்கு என்ன செய்யப் போகிறானோ?

''வசந்தா, இந்தத் துண்டுகளை இப்போது என் கையிலிருந்து நழுவ விடறேன்'' அடிக்கிற காத்தில் இந்தத் துண்டுகள் எப்படிப் போவுதுன்னு கவனி....''

முதல் தாளைப் பறக்கவிட்டான். அப்போது காற்று சற்றுப் பலமாக வலது பக்க திறப்பு வழியாக வெளியே பறந்தது.

''டிக்கெட்டும் இப்படியேதான் போயிருக்கணும்....''

''வசந்தா, பொறுமையா இரு...''

''ஊர் நெருங்கிக்கிட்டிருக்கு....''

அவன் மறுபடி யோசித்தான். தெளிவுகூடியது. ''நீ டிக்கெட்டை நழுவ விட்டபோது இவ்வளவு காத்து அடிச்சிருக்க முடியாது. பாளையம் தாண்டிய கொஞ்ச தூரத்திலதானே நீ தவற விட்டதா சொன்னே? அங்கே ரோட்டில ரெண்டு பக்கமும் அடர்த்தியா மரங்கள். இங்கே வெட்டவெளி. அதனால காத்து அதிகம். துண்டுத்தாள் வெளியே போயிடுச்சு... இப்போ கவனி.''

பேருந்து இப்போது சென்ற பகுதியில் இருமருங்கும் மரங்கள் இருந்தன. ஒரு துண்டுத் தாளைப் பறக்கவிட்டான். அது எந்தப்பக்கம் போகிறது என்று வசந்தா உன்னிப்பாகக் கவனித்தாள். பேருந்தின் நடைப் பகுதியில் பறந்து முன்பகுதியின் வலப்பகுதிக்குச் சென்றது. அவனிடம் சொன்னாள்.

அவன் உடனே ஓட்டுநர் அமர்ந்திருந்த இடத்திற்குப் பின்புறம் இருந்த முதல் வரிசைக்குச் சென்றான். ஸீட்டின் கீழே குனிந்து மூலையைப் பார்த்தான். அங்கே நாலைந்து பயணச் சீட்டுகள், தாள்கள் கிடந்தன. எடுத்துப் பார்த்தான். முகத்தில் மலர்ச்சி தோன்றியது. அங்கிருந்தபடியே ''வசந்தா ஏழு ரூபாய் கிடைச்சிடுச்சு!'' என்று ஒலி எழுப்பினான்.

''பாம்புக்கு எந்த் வியாதி வரும்?''
'' 'புற்று' நோய்.''

- ஆர். மகாதேவன்,
திருநெல்வேலி - 6.





''எங்க பெண்ணுக்குக் குழந்தை மனசுங்க.''

''அதுக்காக பெண் பார்க்க வந்தவங்க பாடச் சொன்னா டிவிங்கிள்... டிவிங்கிள் லிட்டில் ஸ்டாரா பாடறது?''

கே. திலகம், குந்தா.



பெட்டி நிறைய நோட்டு!

பட்டென்று அடித்த பந்து எதிர் வீட்டுக் கண்ணாடி ஜன்னலை உடைத்துக் கொண்டு உள்ளே போக, கதவுகள் திறக்கப்பட ராமு, சோமு, கோபு, ராஜா எல்லோரும் பயந்தனர் ஒரு கணம்.

பிறகு சுதாரித்துக் கொண்டு பந்து மட்டையைத் தூக்கி எறிந்துவிட்டு எதுவுமே நடக்காதது போல மௌனமாய் நின்றனர்.

எதிர் வீட்டு ஏகாம்பரம் மாமா ரொம்பப் பொல்லாதவர். கோபக்காரர். போலீஸ் அதிகாரி அவர்.

சோமு, கோபு, ராஜா மூவரும் ராமுவிடம் சொன்னார்கள். ''டேய் ராமு, ஏகாம்பரம் சார் வந்து யார் பந்தை வீசிக் கண்ணாடி ஜன்னல்களை உடைச்சதுன்னு கேட்டா எங்களுக்குத் தெரியாதுன்னு சொல்லிடணும். இல்லைன்னா...'' என்று மிரட்டினார்கள்.

ஏகாம்பரம் வெளியே வந்து பையன்களைப் பார்த்தார். பையன்களில் எவனோதான் இந்த வேலையைச் செய்திருக்க வேண்டும் என்று ஊகித்துக் கேட்டார்.

சோமு, கோபு, ராஜா மூவரும் ''எங்களுக்குத் தெரியாதே சார். நாங்க இப்பத்தான் இந்தப் பக்கமே வந்தோம்'' என்று ஒரேயடியாகச் சாதித்தனர்.

அவர்கள் கையிலும் பந்து அடிக்கும் மட்டையில்லை. நேரிலும் பார்க்காமல் எப்படி இவர்களை இதற்கு மேல் கண்டிப்பது என்று தயங்கினார் ஏகாம்பரம்.

அப்போது ராமு மட்டுமே ''சார் எங்களை எல்லாம் மன்னிச்சிடணும். இங்கே நாங்கதான் விளையாடினோம். ஆனா, பந்தை அடிச்சு உங்க வீட்டு கண்ணாடி ஜன்னல்களை உடைச்சது நான் தான்'' என்றான்.

''நீயா..! ஏண்டா இப்படி செஞ்சே'' என்றார் ஏகாம்பரம்.

''வேணும்னு செய்யலை சார். என்னவோ தவறு நடந்து போச்சு. எங்களை... இல்லை இல்லை என்னை மன்னிக்கணும் நீங்க...'' என்றான் ராமு.

''பின்னே ஏண்டா உன் நண்பர்கள் எல்லாம் நாங்க விளையாடவே இல்லைன்னு பொய் சொல்லணும்?''

கௌசல்யா ரங்கநாதன்

''என்னைக் காப்பாத்தணுமேன்னு தான்.''

''பொய் சொல்றது எவ்வளவு பெரிய தப்புத் தெரியுமாடா!''

''தப்புத்தான் சார். அதனால்தான் நீங்க தண்டனை கொடுத்தாலும் சரின்னு ஒத்துக்கிட்டேன்'' என்றான் ராமு.

''இங்கே ஆரம்பிக்கிற பொய்... நாளைக்கு ஸ்கூலில் ஏண்டா லேட்டுனா பொய் சொல்வீங்க. பரீட்சையில் ஏண்டா மார்க்கு கம்மின்னு உங்கப்பா கேட்டா, வாத்தியார் பாடமே நடத்தலை... வேணும்னே மார்க்குகளை குறைச்சுப் போட்டுட்டார்ன்னு சொல்வீங்க! வேலைக்குப் போன பின்பும் பல பொய்கள் சொல்வீங்க. ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய்கள் சொல்லணும். பொய்யிலிருந்துதான் களவு சூது எல்லாமே ஆரம்பமாகும்.''

''தப்புத்தான் சார் என் நண்பர்கள் பண்ணினது. அதுக்காக நான் மன்னிப்புக் கேட்டுக்கிறேன் என் நண்பர்கள் சார்பில்'' என்றான் ராமு.

''சரி சரி போங்க... நீ உண்மை பேசினதால்தான் உன்னை எனக்குப் பிடிச்சுது. போ! பார்த்து விளையாடு'' என்று சொல்லி விட்டுப் போய் விட்டார் ஏகாம்பரம்.

ஏகாம்பரம் தலை மறைந்ததும் நண்பர்கள் பிலுபிலுவென்று பிடித்துக் கொண்டார்கள் ராமுவை.

''பெரிய அரிச்சந்திரன்னு நினைப்பாடா உனக்கு... மகாத்மா காந்தின்னு நினைப்பா...?'' என்றனர்.

''என்ன ஆனாலும் சரி, பொய் சொல்ல மாட்டேண்டா...''

''பொய் சொல்லாம இந்த உலகத்தில் பிழைக்கவே முடியாதுடா.''

பொய் சொல்லாம உண்மையை மட்டுமேதான் பேசிட்டு இருப்பேன்னு நீ சொன்னா, வாழ்க்கையில ரொம்பக் கஷ்டம்தான் அனுபவிக்க வேண்டியிருக்கும்' என்றனர்.

''சரிடா பரவாயில்லை..'' என்றான் ராமு.

''பள்ளியில் ஏண்டா ராமு ஹோம் வொர்க் செய்யலை'' என்றார் டீச்சர்.

''தூங்கிட்டேன் டீச்சர்...''

''ஏண்டா பிழைக்கத் தெரியாதவனாக இருக்கே. அம்மா, அப்பா ஏதாவது வேலை சொன்னாங்க, அதனால் செய்யலை. உடம்புக்கு முடியாம போயிடுத்து. அதனாலதான் செய்யலைன்னு சொல்லக் கூடாது...? அப்பத்தான் நம்புவாங்க,'' என்றான் நண்பன்.

''ஒவ்வொரு தவறுக்கும், ஏதாவது காரணத்தைக் கண்டுபிடிச்சுச் சொல்ல நான் தயாராயில்லை. அதை விட உண்மையை ஒளிக்காம சொல்லிடறேன். அதனால் டீச்சர் என்னைத் தண்டிக்கட்டும்.''

ஆனால் டீச்சர், ''டேய் ராமு உன் நேர்மையைப் பாராட்டறேன். உண்மையை மறைக்காம நீ சொன்னே. அதனால் உன்னை மன்னிச்சிடறேன்'' என்றார்.

மற்ற பையன்களுக்குத் தண்டனை வழங்கினார்.

அன்று இரவு ராமுவின் வீட்டுக்குத் திருட வந்த திருடர்கள், வீட்டுக்குள்



புகுந்து பொருள்களைக் கொள்ளையிட முயன்ற போது, ராமுவின் தந்தை போட்ட கூச்சலில் தெருவே விழித்துக் கொண்டது. திருடர்கள் ஓடி விட்டனர். போகும் போது அவர்கள் ஒரு பெட்டியை விட்டுச் சென்றனர். அந்தப் பெட்டி நிறைய ரூபாய் நோட்டுக்கள்!

பெட்டியை 'சரே'லென்று பரணில் மறைத்து விட்டார் ராமுவின் தந்தை. ''அப்பா, அது நம்ம பணம் இல்லே. போலீசாரிடம் ஒப்படைத்து விடுங்கள்'' என்று கெஞ்சினான் ராமு. அவர் கேட்கவில்லை.

''ஒரு வாரம் ஓடியது.'' நீங்கள் கள்ள நோட்டை விநியோகிக்கும் ஏஜென்டாக இருக்கிறீர்கள் என்று எங்களுக்குப் புகார் வந்திருக்கு. 'வீட்டை சோதனையிடப் போகிறோம்'' என்று சி.ஐ.டி. பிரிவினர் ராமுவின் வீட்டைச் சோதனையிட திடீரென்று வந்து இறங்கினார்கள். அவர்களுக்குத் தலைமை வகித்தவர் எதிர் வீட்டு ஏகாம்பரம். அவர் மாறு வேஷத்தில் பணியாற்ற வந்துள்ள சி.ஐ.டி. அதிகாரியாம்!

வீடு சோதனையிடப்பட்டது. திருடன் விட்டு விட்டுப் போன ''பெட்டி நிறைய நோட்டு'' சிக்கியது! ராமுவின் அப்பாவுக்கு விலங்கு மாட்டி இழுத்துக் கொண்டு போக வேண்டிய நேரத்தில், ராமு பள்ளியிலிருந்து திரும்பினான்.

''திருடன் விட்டு விட்டுப் போன பெட்டி அது! அவர் அதை மறைத்தது உண்மைதான். நான் என்ன கூறியும் கேட்க வில்லை. அதற்காக அவரை நீங்கள் தண்டிக்கலாம். ஆனால், கள்ள நோட்டுக்கும் அவருக்கும் தொடர்பே இல்லை'' என்று ராமு சொன்னதை சி.ஐ.டி. ஏகாம்பரம் அப்படியே ஏற்றார். ராமுவின் உண்மையான குணத்தை அறிந்தவர் அல்லவா? உண்மையே கூறும் வழக்கமுடைய அவனது சாட்சி அவன் தந்தைக்குக் குறைவான தண்டனையை வாங்கித் தர உதவியது!



கேட்கட்டுமா டாக்டர்?



டாக்டர். கு. கணேசன்

★ தி. சுரேஷ்குமார், பெருங் களத்தூர்.
★ பொன். சுஜீவன், அமைந்தகரை.

? 'மெட்ராஸ்-ஐ' என்கிற நோய் எதனால் வருகிறது டாக்டர்? இதனைத் தவிர்க்க வழி கூறுங்கள்.

இது நம்ம ஊரின் பெயர் கொண்ட நோய் என்பதால் இதைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது அவசியமே! 'மெட்ராஸ்-ஐ' எனப் படும் கண் நோய் ஒருவகை வைரஸ் கிருமிகளின் தாக்குதலால் வருகிறது. இது ஒரு தொற்றுநோய். வீட்டில் ஒரு வருக்கு வந்து விட்டால் அடுத்த இரு தினங்களில் வீட்டிலுள்ளோர் அனைவருக்குமே பரவி விடும். இந் நோய் வருவதைத் தவிர்க்க சுத்தத்தைக் கடைப் பிடிப்பதுதான் சிறந்த வழி. முதலில் கண் நோய் உள்ளவர்களைத் தனிமைப் படுத்த வேண்டும். அவர்களோடு சில தினங்களுக்கு நெருங்கிப் பழகக் கூடாது. கண் நோயாளிகள் உபயோகித்த துவாலை, கைக்குட்டை, சோப்பு, பற்பசை போன்வற்றை மற்றவர்கள் தொடக் கூடாது. பொதுவாக கண் நோயாளிகள் தொட்டுப் பயன் படுத்தும் எந்தப் பொருளையும் மற்றவர்கள் தொடாமல் இருந்தால் போதும். மெட்ராஸ்-ஐ வரவே வராது!

★ ப. தினேஷ்குமார், சென்னை -7
★ ஆர். ஜெயலட்சுமி, வாழப்பாடி.


? வாயினால் மூச்சு விடுவது கெடுதலா, டாக்டர்? எப்படி?

கெடுதல்தான். மூக்கினால் சுவாசிக்கும் போது, மூக்கிலுள்ள சிலேட்டுமப் படலமும், முடிகளும் காற்றிலுள்ள தூசிகளைத் தடுத்து விடும். வாயினுள் அப்படியேதும் அமைப்பு இல்லாததால் தூசுகள் நேரடியாகத் தொண்டைக்குச் சென்று தொல்லைகள் கொடுக்கும். இப் பழக்கம் நீண்ட காலம் நீடித்தால் தெற்றுப் பல் வந்து விடும்; வாய் துர்நாற்றம் எடுக்கும்; தொண்டையில் அடிக்கடி புண் உண்டாகும்; பல், ஈறு சம்பந்தப்பட்ட நோய்கள் வரக்கூடும். எனவே, மூக்கினால் மூச்சு விடுவதே நல்லது!

★ ஆர். சூரியநாராயணன், ஈரோடு-
★ ஜி. வெங்கி, குத்தாலம்.

? தொந்தி எதனால் உண்டாகிறது? இதைக் குறைக்க என்ன வழி?

அளவுக்கதிகமாக உணவை உண்டு, பணி ஏதும் செய்யாமல் சோம்பிக் கிடந்தால் தொந்தி உண்டா கிறது.



நாளமில்லாச் சுரப்பிகளின் மிகையான பணி காரணமாகவும் தொந்தி உண்டாகும். பாரம்பரியம், மரபு நுட்ப அணுக்களின் அம்சம் போன்றவையும் தொந்தி உண்டாக வழி அமைக்கும். தொந்தியைக் குறைக்க விரும்புவோர் அளவோடு உண்ண வேண்டும்; அடிக்கடி உண்பதைத் தவிர்க்க வேண்டும். கொழுப்புச் சத்து நிறைந்த எண்ணெய் வஸ்துக்களையும் நெய், வெண்ணெய், தயிர், பாலாடை, முட்டை போன்றவற்றையும் குறைத்துக் கொள்ள வேண்டும். அசைவ உணவுகளை அறவே ஒதுக்க வேண்டும். தினமும் குறைந்தது அரை மணி நேரமாவது உடற்பயிற்சிகளைச் செய்ய வேண்டும். சில வகை யோகாசனப் பயிற்சிகள் கூட தொந்தியைக் குறைக்க உதவுகின்றன. முயன்றால் பலன் கிடைக்கும்.

★ **சே. காமராஜ், பெரும்பலூர்.**

? தலையில் பொடுகு வருவதற்கு என்ன காரணம் டாக்டர்? இதைப் போக்க வழி சொல்லுங்கள்.

பொடுகு (DANDRUFF) என்பது தலைமுடியைப் பாதிக்கும் ஒரு வியாதி. கடுகு அளவில் தலைமுடியின் அடிப்பாகத்தில் வெண்மையாக இருக்கும் பொருள்தான் பொடுகு. மனிதனின் தோலில் கெரடின் எனும் பொருள் அடிக்கடி தோன்றி நாளடைவில் விழுந்து விடும். சிலருக்கு இவை விழாமல் ஒட்டிக் கொண்டு கட்டியான பொருளாக மாறி 'பொடுகு' எனப் பெயர் பெறுகிறது. இதனைத் தவிர்க்க தலைமுடியை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும். தினமும் தலைக்குக் குளிப்பதோடு, வாரத்திற்கு ஒரு முறை எண்ணெய்க் குளியலோ அல்லது ஷாம்புக் குளியலோ மேற்கொண்டால் பொடுகுத் தொல்லை வரவே வராது.

★ **ஜி. கே. வெண்ணிலா, சைதாப்பேட்டை.**


? என் அம்மா அடிக்கடி எனக்கு விளக்கெண்ணெய் குடிக்கக் கொடுக்கிறார்கள். அது எனக்குப் பிடிக்கவில்லை. விளக்கெண்ணெய் குடிப்பதால் என்ன நன்மை டாக்டர்?


விளக்கெண்ணெய் குடிப்பதால் மலச்சிக்கல் வராது. இந்த ஒரு நன்மையைத் தவிர வேறு எந்தப் பயனும் கிடையாது. இன்னும் சொல்லப் போனால் அடிக்கடி விளக்கெண்ணெய் குடித்தால் அது உடம்புக்குக் கெடுதலைத்தான் செய்கிறது. குடல் இயக்கத்தில் கோளாறு வரும். உணவு சரியாக ஜீரணமாகாது. வயிற்றுப் போக்கு உண்டாகும். ஆக, அடிக்கடி விளக்கெண்ணெய் குடித்தால், அது ஆபத்தில் தான் முடியும்.

★ **கு. கருணாநிதி, சோழன் மாளிகை.**

? வெங்காயம் நறுக்கும் போது கண்களிலிருந்து கண்ணீர் வருகிறதே, ஏன்?

வெங்காயத்தை நறுக்கும் போது அதில் பல வேதிவினைகள் நடைபெறுகின்றன. இத் தொடர்வினைகளின் போது உண்டாகும் புரோபீன் சல்பீனிக் அமிலத்தில் உள்ள அமில நைட்ரஜன் ஆவியாகக் கூடிய புரோபென்சைல் ஆக்சைடைத் தோற்றுவிக்கிறது. இந்த ஆவியே கண்களில் பட்டு வெங்காயம் நறுக்கும் போது கண்களில் கண்ணீர் வரக் காரணமாக அமைகிறது.







புத்தாண்டே வருக!

புத்தாண்டே! புத்தாண்டே! வருக! வருக!
புவியெங்கும் புதுப்பொலிவைத் தருக! தருக!
தித்திக்கும் தேன்பாகாய் வருக! வருக!
தெவிட்டாத நல்லமுதைத் தருக! தருக!


இத்தரையில் மாந்தரெல்லாம் எல்லாம் பெற்று
இன்பமுடன் வாழ்ந்திடவே வருக! வருக!
எத்திக்கும் புகழ்மணக்க வருக! வருக!
எல்லோர்க்கும் நிறைவினையே தருக! தருக!


இல்லாமை இல்லையென ஆக்க வருக!
எல்லோர்க்கும் எல்லாமே தருக! தருக!
கல்லாமை இல்லாமை ஆக்க வருக!
கண்ணிரண்டை எல்லோர்க்கும் தருக! தருக!


உள்ளத்தால் பொய்யாது ஒழுகு கின்ற
உயர் குணத்தை உவந்தளிக்க வருக! வருக!
தள்ளாமை, தளராமை இல்லா தாக்கி
தளர்வறியா மனத்தினையே தருக! தருக!


- அ. சுப்பையன், செட்டிகுறிச்சி.





'புத்திசாலி பிழைப்பான்'
கருத்து எம்.கே. வோங்க வேல்.
அமைப்பு : ரே ..
படம் : ரஜினி
ஊரில் நீ எங்கேயும் சுற்றலாம். காட்டுக்கு மட்டும் போகாதே!
போனா என்ன வாகும் அம்மா!
காட்டு மிருகங்கள் உன்னைத் தின்று விடும்!
ஆனா புத்தி இருந்தால் எதுக்கும் அஞ்ச வேண்டாம்!
அம்மாவும் இல்லை.. தம்பி தங்கை-களும் இல்லை.. காட்டுக்கு ஓடிப் பார்ப்போம்!
1


மறுநாள் காட்டுக்குச் சென்ற குட்டிப் பன்றி மழையில் மாட்டிக் கொண்டது -
ஒதுங்க ஓர் குகைக்குள் நுழைந்தது - அங்கே சிங்கராஜா!
?!
மழைக்கு இங்கே தங்கிக்க-லாமா?
பன்றிப்! பதரே! சிங்க ராஜா! நான்!
என் குகைக்குள் வந்து என்னிடமா தங்க அனுமதி கேட்கிறாய்! இரு உன்னை...
2


நீங்கதான் சிங்கராஜாவா! நான் பார்த்த--தில்லே. காட்டுக்கு இப்பத்தானே வரேன்...
எதுக்கு வந்தே?
குட்டிப் பன்றி யோசித்தது -
அம்மா சொன்னதைக் கேட்காது இங்கே வந்து மாட்டிக் கொண்டேனே!
எப்படித் தப்பலாம்? புத்தி இருந்தால் பிழைக்க--லாம்னு அம்மா சொன்னாளே..
சிங்கராஜா! நகரில் நெருக்கடி அதிகம். அதனால் காட்டுக்கு வரலாமான்னு பார்க்க அம்மா என்னை அனுப்பினாள்..


எனக்கு முப்பது தம்பி தங்கை, நாற்பது அக்கா அண்ணன்கள் ஒன்னா இருக்கோம்!
குட்டிப் பன்றி கூறியதைக் கேட்ட சிங்கத்துக்கு ஒரே மகிழ்ச்சி—
இத்தனை பெரிய பன்றிக் குடும்பம் காட்டுக்கு வந்தால் எனக்கு உணவுப் பஞ்சம் தீரும்! இதைக் கொல்லாது அனுப்பி வர வழைக்கணும்!
சிங்கராஜா குட்டிப் பன்றியிடம்—
காட்டில் இட நெருக்கடி இல்லை. குடும்பத்தோடு என் குகை யிலேயே இருக்கலாம்!
மகிழ்ச்சி சிங்க ராஜா! போய் அழைத்து வரேன்!
தப்பி ஓடியது குட்டிப் பன்றி!
எப்போ திரும்பி வருவே?
அம்மாவாசை அன்று சந்திரன் உதிக்கும் போது!



ஏரிக்கு வந்த முதலை!

சித்தப்பாவோடு ஏரிக் கரையில் அமர்ந்து விலங்குகளைப் பற்றிய சந்தேகங்களை அவரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தான் சேகர். ஏரித் தண்ணீரைப் பார்த்ததும் அவனுக்கு முதலையின் நினைவு வந்தது.

''முதலை எப்போதும், தண்ணீரிலேயே இருக்கிறதே!எப்படி அது மூச்சு விடும்?'' என்று கேட்டான்.

''அது எப்போதும் தண்ணீரில் இருந்தாலும்,சுவாசிப்பதற்கு நீர் மட்டத்திற்கு மேலே வந்துதான் ஆக வேண்டும். அதன் மூக்கு தலைப்பாகத்தின் மேட்டில் அமைந்து இருப்பதால் முதலையின் உடல் தண்ணீரில் மிதக்கும் போதே கூட அதனால் எளிதாக வெளிக்காற்றை சுவாசிக்க முடியும்.

அப்போது ஏரித் தண்ணீரில் கறுப்பான மரக் கட்டை ஒன்று மிதந்து வந்தது. அதைப் பார்த்ததும் அங்கே இருந்த நாய் ஒன்று பலமாகக் குரைத்தது.

''கட்டையைப் பார்த்து நாய் ஏன் குரைக்கிறது!'' என்று ஆச்சரியத்தோடு கேட்டான் சேகர்.

சித்தப்பா கட்டையைக் கூர்ந்து கவனித்தார். அவர் முகம் மாறி விட்டது. ''அது மரக் கட்டை அல்ல! முதலை'' என்றார்.

கட்டையைப் போல ஆடாமல் அசையாமல் சொர சொரப்பான உடல் நீரில் லேசாகத் தெரிய ஜாலியாக நீந்திக் கொண்டிருந்தது முதலை!

ஏரிக்குள் முதலை வந்து விட்ட செய்தி மறுநாளே ஊருக்குள் பரவி விட்டது. எப்படி முதலையைப் பிடிப்பது அல்லது கொல்வது என்று ஊரார் யோசித்தனர்.

சேகரின் சித்தப்பா சிறந்த வேட்டைக்காரர். ஆகவே, ஊர் மக்கள் அவரை அணுகி ஆலோசனை கேட்டனர்.

''முதலையில நிறைய வகை இருக்காமே! இது என்ன முதலை? மூக்கு

வேணு சீனிவாசன்



''மரியாதை தராத ஊர் எது தெரியுமா?''

''தெரியலையே?''

'' 'போடி'நாயக்கனூர்.''

- ஆர். செந்தில் குமார்.

நீளமா இருக்கே?'' என்று கேட்டார் ஊர்த் தலைவர் வடிவேல்.

''நைல் நதி முதலை, அலிகேட்டர், காரியல் அல்லது நீள மூக்கு முதலை என்று முதலைகளில் முக்கியமாகப் பல இனங்கள். தென் அமெரிக்காவில் உள்ள கெய்மான் இன முதலைகள் நான்கு அடி நீளம் இருக்கும். சமீபத்தில் வங்காளத்தில் ஒரு முதலை பிடிக்கப் பட்டது. அது 33 அடி நீளம் இருந்தது. நம் ஊரில் வந்திருக்கும் முதலை காரியல் இனம். கங்கையில் இத்தகைய முதலைகள் உள்ளன'' என்றார் சித்தப்பா.

''அதெல்லாம் இருக்கட்டும், முதலையை எப்படி பிடிக்கிறது?'' என்றான் ஒருவன்.

''முதலையப் பிடிச்சி என்னா செய்யறது? சாப்பிடவா முடியும்? சாகடிக்கறது தான் நல்லது'' என்று குரல் கொடுத்தனர் பலர்.

''ஈட்டி எறிந்து கொல்லலாமே?'' என்றான் சேகர் . ''அதெல்லாம் பாத்துட்டோம். அது கில்லாடி முதலை! ஈட்டிகளுக்குத் தப்பிச்சுட்டது!'' என்றார் வடிவேல்.

''சார், உங்க துப்பாக்கியால ரெண்டு குண்டை முதலை வயித்துல தள்ளினா ஒழிஞ்சு போகுது சனியன்'' என்றார் மருதன்.

''இப்பவே கௌம்புங்க'', என்று ஊக்கப்படுத்தினார் வடிவேல்.

சித்தப்பாவும் சேகரும் ஏரிக் கரைக்குச் சென்று முதலைக்காகக் காத்துக் கொண்டிருந்தனர்.

குண்டு பாயமுடியாத தொலைவிலேயே நீந்திக் கொண்டிருந்தது அது.

''அது நம்மைப் பார்த்து விட்டிருக்குமோ? அதனால் தான் கரைக்கு அருகே வர வில்லையோ?'' என்றான் சேகர்.

''ஆமாம். முதலையின் கண்ணும், மூக்கும் நீர் மூழ்கிக் கப்பலின் பெரிஸ்கோப் போல அமைந்து இருக் கும். ஆகவே, அது நீருக்குள் மூழ்கி வரும் போதே தனது இரையை அல்லது எதிரியைக் கண்டு கொள்கிறது'' என்றார் சித்தப்பா.

''முதலை இருந்து விட்டுப் போகட்டுமே? ஏன்,கொல்ல வேண்டுமா?'' என்று கேட்டான் சேகர்.

''நம் ஊருக்கு அழையாத விருந்தாளி அது. அது இருந்தால் மக்கள் அமைதியாகக் குளிக்கவோ, துணி துவைக்கவோ ஏரிக்குச் செல்ல முடியாது. அதோடு, முதலை ஏராளமான மீன்களைத் தின்றுவிடும். எனவே, மக்களுக்கு மீன்கள் கிடைக்காது. ஆகவே, அது மடிய வேண்டியதுதான்'' என்றார் சித்தப்பா.

இரண்டு நாட்கள் சென்று விட்டன. முதலையை கரையில் இருந்து கொண்டே சுட முடியவில்லை. அதற்குள் ஒரு சிறுவனும், ஒரு கன்றுக் குட்டியும் முதலைக்குப் பலியாகி விட்டனர்!

சித்தப்பா துணிகரமாக ஒரு திட்டம் தீட்டினார். அதைக் கேட்ட ஊர் மக்கள் பயந்தனர். 'விஷப் பரீட்சை வேண்டாம்', என்று கெஞ்சினர். ஆனால் சேகர் அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த ஒப்புக் கொண்டான்.

சித்தப்பா துப்பாக்கியோடு படகில் ஏறினார். சேகரும் ஏறிக் கொண்டான். ஏரியின் நடுவே படகை நிறுத்தினார். முதலைக்காக இருவரும் காத்திருந்தனர்.

படகுக்குச் சிறிது தொலைவில்

முதலையின் தலை தெரிந்தது. சித்தப்பா. சேகரைப் பார்த்து, ''நாம் எதிர் பார்த்த தருணம் இதுதான். தண் ணீரில் குதி. அதிக தூரம் போகாமல் இங்கேயே நீந்திக் கொண்டு இரு. முதலை உன்னைப் பார்த்ததும் வேக மாக நீந்தி வரும். அப்படி வர ஆரம்பித்ததும், நீ காலம் கடத்தாமல் படகில் ஏறிக்கொள். அது படகின் அருகில் வந்ததும் நான் சுட்டு விடு கிறேன்! பயப்படாதே. உனக்கு ஆபத்து ஏற்படாமல் நான் பார்த்துக் கொள் கிறேன்'' என்றார்.

சேகருக்கு பயத்தால் 'தட்தட்' என்று மார்பு அடித்துக் கொண்டது. ஊர் மக்களின் நன்மைக்காக அ வ ன் உயிரைப் பணயம் வைக்கத் துணிந்து இந்த முயற்சியில் இறங்கியிருந்தான். மனதைத் தேற்றிக் கொண்டு படகில் இருந்து குதித்தான்.

சித்தப்பா, துப்பாக்கியைத் தயாராக வைத்துக் கொண்டார். காற்று படகை அப்படியும், இப்படியும் நீரில் அசைத் தது. குறி தவறி விடுமோ என்று அவர் அஞ்சினார் ஒரு கணம்!

கையால் தண்ணீரைத் தட்டி 'தப்தப்' என்று ஓசை எழுப்பினான் சேகர். அந்த சத்தத்தைக் கேட்டதும் முதலை நீருக் குள் மூழ்கியது.

சித்தப்பாவோ, சேகரோ இதை எதிர் பார்க்கவில்லை. முதலையின் கவனத் தைத் தன் பக்கம் திருப்பவே சேகர் ஓசை எழுப்பினான். தன்னை நோக்கி நீருக்கு மேலாகவே நீந்தி வரும் என்றுதான் அவன் எதிர் பார்த்தானே தவிர, இப்படி நிருக்குள் மூழ்கிவிடும் என்பதை எதிர்பார்க்கவே இல்லை! நீருக்குள்ளேயே வந்து காலைக் கௌவி னால் ஆபத்தாகி விடுமே. என்ன செய்வது என்று புரியாது தவித்தான்



சேகர்.

ஏரித் தண்ணீர் தெளிவாக இருந்தது. எனவே, நீரின் அடிப் பாகத்தை ஓரள வுக்குப் பார்க்க முடிந்தது. சித்தப்பா கழுகுக் கண்களோடு பார்த்துக் கொண் டிருந்தார்.

முகத்தில் கிலி பரவ மெதுவாகப் படகுக்கு அருகே நீந்திக் கொண்டிருந் தான் சேகர்.

நீருக்குள் இருந்து ஓர் அம்பு சீறிப் பாய்ந்து நீர் மட்டத்திற்கு வருவதைப் போல 'சர்' என்று நீந்தி வந்தது முதலை.

'சேகர், படகுக்குள் ஏறி விடு!' — கத்தினார் சித்தப்பா. மீனைப் போலத் துள்ளி படகுக்குள் விழுந்தான் அவன்!

சேகரின் காலைப் பிடிக்க முடி யாமல் முதலை ஏமாந்து போய், நீர் மட்டத்திற்கு மேலே வந்து கோபத் தோடு தனது பேய் வாயைத் திறந்தது! அப்பப்பா! எவ்வளவு பயங்கரமான ரம்பம் போன்ற கூர்மையான பற்கள்! அது மட்டும் காலைப் பற்றியிருந்தால், வாழைத் தண்டை வெட்டுவது போல எளிதாக வெட்டி இருக்கும் என்று நினைத்துக் கதி கலங்கிப் போனான் சேகர்.

முதலைக்காகக் காத்துக் கொண்டு இருந்த சித்தப்பா, திறந்த வாய்க்குள் இரண்டு குண்டுகளைச் செலுத்தினார். சேகர் இருந்திருக்க வேண்டிய முதலை வாய்க்குள், துப்பாக்கி குண்டுகள்!

முதலை இறந்தது. ஏரிக் கரையில் நடப்பதை எல்லாம் பயத்தோடு பார்த் துக் கொண்டு இருந்த ஊர் மக்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரம் செய்தனர்.

தன் உயிரைப் பணயம் வைத்து முதலையைக் கொல்லத் துணிவோடு ஒத்துழைத்த சேகரை ஊர் மக்கள் பாராட்டி விருந்து வைத்தனர்.

''பொது மக்களின் நலனுக்காகத் தன் உயிரைப் பணயம் வைத்த சேகரின் துணிவு எல்லோருக்கும் வரவேண் டும்'' என்று வாழ்த்தினார் வடிவேலு.

ரஷ்ய மொழியில் இந்திய நூல்!

புகழ்பெற்ற காஷ்மீர் மகாகவி சோம தேவர் 900 ஆண்டுகளுக்கு முன்னர் படைத்த இலக்கியக் கருவூல மான ''கதைப் பிரவாகங்களின் சாகரம் (கதா சாகரம்)'' என்ற நூலை மாஸ் கோவிலுள்ள நவூகா பிரசுராலயத்தினர் அண்மையில் ரஷ்ய மொழியில் வெளி யிட்டிருக்கிறார்கள்.

சோம தேவருடைய படைப்பில் 18 பகுதிகள் உள்ளன. இவற்றில் ''மாபெரும் கதை தோன்றிய வரலாறு'' ''சூரியப் பிரபா'' ''வேதாளம் மற்றும் திரிவிக்கிரமசேன மன்னரின் கதை'' ''விஷம ஷீலா ஆகிய நான்கு பகுதிகள் இந்தப் பதிப்பில் இடம்பெற்றுள்ளன. பிரபல சோவியத் அறிஞரான இகோர் செரப்ரியக்கோவ் சமஸ்கிருத மூலத்தி லிருந்து இதை நேரடியாக மொழி பெயர்த்துள்ளார். இதற்கு அவர் முன்னு ரையும் விளக்கவுரையும் கூட எழுதி யுள்ளார். ரஷ்ய வெளியீட்டின் வரலாறு பற்றியும் மகாகவியின் வாழ்க்கை பற்றி யும் செரப்ரியக்கோவ் முன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார்.



''கதைப் பிரவாகங்களின் சாகரம்'' என்ற இந் நூலின் சில பகுதிகள் 1847 ஆம் ஆண்டிலேயே ரஷ்யாவில் பிரசுரிக்கப் பட்டன. இந்த நூலை முழுமையாக மொழிபெயர்க்கும் பணி 1967-ல் தொடங்கி, 1982-ல் முற்றுப் பெற்றது.

சோமதேவருடைய இந்த அற்புதப் படைப்பு ரஷ்யாவில் ஏராளமான வாச கர்களைப் பெற்றுள்ளது. பண்டைய இந்திய மக்களின் வாழ்க்கை முறை களைப் பற்றி அதிகம் தெரிந்து கொள்ள இந் நூல் துணை செய்கிறது.

— ஸ்ரீரங்கம் ரா. ராகவன்.

பொங்கல் பாவாடை

அரசு மணிமேகலை

"அம்மா நாங்க சொன்னது நினைப்பு இருக்கட்டும். எங்க ரெண்டு பேருக்கும் பொங்கலுக்கு ஒரு முழம் ஜரிகை போட்ட பட்டுப் பாவாடை வாங்கினால்தான் கட்டிக்குவோம்'' - இது அல்லியின் மிரட்டல்!

''ஆமாம்மா! ஒரு முழம் ஜரிகைக்குக் கொஞ்சம் குறைஞ்சுதுன்னா கூட, நாங்க கட்டிக்க மாட்டோம்! அந்த ஜரிகையில அழகா அன்னம் போட்டிருக்கணும். எங்க கிளாசில் எல்லோருமே பொங்கலுக்கு ஒரு முழ ஜரிகை போட்ட, பட்டுப் பாவாடைதான் வாங்கிக்கிறதுன்னு தீர்மானம் பண்ணியிருக்கோம்'' - இது செல்வியின் மிரட்டல்.

''எங்க வசதிக்கு மீறி உங்களை பெரிய கான்வென்ட்டில் சேர்த்தது தப்பாப் போச்சு. படிப்பு நல்லா சொல்லித் தராங்களேன்னு கடனை உடனை வாங்கி சேர்த்தோம். பெரிய மனிதர் வீட்டுப் பிள்ளைகளோட சேர்ந்து, இப்படி ஆடம்பரங்களுக்கு ஆசைப்படுவீங்கன்னு தெரியாம போச்சே!'' என்று வருத்தத்தோடு கூறினாள் அம்மா.

இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த அப்பா, ''வீட்டுக் கஷ்டம் தெரியாம, பணத்துல மிதக்கிற வீட்டுப் பசங்களோட சேர்ந்து படிச்சா இந்த மாதிரியெல்லாம் வரும்னு நான் அப்பவே எச்சரித்தேன். நீதான் கேட்கலே. இப்ப என்ன ஆச்சு பார்த்தியா? பொங்கலுக்கு நாமா புதுத்துணி எடுக்கிறதை மாத்தி, அவங்க முடிவு பண்ணியிருக்கிற மாதிரி பட்டுப் பாவாடை; அதுவும் முழ ஜரிகை போட்டதுதான் வேணும்னு நிபந்தனை போடறாங்க! இவங்க கேட்கிறபடி பட்டுப் பாவாடை வாங்கறதுன்னா, ஒவ்வொருத்திக்கும் ஆயிரத்து ஐநூறு ரூபாய் என்ன ஆகும்? எனக்குச் சம்பளமே அவ்வளவு இல்லையே!'' என்று வருத்தத்தோடு கூறினார்.

''ரெட்டைக் குழந்தைகளான நாங்க பொங்கலன்னிக்குப் பிறந்ததால எங்களுக்குத் தனியா பிறந்தநாள் கொண்டாடற செலவு மிச்சம்பா! நாங்க வேறொரு நாள் பிறந்திருந்தா, பிறந்த நாளுக்கு ஒரு பாவாடை, பொங்கலுக்கு ஒரு பாவாடைன்னு தனித்தனியா வாங்க வேண்டியிருக்குமே? அது இல்லாம ரெண்டு செலவும் ஒன்னாயிடுத்தே? உங்களுக்குத்தான் லாபம்!'' என்றாள் அல்லி.

அப்பாவும் அம்மாவும் ஒருவரை ஒருவர் திகைப்போடு பார்த்துக் கொண்டனர்.

''எங்களுக்குத் தெரியாது அப்பா. முழ ஜரிகையோடு நீங்க பட்டுப் பாவாடை வாங்கித் தரலேன்னா, பொங்கலுக்குப் பிறகு நாங்க பள்ளிக்குப் போக மாட்டோம்'' என்று உறுதியாகக் கூறிவிட்டு சைக்கிளில் பறந்தனர் செல்வியும் அல்லியும்.

''நமக்கு வசதி இல்லேங்கறது வேற விஷயம். நாட்டுல சாதாரணத் துணிக்குக்கூட வழியில்லாமல் எத்தனையோ கோடி மக்கள் அவதிப்படும் போது, இப்படி ஒரு பட்டுப் பாவாடைக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாய் செலவழிப்பது என்பதை என் மனசாட்சி ஒப்புக் கொள்ளவில்லை. இதுனால இவங்க பள்ளிக்கூடம் போக மாட்டேன்னு பிடிவாதம் பிடிச்சா, பள்ளியை நிறுத்திடுங்கன்னு முடிவா சொல்லிடப் போறேன். இது என் சக்திக்கு மீறின

செலவு. அதோட மனசாட்சிக்குப் பதில் சொல்ல முடியாத அநியாயச் செலவு'' என்றார் அப்பா.

''உங்க பட்ஜெட் என்ன?'' என்று கேட்டாள் அம்மா.

''ஆளுக்கு முன்னூறு ரூபாய்க்கு மேல் செலவழிக்க எனக்கு வசதியில்லை. அதோட, பொங்கலன்னிக்கி அனாதை ஆசிரமத்தில் உள்ள குழந்தைங்களுக்கு நம்ம செலவில் பொங்கல் கொடுக்கிற வழக்கத்தை எத்தனையோ தலைமுறையா நம்ம குடும்பத்துல செஞ்சு வரோம். அதுக்கு ஐநூறு ரூபாய் செலவாகும். என்ன பண்ணப் போறேனோ?'' என்றார் கவலையோடு அப்பா.

''கவலைப் படாதீங்க. நான் ஒரு திட்டம் வைச்சிருக்கேன்'' என்று சிரித்தாள் அம்மா.

''கடனை உடனை வாங்கி, மூவாயிரம் ரூபாய்க்கு பட்டுப் பாவாடை வாங்கக் கூடாது. அதுக்கு நமக்கு வசதியும் இல்லே. நியாயமும் இல்லே.''

''ஏன் கவலைப் படறீங்க? மூவாயிரம் ரூபாய்க்கு நானும் பட்டுப் பாவாடை வாங்க மாட்டேன்'' என்று சிரித்தாள் அம்மா.

பொங்கலன்று காலையில் குளித்துவிட்டு வந்தபோது செல்விக்கும், அல்லிக்கும் ஓர் அதிசயம் காத்திருந்தது. அவர்கள் கேட்டிருந்த மாதிரியே நீல வண்ணத்தில் ஒரு முழம் ஆரஞ்சுக் கலர் ஜரிகைக் கரை போட்டு இருவருக்கும் ஒரே மாதிரி பட்டுப் பாவாடை காத்திருந்தது! கரையில் அன்னங்கள் சிரித்தன! அதற்கு ஏற்றதாகச்



சட்டை!

அப்பா திகைப்போடு அம்மாவைப் பார்த்தார். அம்மா ஒரு புதிர்ச் சிரிப்பைச் சிரித்து விட்டு உள்ளே சென்றாள். அல்லிக்கும், செல்விக்கும் அளவில்லாத மகிழ்ச்சி!

பொங்கல் பொங்கி, ''பொங்கலோ பொங்கல்!'' குரலெழுப்பி, பூசையை முடித்துக் கொண்டு சாப்பிட்டு முடித்





''டிரைவர், இவ்வளவு வேகமா ஓட்டாதே! எனக்குப் பயமாயிருக்கு!''

''பயப்படாதீங்க! கார் வேகமாக போகும் போது என்னைப் போல் கண்ணை மூடிக்கோங்க!''

- எம். ஆனந்தன்

தனர்.

அப்பா அவர்களை அழைத்துக் கொண்டு அனாதை இல்லத்திற்குக் கிளம்பினார்.

''வாருங்கள்'' என்று அவர்களை வரவேற்ற அனாதை இல்லக்காப்பாளர் உள்ளே அழைத்துச் சென்றார். நடு மண்டபத்தில் தட்டு வைத்துப் பரிமாறியிருந்தனர். குழந்தைகள் இவர்கள் வருகைக்காகக் காத்திருந்தனர். சுமார் அறுபது சிறுவர்கள். அவ்வளவு பேரும் அனாதைகள்!

ஒவ்வொரு ஆண்டும் பொங்கலன்று இவர்களது சாப்பாட்டுக்காகும் செலவை அப்பாதான் ஏற்று வந்திருந்தார். ஆனால், ஒருமுறை கூட செல்வியும், அல்லியும் அங்கு வந்ததில்லை. அப்பா வருந்தி வருந்திக் கூப்பிடுவார். ஆனால், அவர்கள் மறுத்துவிடுவார்கள். ''நாம் ஏதாவது அதிகப்படி கேட்டால் அப்பா வாங்கித்தருவதில்லை. இந்த அனாதைக் குழந்தைகளுக்கு மட்டும் வருஷம் தவறாமல் பொங்கல் சாப்பாட்டுச் செலவை ஏற்கிறார்'' என்று அவர்களுக்கு அவர்மேல் வருத்தம். அதனால் அவர்கள் ஒரு முறைகூட வந்ததில்லை. இந்த முறைதான், அதிசயமாக வந்திருக்கிறார்கள்.

''இவ்வளவு அனாதைக் குழந்தைகளா!'' என்று செல்வியும், அல்லியும் வியந்தனர்.

''இவங்க போட்டிருக்கும் உடை புதுசுதான். பஸ் கம்பெனி தாமோதரன் சார் அன்பளிப்பு'' என்று விளக்கினார் காப்பாளர். எல்லோரது உடைகளும் எளிதாக இருந்ததைக் கவனித்தனர் அல்லியும் செல்வியும்.

''ஐயா, பொங்கலை நீங்களே பரிமாறுகிறீர்களா?'' என்று கேட்டார் காப்பாளர்.

''இந்த ஆண்டு அதிசயமாக என் குழந்தைகள் இருவரும் வந்திருக்கிறார்கள்... அவர்களே பரிமாறட்டும்'' என்று பதிலளித்த அப்பா, 'அல்லி, நீ சர்க்கரைப் பொங்கல் போடு, செல்வி நீ வெண் பொங்கல் போடு' என்று பணித்தார்.

பக்கெட்டை எடுத்துக் கொண்டு அல்லியும் செல்வியும் பரிமாறினர்.

''நன்றி அக்கா!'' என்று ஒவ்வொரு குழந்தையும் கூறியபோது தங்கள் மனம் இளகுவதை இருவருமே உணர்ந்தனர்.

அல்லி பரிமாறிக் கொண்டே வரும் போது ஆறுவயதுச் சிறுமி ஒருத்தி, ''அக்கா, இன்னிக்கு லட்டு போட மாட்டாங்களா?'' என்று ஏக்கத்தோடு கேட்டாள்.

என்ன ப தி ல ளி ப் ப து என்று அல்லிக்குத் தெரியவில்லை. ஆனால், அந்தச் சிறுமியின் ஏக்கம் நிறைந்த முகம் அல்லியின் மனத்தை என்னவோ செய்தது. அருகே இருந்த காப்பாளரை நோக்கினாள்.

''இன்னிக்கி லட்டு இல்லேம்மா,'' என்றார் காப்பாளர்.

''போன வருஷம் பொங்கலின் போது போட்டீங்களே?'' என்றாள் அந்தச் சிறுமி.

இதற்குள் அப்பாவும் அங்கே வந்துவிட்டார்.

''வருஷா வருஷம் பொங்கலன்னிக்கு நீங்க சாப்பாட்டுச் செலவை ஏத்துக்கறீங்க. போன ஆண்டு, காண்ட்ரேக்ட்டர் பரமசிவம் தன்னுடைய செலவில் கூடுதலா இவர்களுக்கு ஒரு லட்டு போட்டார். அதை நினைப்பு வைச்சிட்டு இந்தக் குழந்தை கேட்குது'' என்று அப்பாவிடம் விளக்கிய காப்பாளர், ''பொங்கல், லட்டு இரண்டுமே இனிப்புத்தானேம்மா... பொங்கல் சாப்பிடும் போது லட்டை நினைச்சு சாப்பிட்டுக்கம்மா! புத்தாண்டு பிறக்கும்போது யாராவது நல்லவங்க உங்களுக்கு லட்டுப் போட முன்வரலாம்!'' என்று

அந்தச் சிறுமியை சமாதானப் படுத்தி, நம்பிக்கையூட்டினார்.

வீட்டில், மதிப்புத் தெரியாமல் எறியும் இனிப்பை எண்ணினர் அல்லியும். செல்வியும்.

''ஐயா, இந்தக் குழந்தைக்கு மட்டு மாவது ஒரு லட்டு வாங்கிக் கொண்டு வந்து போடக் கூடாதா? அது கேட்டது மனத்தை என்னவோ பண்ணுகிறது'' என்றாள் அல்லி.

''அது முடியாதம்மா. எனக்கு இங் குள்ள அறுபத்தைந்து அனாதைக் குழந் தைகளும் ஒன்றுதான். நான் யாருக்கும் தனிப் பரிவு காட்டக் கூடாதும்மா. அறு பத்தைந்து லட்டு கிடைத்தால்தான் இந்தக் குழந்தைக்கு ஒன்று போட முடியும்!''

''இவர்கள் எல்லோருக்கும் லட்டு போடுவதானால் எவ்வளவு செலவா கும்?''

''சின்ன லட்டாக இங்கேயே செய்து போட்டால் கூட, அறுபத்தைந் துக்கு முப்பது ரூபாய் கண்டிப்பாக ஆகும்மா.''

பட்டுப்பாவாடைக்கு அடம்பிடித்த தைத் தங்களை அறியாமல் எண்ணிப் பார்த்தனர் அல்லியும் செல்வியும். பிடிவாதம் பிடித்து, ஆயிரக்கணக்கில் விலை கொடுத்து பட்டுப் பாவாடை வாங்கிக் கொள்ளும் தங்களைப் போன் றவர்களும் இருக்கிறார்கள். இந்தக் குழந்தையைப் போல், ஆசைப்படும் ஒரு லட்டுக்குக் கூட வழியில்லாமல் இருக்கும் அனாதைகளும் இருக்கிறார் கள்! எவ்வளவு பெரிய அநியாயம் இது! அதுவரை மகிழ்ச்சியைத் தந்த பட்டுப் பாவாடை முள்ளாகக் குத்துவதைப் போன்ற உணர்வு இருவருக்கும் ஏற் பட்டது!

''இப்படிப் பட்ட மாறுபட்ட உலகம் ஒன்று இருப்பதை அறியாமல் பட்டுப் பாவாடைக்குப் பிடிவாதம் பிடித்ததை எண்ணி உண்மையாகவே வருத்தப்படுகிறோம்'' என்று அல்லி கூறியபோது அம்மாவுக்கு ஒரே திகைப்பு.

''ஆமாம் அப்பா! பாவாடையை மறுபடி எடுத்துக் கொள்வார்களானால் கொடுத்துவிடுங்கள். நாளைக்கு இந்தக் குழந்தைகளுக்கு லட்டு தரச் சொல்லி ஏற்பாடு பண்ணுங்கள்'' என்று செல்வி கூறியபோது அம்மாவுக்கு ஒரே மகிழ்ச்சி.

''நாளைக்கு என்ன... இப்பவே ஓட்டலில் இருந்து இவர்களுக்கு லட்டு வரவழைக்கலாம்!''

அப்பா திகைப்போடு அம்மாவைப் பார்த்தார் .

''இவர்களுக்கு வாங்கியிருப்பது விலை உயர்ந்த பட்டுப் பாவாடை அல்ல. பட்டைப் போலவே தகதகக்கும் விலை குறைந்த நார்ப்பட்டுப் பாவாடைதான்! இருவருக்கும் சேர்ந்து இருநூறு ரூபாய் கூட ஆகலே. உங்க பட்ஜெட்டில் இன்னும் பணம் இருக்கு. லட்டு வாங்கி வாங்க'' என்று புதிரை விடுவித்தாள் அம்மா.

''ஆமாம்மா. நாங்களே எங்க கை யால் இவர்களுக்குக் கொடுத்து, இவங்க சாப்பிட்டு மகிழ்வதைப் பார்க்கணும்னு ஆசையா இருக்கு!''

இல்லாதவர்களுக்குக் கொடுத்து மகிழும் இன்பத்தை உணர்ந்துவிட்ட தன் பெண்களைப் பெருமையோடு பார்த்தார் அப்பா. அமைதிப் பெருமூச்சு விட்டாள் அம்மா!

கலர் கலர் உப்பு!

★ நம் நாட்டில் கிடைக்கும் உப்பு வெண்மை நிறம் கொண்டது. ஆனால் பிரிட்டனில் கிடைக்கும் உப்பு பொன் நிற மாகவும், சிவப்பு நிறமாகவும் ஹங் கேரியில் கிடைக்கும் கல் உப்பு இந்திர நீலரத்தினம் போன்று கண்ணை பறிக்கும் தன்மையும் கொண்டது.

- க. இரா. விஜயகுமார்.

மலைக்கோட்டை மர்மம்

ஹ.ர.வசந்தன்



8 - அகப்பட்டுக் கொண்டான்

மணிமாறன் மாட்டிற்குப் புல்லும் தண்ணீரும் வைக்கக் கொல்லைப் பக்கம் சென்றான். புல் கட்டைப் பிரித்து எடுத்துக் கொண்டிருந்த போது வேலிக்கு அப்பால் இருட்டுக்குள்ளிருந்து யாரோ ''மணிமாறா, கொஞ்சம் இப்படி வா'' என்று மெதுவாக அழைப்பது கேட்டது.

இருட்டுக்குள் நாகராஜன் நின்று கொண்டிருந்தான்.

''எதுக்காக இந்த நேரத்தில் இங்கே வந்திருக்கே? எதுக்காகக் கூப்பிடறே?'' என்று கோபத்தோடு கேட்டான்.

''என்னுடைய நன்மைக்காக நான் உன்னைக் கூப்பிடலே மணிமாறா. உன்னுடைய நன்மைக்காகத்தான்...'' என்றான் நாகராஜன்.

''ஏன் புளுகறே? என்னுடைய நன்மையில் அக்கறை கொண்டவனா இருந்தால், என் குடிசைக்குத் தீ வைத்து, இருக்க இடம் இல்லாதபடி செய்வாயா? உன்னை நம்ப நான் தயாரா இல்லை'' என்று திரும்பிப் போக முயன்றான் மணிமாறன்.

''உங்க அப்பாவைப் பற்றி ஒரு புதுமையான செய்தி கிடைச்சிருக்கு...!''

''எங்க அப்பாவைப் பற்றியா?'' என்று ஆவலோடு திரும்பினான் மணிமாறன்.

''ஆமாம். அதைப் பற்றி உன்னிடம் கூறத்தான் அழைக்கிறேன். வேலியைத் தாண்டி வா. சொல்றேன்.''

''அவர்தான் வெள்ளியாற்றில் மூழ்கி இறந்து விட்டாரே?''

நாகராஜன் குரலைத் தழைத்துக் கொண்டு, ''நாமெல்லாம் அப்படித்தான் நம்பிக் கொண்டிருக்கிறோம். ஆனால், உண்மையில் அவர் உயிரோடுதான் இருக்கிறார் என்று தகவல் கிடைச்சிருக்கு!'' என்றான்.

''அப்படியா? எங்கே இருக்கிறாராம்?''

''அதையெல்லாம் சொல்லத்தானே உன்னை அழைக்கிறேன். வேலியைத் தாண்டி வா மணிமாறா.''

மணிமாறனின் மனம் முழுவதும் ஒருகணம் மத்தாப்புக் கொளுத்தியது போல் பூரித்தது. ''அவர் உயிரோட இருந்தா, என்னைப் பார்க்க வராம, இப்படித் தனியா விட்டு வைப்பாரா! நீ என்ன உளர்றே?'' என்று கேட்டுக் கொண்டே வேலியைத் தாண்டி நாகராஜனின் பின்னால் வேகமாக நடந்தான்.

சற்றுத் தூரம் செல்வதற்குள் மரங்களுக்குப் பின் மறைந்திருந்த மூன்று நான்கு முரடர்கள் திடீரென்று மணிமாறனின் மீது பாய்ந்தனர். சத்தமிட முடியாதபடி, வாயில் துணியை அடைத்து, திமிறத் திமிறத் தூக்கிக் கொண்டு இருட்டுக்குள் மறைந்தனர். நாகராஜனின் கேலிச் சிரிப்பு மட்டும் இருளில் ஒலித்தது!



அதிகாலையில் கண் விழித்த ஆனந்த், மணிமாறனின் அறையில், அவன் இல்லாததைக் கவனித்தான். வெகு நேரமாகியும் அவன் வராததால் எல்லோரும் பரபரப்படைந்து அவனைத் தேடலாயினர். வண்டியும், மாடும் கொல்லைப்புறம் இருந்ததால் அருகில் தான் எங்காவது சென்றிருப்பான் என்று நினைத்துக் கொண்டனர். மதியம் வரை பொறுத்துப் பார்த்தும் அவன்வராததால் நிச்சயமாக அவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்திருக்கிறது என்ற முடிவுக்கு வந்தான் ஆனந்த். பாஞ்சாவினால் அவன் ஏதோ ஆபத்துக்கு ஆளாகி இருக்கலாம் என்பது அவனுக்கு நன்றாகவே புரிந்தது.

அன்று மாலை அலுவலகத்தில் இருந்து பிரேம்நாத் வந்ததும், முதல் வேலையாக மணிமாறனைப் பற்றி விசாரித்தார். இன்னும் அவன் வரவில்லை என்று தெரிந்ததும் மிகுந்த பதற்றம் அடைந்தவராகக் காவல் துறையினருக்குத் தகவல் தெரிவிக்க முனைந்தார்.

இதுவரையிலும் ஏதோ நினைத்துக் கொண்டிருந்த ஆனந்த், அப்பாவிடம் வந்து, ''இன்னைக்கு ஒருநாள் மட்டும் பார்ப்போம்... இப்பவே பொழுது இருட்டப் போகுது... நீங்க புவனபுரம் போறதுக்குள்ள ரொம்ப நேரமாயிடுமே'' என்றான்.


அவன் சொன்னதை அம்மாவும் ஆமோதிக்கவே, காலை வரை பார்த்து விட்டு, காவல் துறையினருக்குப் புகார் செய்வது என்று முடிவு செய்தார் பிரேம்நாத். அன்றிரவு வெகு நேரம் வரை தூங்காமல் மணிமாறனைப் பற்றியே கலங்கிய மனதுடன் அவர்கள் பேசிக் கொண்டிருந்தனர்.

பாஞ்சா செய்யும் சட்டவிரோதமான செயல் என்னது என்பதை மணிமாறன் பலமுறை சொல்ல முயன்றும் அது வெற்றி பெறவில்லை. அம்மாவோ, அஸ்வினியோ, இல்லை அப்பாவோ யாராவது வந்து விடுவார்கள். அதனால் மணிமாறனால் சொல்ல முடியாமலேயே இருந்தது. அன்று பள்ளி விடுமுறை. ஆனால் ஆனந்துக்கு மட்டும் ஸ்பெஷல் வகுப்பு இருந்தது. அதனால் பள்ளிக்குச் செல்லும் போது அதைக் கூறுவதாக மணிமாறன் உறுதியளித்திருந்தான். ஆனால், அதற்குள் மாயமாகி விட்டானே!

மணிமாறனை யாரோ கடத்தித்தான் சென்றிருக்க வேண்டும் என்று ஆனந்த் உறுதியாக நம்பினான். அதோடு அப்படிச் செய்தவன் பாஞ்சாவின் கையாளாகவும் இருக்க வேண்டும் என அவன் எண்ணினான்.

இரவு மணி பதினொன்றைத் தாண்டி விட்டது. படுக்கையிலிருந்து மெல்ல





''அண்ணே! என்னால மாடிப்படியே ஏற முடியலை, மூச்சு வாங்குது!''
''அப்பவே சொன்னேனே, அந்த ''பிளட் பிரஷர்'' மனிதன் ரத்தத்தைக் குடிக்காதேன்னு! கேட்டியா?''

- எம். ஆனந்தன்

எழுந்த ஆனந்த், பக்கத்துக் கட்டிலில் படுத்திருந்த அஸ்வினியை உற்றுப் பார்த்தான். அவன் நன்றாகத் தூங்கிக் கொண்டிருப்பது தெரிந்தது. ஜன்னலருகே சென்றவன் தொலைவில் தெரியும் மலைத் தொடரையே பார்த்துக் கொண்டு நின்றான். வானத்தில் நட்சத்தி ரங்கள் பூக்களாக இறைந்து கிடந்தன. எங்கோ நரியொன்று ஊளையிட்டது.

பாஞ்சாதான் மணிமாறனைக் கடத்திச் சென்றிருப்பான் என்ற உறுதி யான முடிவுக்கு ஆனந்த் வந்திருந்தான். மணிமாறனை பாஞ்சா துன்புறுத்துமுன் எப்படியாவது கண்டுபிடித்து மணிமாற னைக் காப்பாற்றியாக வேண்டும். நாளைக் காலையில் அப்பா காவல் துறையினரிடம் புகார் செய்தாலும், எதுவும் அறியாத போலீசார் மலை மீது சென்று தேடப் போவதில்லை. நாமே எல்லா விவரங்களையும் தெரிவித்தா லும், போலீஸ் வரும் செய்தி பாஞ்சா வுக்கு எட்டும் பட்சத்தில் அவன் தப் பித்து ஓடி விடுவான். பின் மணிமாற னைக் காப்பாற்ற முடியாமல் போனா லும் போய் விடும். அப்படியானால் இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு வழிதான் என்ன?

ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு சிந்தனையில் ஆழ்ந்து நின்ற ஆனந்தின் மனதில் பளிச்சென்று ஒரு எண்ணம் உதித்தது. எவரும் எளிதில் செல்ல முடியாத மலைக் கோட்டைப் பகுதியில் சட்டத்திற்குப் புறம்பான தொழிலைச் செய்து வரும் அந்தக் கொடி யவன் தனது பொருட்களை வெளியே கொண்டு வந்து தான் ஆக வேண்டும். விற்பனை செய்வதற்கு அல்லது வேறி டத்திற்குக் கொண்டு செல்ல அவன் ஏதாவது ஒரு வழி வைத்திருப்பான். அதைக் கண்டுபிடித்து விட்டால், அவர்கள் அங்கு வரும் போது எளிதாக மடக்கி விடலாம். வெறுமனே காவல் துறையினரிடம் புகார் செய்வதால், அது மணிமாறனுக்கு ஆபத்தையே உருவாக் கக்கூடும். பாஞ்சா இரக்கமற்றவன் ஆத்திரத்தில் அவன் எதுவும் செய்வான்!

இந்த எண்ணம் உதித்ததும் அவ னிடம் மிகுந்த பரபரப்பு உண்டாயிற்று. எப்படியாவது உடனே மலைக்குச் சென்று பார்த்து விட வேண்டும். அதோடு மணிமாறனையும் விடுவிக்க வேண்டும்.

ஆனந்த் பூனை போல் அடி வைத்து முன்னறைக்கு வந்தான். பக்கவாட்டில் இருந்த மணிமாறனின் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த வெளிக் கதவை ஓசை வராமல் திறந்து கொண்டு வெளியே வந்தான். கதவைச் சாத்தி விட்டு, எவ்வளவு பெரிய ஆபத்தில் காலை வைத்திருக்கிறோம் என்பதை உணராமல் 'விறுவிறு'வென்று நடக்க லானான். கும்மிருட்டையும், அவ்வப் போது கிரீச்சிட்டு பறந்த இராப் பறவைகளையும் பொருட்படுத்தாமல் விரைந்து நடந்து, மணிமாறன் முன்பு தங்கியிருந்த அந்த இடிந்த மண்டபத்தை அடைந்தான். சந்திரகிரி மக்கள் மலை மீது செல்வதை எதிர்பார்த்துக் காத் திருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் தொலை வில் தெரிந்த குடிசைகளில் தீவட்டிகள் தோன்றின. வழக்கம் போலவே கிராமத் தினர் பு றப் ப ட் டு மலைக்கோட்டை முனீஸ்வரன் கோயிலை நோக்கிச் செல்லும் ஒற்றையடிப் பாதையில் செல்லலாயினர். ஆனால், வழக்கத் திற்கு மாறாக இன்று பெருங் கூட்டமாக மக்கள் திரண்டு செல்வதை அவன் கவ னித்தான். ஓட்டமும், நடையுமாக விரைந்து, அ ந் த ஒற்றையடிப் பாதையை அடைந்தவன் ச ற் று த் தொலைவில் சென்று கொண்டிருந்த அந்த கிராமவாசிகளைத் துணிவோடு பின்தொடர்ந்தான்.

ஆண்களுடன், பெண்களும், சிறு வர்களும், குழந்தைகளும் கூடச் செல் வதைக் கவனித்தான் அவன். அவர்கள் தங்கள் கைகளில் தட்டுமுட்டு சாமான்

களுடனும், மூட்டை முடிச்சுக்களுடனும் புறப்பட்டிருப்பது அவனுக்கு மிகுந்த வியப்பைக் கொடுத்தது. அவர்களைப் பார்த்தால் வேலை செய்யப் புறப்பட்டவர்களாகத் தோன்றவில்லை. ஊரை விட்டே கிளம்பியவர்களாகத் தோன்றினார்கள். ஆனாலும், தனக்கிருந்த பரபரப்பில் அதைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் அவர்களைத் தொடரலானான்.

சற்று நேரத்தில் அவனுக்கு மூச்சு வாங்க ஆரம்பித்தது. செங்குத்தாக வளைந்து வளைந்து மலை மீதேறிச் செல்லும் அந்தப் பாதையில் சரளைக் கற்களும், முட்களும் நிறைந்து கிடந்தன. தன் காலில் அணிந்திருந்த செருப்பு கற்களில் உரசி, ஒலி எழுப்புவதைக் கவனித்தவன், அதைக் கழற்றி அருகிலிருந்த புதருக்குள் வீசியெறிந்தான். வெறுங் காலோடு அந்தப் பாதையில் நடப்பது மிகவும் கடினமாக இருந்தது. கால்கள் வலிக்க ஆரம்பித்தன. ஆனாலும், எப்படியும் அவர்களைத் தொடர்ந்து மேலே சென்று விடுவது என்ற உறுதியுடன் நடந்து கொண்டிருந்தான்.

முன்னால் சென்றவர்கள் பிடித்திருந்த தீவட்டி வெளிச்சத்தில் மலைக் கோட்டை முனீஸ்வரன் கோயில் மங்கலாகத் தெரிந்தது. அவன் மனதில் ஒரு கணம் இப்போது தான் செய்வது அசட்டுத்தனமோ என்ற எண்ணம் எழுந்தது. இவர்களைப் பின்தொடர்வதால் ஏதாவது விபரீதம் நேர்ந்தால் அதைத் தன் பெற்றோரிடம் தெரிவிக்கக் கூட ஆள் இல்லாது போய் விடுமே என்ற கலக்கம் மனதில் தோன்றியது. கொடியவனான பாஞ்சா ஆத்திரத்தில் எதுவும் செய்யத் துணிவான். அப்படிப்பட்டவனிடம் வலியச் சென்று மாட்டிக் கொள்வது புத்திசாலித்தனமான காரியமா? அப்படி மேலே சென்றாலும் பாஞ்சாவின் இரகசிய வழிகளைக் கண்டுபிடிக்க இயலுமா என்று இப்பொழுது எண்ணி மனம் கலங்கலானான்.

திரும்பிப் போய் விடலாமா என்ற எண்ணம் மனதில் எழ, அவன் தயங்கி நின்றான். ஆனாலும், தன்னுடன் ஒத்துழைக்கவில்லை என்ற ஒரே காரணத்துக்காக மணிமாறனையும், அவன் அப்பாவையும் இத்தனை கொடுமைப் படுத்திய அந்த பாஞ்சாவின் அக்கிரமங்களுக்கு ஒரு முடிவு கட்டியே ஆக வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் உறுதியோடு எழுந்தது.

எப்படியும் சட்டத்திற்குப் புறம்பான தொழிலில் உருவாகும் பொருட்களையெல்லாம் இரவு நேரத்தில்தான் அங்கிருந்து வெளியே கடத்தி வர முயற்சிப்பான். இந்த மலைப் பகுதியோ, எந்த வாகனமும் வர முடியாத இடமாக இருக்கிறது. அப்படியானால் அவன் ஏதாவது ஒரு வழியில் வாகன வசதியிருக்கும் இடத்திற்கு அவற்றைக் கொண்டு வந்து தான் ஆக வேண்டும். அந்த இடத்தைக் கண்டுபிடித்து விட்டால், போலீசாருக்குத் தகவல் சொல்வது எளிதாகப் போய் விடும்.

ஆனந்த் பேதலித்த மனதை உறுதிப் படுத்திக் கொண்டு முன்னே செல்பவர்களைத் தொடர எச்சரிக்கையுடன் முற்பட்டான்.


அப்போது பின்னாலிருந்து ஒரு உறுதியான கரம் அவன் தோளில் சட்டென்று விழுந்து அவனைத் தன் பக்கமாக இழுத்தது. பதறிப் போன ஆனந்த் அது யார் என்று புரியாமல் திரும்பிப் பார்க்க, அவன் சத்தமிட முடியாதவாறு அவன் வாயைப் பொத்தினான் அந்த மனிதன். இருட்டில், அவனை யார் என்று கண்டுபிடிக்க இயலவில்லை. ஆனந்த் திமிறியவாறு அவன் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள முயன்றான். அச்சத்தால் அவனுக்கு உடல் முழுவதும் நடுங்கியது. வியர்த்துக் கொட்டியது. கூச்சலிட முடியாதவாறு நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொண்டது.

- வளரும்

"என்னடா இவன், இன்னிக்கு இவ்வளவு கோபமா இருக்கான்?"


"இந்த வீட்டுக்காரருக்கு இரத்தக் கொதிப்புன்னு தெரியாம, கடிச்சிட்டானாம்."

- கே. இளங்கோவன்







குழந்தைகளின் எதிரி இரும்பணன்
கதை: ஆனந்தி
படம்:
உத்தம்பூர், இமயமலைச் சாரலில் ஒரு கிராமம்...
டேய்! என்னைப் பிடி பார்ப்போம்!
ஊர்ப் பெரியவர்...
இருட்டிட்டு வருது... எல்லாரும் வீட்டுக்குப் போங்க!
இன்னும் கொஞ்ச நேரம் விளையாடறோமே...?
இரும்பணன் வந்து பிடிச்சுக்கிட்டுப் போயிடுவான். சொன்னதைக் கேளுங்க...
இரும்பணன் மறுபக்க மலைச் சரிவில் காட்டில் வசித்தான்.
ஹிமாபூரில் ஒரு குழந்தை பாக்கியில்லையாம்!
நம்ம கிராமத்திலும் ஏற்கெனவே மூனு குழந்தைகளைக் காணோம்...



ஆரும்பனியும் அவன் ஆட்களும். குழந்தைங்களைப் பிடிச்சுட்டுப் போறாங்க...
ஜாக்கிரதையா இருக்கணும்.
எவ்வளவு ஜாக்கிரதை யாக இருந்தும் குழந் தைகள் காணாமல் போகவே, கோயில் குருக்கள் உமாபட்டிடம்
குருஜி! நம்ம குழந்தை களைக் காப்பாத்த வழியே இல்லையா?
உமாபட், கோயிலில் பூஜை முடிந்ததும் தினமும் பிரார்த்தித்துக் கொண்டார்.
தேவி! கிராமத்துக் குழந்தைகளைக் காப்பாற்றிக் கொடு!
மறு நாள் உமாபட் வீடு திரும்ப...
கிரண் இன்னும் வீடு வந்து சேரலை. எனக்குப் பயமா இருக்கு...
உமாபட் மகனைத் தேடிக் கொண்டு சென்றார்...
முடிந்தவரை தேடியாச்சு. பனிப்புயல் வேற ஆரம்பிக்குது. திரும்பலாம்...
கிரண் அகப்படவேயில்லை. வேறு பல சிறுவர் சிறுமியரும் போன இடம் தெரியவில்லை.
உத்தம்பூரில் கிழம் கட்டைகள்தான் மிஞ்சப் போகிறார்கள்!



உமாபட் மிகவும் வருந்தி...
தேவி! பல ஆண்டுகளாக முறையிட்டு வருகிறேனே! குழந்தைகள் எங்கே? ஒரு வழி காட்டு!
மேலும் சில தினங்கள் சென்று...
குருஜி! உங்களுக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது!
இதில் சந்தோஷப்பட என்ன இருக்கிறது?
பரமேசுவரி! இவனையாவது காப்பாற்றிக் கொடு!
'மகேச்வர்' என்று பெயரிட்டு வளர்த்தார்கள்...
குழந்தை சற்றுப் பெரியவனானதும்...
மகேஷ்! வெளியே போய் விளையாடாதே!
ஏம்மா?


என்னோட ஐந்து குழந்தைகளை ஜரும்பவான் கொண்டு போயிட்டான். நீதான் பாக்கி...
ஒரு நாள் மகேஷ் ஓடி விளையாட ஆசைப்பட்டு வெளியே போக...
ஐயோ குழந்தையைக் காணோமே!
குருஜி! பயங்கர ராக்ஷஸனைக் கண்ணால் பார்த்தேன்!
உமாபட் சோகத்துடன் தேவியிடம் முறையிட்டார்...
இப்படி சோதிக்கிறாயே, நியாயமா?
அன்றிரவு...
மானஸரோவரத்தில் வாழும் மஹாராஜ உங்களைக் காப்பான்!..
உமாபட்டை எழுப்பி... கனவைக் கூற...
மஹாராஜ யார்? மானஸரோவர் எங்கே இருக்கு?
எப்படியாவது கண்டு பிடியுங்கள்!


உமாபட் கிளம்பிச் சென்றார்-
மானஸரோவர் இருக்குமிடத்தைக் கண்டுபிடித்து அங்கேயே தவமிருக்கிறேன்...
ஆகா! மலைகளும் நதிகளும் என்ன அழகு!
அமைதி நீடிக்கவில்லை...
இந்தப் பனிப் புயலில் சிக்கிச் சாகாமல் தப்பினால் கடவுள் அருள்தான்...!
உறுதி தளராமல் நடந்து மானஸரோவரை அடைந்தார்...
மஹராசு! மஹராசு!
மஹராசு!
மஹராசு!
எத்தனை நாட்கள் ஆகிவிட்டன! கொண்டு வந்த உணவும் தீர்ந்து போச்சு. மஹராசு வரவில்லையே...


ஒரு நாள்
உமா பட்! உன் தவம் வென்றது. உனக்கு என்ன வேண்டும்?
தேவனே! எங்கள் குழந்தைகளைக் காப்பாற்று...
வெள்ளியால் கலப்பை செய்து, தங்க முனை பொருத்தி, ஊரிலுள்ள வயலில் உழுதால் உதவி வரும்!
உமா பட் ஊர் திரும்பியதும்...
மகாராஜாவைப் பார்த்தீர்களா?
குழந்தைகள் கிடைத்துவிடுவார்களா?
உங்களிடமெல்லாம் உள்ள வெள்ளி, தங்கம் அனைத்தையும் கொண்டு வாருங்கள்...
மகாராஜா சொன்னபடி வெள்ளிக் கலப்பை செய்து, தங்க முனை பொருத்துவோம்...


கலப்பையால், பூமியைப் பிளந்து உழுதார்கள்...
நிலம் அதிர்ந்தது...
ஐயோ, பூகம்பமா?
பயப்படாதீர்கள்!
பூமி பிளந்து, ஆயுதம் தாங்கிய தேவியர் பலர் தோன்றினர்...
மஹாசுவும் தோன்றி, அந்தப் படைக்குத் தலைமை ஏற்றார்...
அதோ, அந்த மலைச் சிகரத்தைத் தாண்டி மறுபுறம் இறங்கித் தாக்குவோம்!
அசுரப் படைகளுக்கும் மஹாசுவின் படைகளுக்கும் இடையே பயங்கர யுத்தம்...


அசுரர்களைத் தேவியர் தாக்க, ஜரும்பணன் மஹாசுவுடன் போரிட்டான்...
ஜரும்பணன் மடிந்ததும் குழந்தைகள் விடுதலை பெற்றனர்...
பெற்றோர்களிடம் பிள்ளைகளும் பெண்களும் விரைந்தனர்.
என் கண்ணே!
செல்வமே!
அடேயப்பா, எப்படி வளர்ந்து விட்டாய்...!
உத்தம்பூரில் மறுபடி குழந்தைகளின் சிரிப்பொலி கேட்டது...
என்னைப் பிடி, பார்க்கலாம்!
அவர்களை வீட்டுக்குள் போகுமாறு யாரும் விரட்டவில்லை...
அதோ, அந்த மலைச் சிகரத்தில்தான் மகேஷ்வர் வெற்றி பெற்றார். உங்களைக் காப்பாற்றினார்.
அந்த மலையை மகேசு என்றழைப்போம், தாத்தா!

அளவுக்கு மீறிய ஆணவம்



பள்ளிக்கூட விளையாட்டுத் திடலில் மாணவர்கள் நின்று கொண்டிருப்பதைப் போல, ஊரின் வெளிப் பக்கத்தில் பல மரங்கள் இருந்தன. கோயில் கோபுரம் தலைதூக்கி நிற்பதைப்போல் ,அந்த மரங்களின் மத்தியில் ஒரு தென்னை மரம் மிகவும் உயரமாக இருந்தது.

அந்தத் தென்னை மரம், தான் மிகவும் உயரமாக வளர்ந்திருப்பதை எண்ணி எண்ணி மகிழ்ச்சி கொண்டது. தன்னைத்தானே பாராட்டிக் கொண்டது. அளவில்லாத தற்பெருமை கொண்டிருந்தது. அந்தத் தற்பெருமை மெதுவாக வளர்ந்தது. ''நாமே உலகத்தில் உயரமான மரமாக இருக்கிறோம்'' என்று எண்ணிக் கொள்ளும் ஆணவமாக அது மாறியது.

அந்தத் தென்னை மரம் தன்னைச் சுற்றியிருந்த மற்ற மரங்களைக் கேலி செய்யத் தொடங்கியது. 'குள்ளா, குள்ளா' என்று அது பக்கத்திலிருந்த மரங்களைக்கூப்பிட்டு ஏளனம் செய்யும் பழக்கம் நாள்தோறும் அதிகரித்தது. அதனுடைய மட்டரகச் சொற்களைக் கேட்ட மற்ற மரங்களும் செடிகளும் புதர்களும் வேதனை கொண்டன. ஆனாலும், அவை பதில் பேசாமல் இருந்தன.

அந்தத் தென்னையின் அடிப்பாகத்தில் வயதான புதர் ஒன்று இருந்தது. அந்த மரத்தின் ஆணவப் போக்கைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று அது ஒருநாள் நினைத்தது. தென்னை மரத்தை அழைத்தது.

''நீ உயரமாக இருக்கலாம். அதற்காக மற்ற மரங்களைக் கேலி செய்தால் அது உயர்ந்த பண்பாக இருக்காது'' என்று அறிவுரை சொன்னது. அதைக் கேட்ட தென்னை மரம் ''தன்னால் ஒன்றைச் செய்ய முடியாத கிழவர்கள் அறிவுரை கூற மட்டும் முன்வருவார்கள்'' என்று சொல்லி அந்தப் புதரையும் மட்டம் தட்டி விட்டது.

ஒருநாள் வானத்தில் மழை மேகங்கள் திரண்டன. இடியும் மின்னலும் போட்டி போட்டுக் கொண்டு வெளிப்பட்டன. ஓர் இடி, மேகத்திலிருந்து வெளியே தாவியது. அதன் கண்ணில் மிக உயரமாக இருந்த தென்னை மரம் பட்டது. ஆகவே, அதன் மேல் அந்த இடி இறங்கியது. தென்னை மரம் கருகி அழிந்தது. ''அளவுக்கு மீறிய ஆணவம் கொண்ட தென்னை மரம் அழிந்து விட்டது'' என்று புதர், பக்கத்திலிருந்த செடியிடம் சொல்லி அதற்காக வருத்தப்பட்டது.

– மலையமான்.



★ சிறுவர்கள் விளையாடும் ஏற்றப் பலகை விளையாட்டை தொடர்ந்து 1,101 மணி 40 நிமிடம் ஆடியிருக்கின்றனர், ஜார்ஸ் பாட்ரிட்ஜ், தமார மார்குயஸ் என்ற சிறுவர்கள். இதை அபார்ன் உயர்நிலைப் பள்ளியில் 1977 மார்ச் 28 முதல் மே 13 வரை விளையாடினார்களாம்!

- சி. அருள்மணி, மொரப்பூர்.

எதோடு எது பொருந்தும்?
எது தனித்து நிற்கும்? - போட்டி



இங்குள்ள பதினோரு பொருள்களை இவை பயன்படுவதைப் பொறுத்து மூன்று வகைகளாகப் பிரிக்கலாம். ஒரு பிரிவில் 2, இரண்டாவது பிரிவில் 3, மூன்றாவது பிரிவில் 5. பிரித்த பிறகு ஒரு பொருள் எதிலும் சேராது தனியே நிற்கும். இவற்றைக் கண்டுபிடித்து எழுதியனுப்புங்கள். உங்களால் கண்டிப்பாக முடியும். கவனமும் முயற்சியும் மட்டுமே தேவை. பரிசு கண்டிப்பாக உண்டு.

எது பொருந்தும்? - போட்டி

பெயர் : __________

முகவரி : __________

பின்கோடு : __________

வயது : __________

முடிவு தேதி : 16.1.92


எத்தனை எத்தனை காலண்டர்கள்



கடிகாரம் பார்த்து மணியை அறிந்து கொள்ளத் தெரியாதவர்கள் இருக்கலாம். ஆனால், காலண்டரைப் பார்த்து ஒரு நாளையோ ஒரு கிழமையையோ கண்டு பிடிக்கத் தெரியாதவர்கள் குறைவுதான்! கடிகாரம் இல்லாத வீடு இருக்கலாம். ஆனால் காலண்டர் இல்லாத ஒரு குடிசை வீடு, ஒரு அலுவலகம், ஒரு பெட்டிக் கடை கூடக் கிடையாது. நமது அன்றாட வாழ்வில் காலண்டர்கள் ஓர் இன்றியமையாத இடத்தைப் பிடித்து விட்டன! காலண்டர் என்றதுமே நமக்கு ஆங்கிலக் காலண்டர்தான் நினைவுக்கு வருகின்றது. ஆனால், ஆங்கிலக் காலண்டர்களைத் தவிர வேறு பல காலண்டர்களும் இருப்பது உங்களுக்குத் தெரியுமா?

இந்துக்களின் காலண்டர்

சந்திரனின் வளர்ச்சி, தேய்வின் அடிப் படையில் நாட்கள் கணக்கிடப் படுகின்றன. இவையே திதி எனப்படுபவை. வளர்பிறையை சுக்லபட்சம் என்றும், தேய் பிறையை கிருஷ்ண பட்சம் எனவும் குறிக்கின்றன. மாதங்கள் 27 அல்லது 28 நாட்க ளாகப் பிரிக்கப்படுகின்றன. 60 மாதங் களுக்கு ஒரு முறை ஒருநாள் கூட்டிக் கொள்ளப்படுகிறது. வசந்தம் கோடை (கிருஷ்ம ருது), மழை (வர்ஷருது), இலை யுதிர் (சரத்ருது), குளிர் (ஹேம்நருது), காலம் என ஆண்டுக்கு ஆறு பருவங்கள். சூரியன் பயணம் செய்யும் திசை மாற்றத்தைத் துல்லியமாகக் கணக்கிட்டு ஆறு மாதங்கள் உத்ராயணம் எனவும், ஆறு மாதங்கள் தக்ஷிணாயனம் எனவும் ஆண்டு பிரிக்கப்படுகிறது. ஆண்டுக்கு 365 நாட்கள் என்பது கிருஸ்து பிறப்பதற்கு 1000 ஆண்டு களுக்கு முன்பே இருந்து வருகிறது.





எகிப்தியரின் காலண்டர்

பண்டைய எகிப்தியர் நைல் நதி வெள்ளப் பெருக்கெடுத்து ஓடும் காலத்தில், சூரியன் உதிப்பதற்கு முன்னதாக ஓர் ஒளி நட்சத்திரம் ஆண்டுக்கு ஒரு முறை உதிப்பதைக் கண்டனர். அது 365 ஆவது நாள் என்பதையும் அறிந்தனர். இப்படித்தான் ஆண்டுக்கு 365 நாட்கள் என்பது முடிவானது. ஆண்டு, 4 மாதங்கள் கொண்ட மூன்று பருவங்களாகப் பிரிக்கப்பட்டது. மாதம் 30 நாள். மீதி ஐந்து நாட்களை என்ன செய்வது? கடைசி மாதத்துடன் இதுவே சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது அரசாங்க நிர்வாகத்தில் பயன்பட்டு வந்தது. இவை தவிர, விவசாயிகள் தங்களுக்கு என்று வேறு மாதிரி காலண்டரை வைத்திருந்தனர். இது சந்திர உதயம் - மறைவைப் பொறுத்தது. 354 நாட்கள் ஓர் ஆண்டு! மீதியை எப்படிக் கணக்கிடுவது? இந்தக் குழப்பத்திலிருந்து மீள, மீதி 11 நாட்கள் தனிக் கணக்காக எடுக்கப்பட்டு இடையிடையே சேர்க்கப்பட்டன! ஆனால், இது நாளடைவில் கைவிடப்பட்டு, 365 நாட்கள் கொண்டதே ஓர் ஆண்டாக ஏற்கும் முறை பிரபலமானது.

முஸ்லீம் காலண்டர்

முகமது நபிகள் மெக்காவிலிருந்து மெதினாவுக்குச் சென்ற கி.பி. 622 ஆம் ஆண்டிலிருந்து முஸ்லீம் காலண்டர் அறிமுகமானது. இதன் பெயர் ஹிஜிரா. புத்தாண்டு நாள் ஜூலை 16 ஆம் தேதி. சந்திர உதயத்தை வைத்து 355 நாட்கள் கொண்டது ஓர் ஆண்டாக 12 மாதங்கள் கணக்கிடப்படுகின்றன.

365 நாட்களைப் பூர்த்தி செய்யக் கூடுதல் நாட்கள் எதுவும் சேர்க்கப் படுவதில்லை. இதனால், பருவங்கள் குறிப்பிட்ட மாதங்களில் வருவதில்லை. ஆனால், ரம்சான் மட்டும்

ஒன்பதாவது மாதத்தில் வருவதாக உலக முழுவதும் கணக்கிடப்படுகிறது. இதற்கான நோன்பும் அனுஷ்டிக்கப்படுகிறது.

ரோமன் காலண்டர்

இன்று உலக முழுவதும் பயன்பட்டு வரும் ஆங்கில காலண்டரின் தாய் ரோமன் காலண்டர்தான். இது ரோமுலஸ் மன்னரால் கி. மு. 78-ல் தொடங்கப்பட்டது. இதற்குப் பத்து மாதங்களே உண்டு! புத்தாண்டு மார்ச் மாதத்தில் தொடங்கியது! 30 நாட்கள் கொண்ட 6 மாதங்கள். 31 நாட்களைக் கொண்ட 4 மாதங்கள். மீதி நாட்களை எப்படிக் கணக்கிடுவது? பாம்பிலியன் மன்னர் ஜனவரி, பிப்ரவரி மாதங்களைச் சேர்த்தார். அப்படியும் சரியாகவில்லை. குழப்பத்துடனேயே இது பின்பற்றப்பட்டது! ஜூலியஸ் சீசர் வானியல் அறிஞரான சொசிஜினஸை, இந்தக் குழப்பத்திற்கு ஒரு முடிவு காண வேண்டினார். ஆண்டுக்கு $365\frac{1}{4}$ நாள் என்பதையும் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை பிப்ரவரியில் ஒருநாள் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் இவரே செய்தார்.

சீன காலண்டர்

ஆண்டுக்கு $365\frac{1}{4}$ நாட்கள் என்பதை முதலில் கணக்கிட்டவர்கள் சீனர்களே! கி. மு. 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஷாங் மன்னர்தான் இதைச் செய்தார். இது அடுத்த ஆண்டில் சில மாற்றங்கள் பெற்றது. பருவங்களின் பெயரே மாதங்களுக்கும் வைக்கப்பட்டன. மாதங்களும் நாட்களும் கணக்கிடப்பட உதவியவை அவர்களது வான சாஸ்திர அறிவும் சூரியனின் நிழல் சாயும் ஒரு கம்பமும்தான்! பன்னிரண்டு ஆண்டுகள் ஒரு சுற்றாகக் கணக்கிடப்பட்டு, ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு விலங்கின் பெயர் சூட்டப்பட்டுள்ளது!

கிரிகோரியன் காலண்டர்

ரோமுலஸ் அறிவித்த ரோமன் காலண்டரில் உள்ள சில குறைகளைப் போக்க 1582 ஆம் ஆண்டு போப்பாண்டவர் கிரிகோரியன் சில மாற்றங்களைச் செய்தார். இவை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இதன்படி 1700, 1800, 1900 ஆண்டுகள் லீஃப் ஆண்டுகள் அல்ல!

எலியாராலும் பயனுண்டு!



லண்டனில், உயரத்தில் டெலிபோன் போடும் வேலை நடந்து கொண்டிருந்த போது டெக்னீஷியன்களுக்கு ஒரு பிரச்சினை!

33 அடி நீளமுள்ள, ஒரு குழாய் வழியே டெலிபோன் கம்பியை நுழைத்து வெளியே கொண்டு வர வேண்டும். இதை எப்படிச் செய்து முடிப்பது என்று, டெலிபோன் துறை நிபுணர்கள் மூளையைக் கசக்கி யோசித்த போது, டெக்னிஷியன்களில் ஒருவருக்கு, ஓர் அபார யோசனை தோன்றியது. அதன்படி, அந்தப் பக்கமாக ஓடிக் கொண்டிருந்த, ஒரு சுண்டெலியைப் பிடித்தார். அதன் வாலில், கம்பியின் முனையைக் கட்டி, குழாய்க்குள் எலியை விரட்டி விட்டார். சில நிமிடங்களில் குழாயின் மறு புறத்தில் சுண்டெலி ஓடி வர, தயாராய் நின்றிருந்த ஒருவர் சுண்டெலியைப் பிடித்துக் கம்பியை அவிழ்க்கப் பிரச்னை தீர்ந்தது! ''தலை தப்பியது தம்பிரான் புண்ணியம் என்று'' தான் செய்த வேலைக்குக் கூலி வாங்காமல் மிஸ்டர் சுண்டெலியார் ஓடி ஒளிந்தார்!

- ஆர். ஹாஜிராபானு, நிடூர்.

தோட்டத்தில் உள்ள பத்து பாம்புகளைக் கண்டு திருடன் பயப்படுகிறான்! பாம்புகளை உங்களால் பிடிக்க முடிகிறதா, பாருங்கள்!



இரான் நாட்டுப் பழங்கதை



அப்படிப்பட்ட ஒரு மாவீரன் எங்கும் இருந்ததில்லை என்று புகழ் பெற்றவன் ருஸ்தம். அஞ்சா நெஞ்சினன். குதிரை சவாரியில் வல்லவன். திறமைமிக்க வில்லாளி. கத்திச் சண்டையில் தன்னை மிஞ்சக்கூடியவர்கள் யாருமில்லை என்று புகழ்பெற்றவன்.

அன்பு மனைவி தஸ்மினாவிடம் ருஸ்தும் அடிக்கடி சொல்லுவான். ''எனக்கு ஒரு மகன் பிறக்கட்டும். அவனை வீராதிவீரனாக வளர்ப்பேன்.''

அவர்கள் நாட்டிலே போர் வந்தது.

என்னை மிஞ்ச யாருமில்லை!

நாட்டின் வட எல்லையிலே எதிரிகள் வந்து விட்டார்கள் என்று போருக்குச் சென்றான் ருஸ்தம். ஒரு சேனைப் படைக்குத் தலைமை வகித்துப் போர்க்களம் போனான்.

அப்போது தஸ்மினா தாயாகும் நிலையில் இருந்தாள். ''நான் போரிலிருந்து வர நாளாகும். மகன் பிறந்தால் செய்தி அனுப்பு'' என்று சொல்லி மனைவியிடம் விடைபெற்றுச் சென்றான் ருஸ்தம்.


போகும் போது, ''இந்தா, இந்தப் பவழ மாலையை வைத்துக் கொள். ஏதாவது ஆபத்து என்றால் இதை எனக்கு அனுப்பு. நான் ஓடி வருவேன்'' என்று மனைவிக்குத் தைரியம் சொல்லியிருந்தான்.

சில மாதங்கள் கழித்து தஸ்மினாவுக்கு ஓர் அழகிய ஆண் குழந்தை பிறந்தது.

தஸ்மினாவுக்கு பயம் வந்து விட்டது. போர் நடைபெறும் முறையைப் பார்த்த போது அது இப்போதைக்கு முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. பிறந்திருப்பது ஆண் குழந்தை என்பதால், அவன் பெரியவன் ஆனதும் ருஸ்தம் அந்தப் பிள்ளையையும் போருக்கு அழைத்துப் போய் விடுவானோ என்று பயந்தாள் அவள்.

''எனக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது'' என்று பொய்யாகச் செய்தி அனுப்பி விட்டாள் ருஸ்தமுக்கு.

தமிழில்: தம்பி சீனிவாசன்



பையன்தான் பிறக்க வேண்டும். அவனை ஓர் வீரன் ஆக்க வேண்டும் என்று மனக் கோட்டை கட்டியிருந்த ருஸ்தம், இந்தச் செய்தி கேட்டதும் ஏமாற்றமடைந்தான். ஊர் திரும்பவும் அருமை மனைவி தஸ்மினாவைப் பார்க்கவும் ஆசை இல்லாமல் வட பகுதியிலேயே பல ஆண்டு காலம் போரிட்டுக் கொண்டு தங்கி விட்டான்.

குழந்தைக்கு ஷோரப் என்று பெயர் வைத்தாள் தஸ்மினா. ஆசையுடன் வளர்த்தாள். ''உன் தந்தை பெரிய வீரர் தெரியுமா?'' என்று பெருமையுடன் சொல்லுவாள். வெகு விரைவிலேயே ஷோரப் வீர விளையாட்டுக்களில் ஆர்வம் காட்டி, போர்ப் பயிற்சிகளில் தேர்ச்சியடைந்தான். அஞ்சா நெஞ்சம் கொண்ட இளம் வீரனாக உருவானான். தந்தையின் பெருமைகளையும் வீரச் செயல்களையும் பற்றிக் கேள்விப்பட்ட போது அவரைப் பார்க்க ஆசைப்பட்டான்.

தஸ்மினாவுக்கு அருமை மகனை விட்டுப் பிரிய மனமில்லை. என்னென்னவோ காரணம் கூறி மகனுடைய ஆசையைக் குறைக்கப் பார்த்தாள். ஆனால் அவன் கேட்கும் வழியாக இல்லை! இனித் தடுக்க முடியாது என்று நிலை வந்தவுடன் தனது பவழ மாலையை மகன் கழுத்தில் அணிவித்தாள். ''மகனே, இது அப்பாவின் ஆசை அடையாளம். இதைப் பார்த்தால் அவர் உன்னை அடையாளம் தெரிந்து கொள்வார்'' என்றாள்.

பல நாள் பயணம் செய்து ஷோரப் தன் தந்தை இருந்த இடத்தை அடைந்தான். அந்தப் பாசறைக்குள் சென்று ருஸ்தமைப் பார்க்க முடியவில்லை. ருஸ்தமை வெளியே வரவழைக்க ஒரு தந்திரம் செய்தான் ஷோரப்.

''ஈரான் தேசத்திலேயே சிறந்த வீரன் நான்தான். என்னை மிஞ்ச யாருமில்லை! இதைப் போய் உங்கள் ருஸ்தமிடம் சொல்லுங்கள்'' என்று சில படை வீரர்களிடம் பெருமையடித்துக் கொண்டு அவர்களை உசுப்பி விட்டான். படை வீரர்கள் இதை ருஸ்தமிடம் வந்து கூறினர்.

ருஸ்தம் ஆச்சரியப்பட்டான். ''அது யாரடா என்னை வம்புக்கு இழுப்பது?'' என்று கோபத்துடன் கர்ஜித்து பாசறைக்கு வெளியே வந்தான் ருஸ்தம்.

ஷோரப் விரும்பியதும் இதைத் தானே. தந்தையின் வீர தரிசனம் கிடைத்த மகிழ்ச்சியின் புன்னகையுடன் நின்றான் அவன்.

அந்தக் கால வழக்கப்படி ருஸ்தம் தன் ஆட்களை அனுப்பி ஷோரப்பை ''ஒண்டிக்கு ஒண்டி'' சண்டைக்குத் தயாராக இருக்கச் சொன்னான். ருஸ்தமும் அவனும் அடுத்த நாள் மைதானத்தில் ஒருவருடன் ஒருவர் மோதிக் கொள்ள வேண்டும்.

அடுத்த நாள்.

வீர உடை அணிந்து பெரிய குதிரையிலேறி,கையில் ஈட்டியும் இடையில் வாளுமாய் ருஸ்தம் ஒருபுறம், ஷோரப் ஒருபுறம் கிளம்பினர்.

சண்டையிடத் தொடங்கு முன், தான்தான் அவரது மகன் என்பதைத் தெரிவிக்க ஷோரப் எண்ணினான். ''வீராதி வீரரே! ருஸ்தம் வீரரே, தங்களது அருமை மகனைச் சந்திக்க விருப்பமா?'' என்று கேட்டான்.

ஆத்திரத்திலும் கோபத்திலும் இருந்த ருஸ்தம் பேச்சை வெட்டினான். ''எனக்கு மகனே இல்லை. இந்தப் பேச்சை விடு. சவால் விட்ட உனது வீரத்தைச் சோதிப்பேன். நமக்குள் யார் ஈரானின் சிறந்த வீரன் என்று பார்ப்போம்'' என்று சீறினான்.

குதிரையிலிருந்து இறங்காமலே எதிரும் புதிரும் ஓடி நீண்ட ஈட்டிகளால் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டனர். பிறகு கீழே குதித்து வலுவான கத்திகளை வீசி பயங்கரமாகச் சண்டையிட்டார்கள்.

தனது போர்த் திறமைகளையெல்லாம் காட்டித் தந்தையை வியக்கச் செய்தான் ஷோரப்.

''எவ்வளவு அழகாகப் போரிடுகிறான் இந்தச் சிறுவன்!'' என்று ருஸ்தம் வியப்படைந்தான். ஆனாலும், ஒரு சிறுவனுடன் எத்தனை நேரம்தான் போரிடுவது என்று அலுப்போடும் ஆவேசத்தோடும் கத்திச் சண்டை இட்டான். பல முறை அவன் வீசிய கத்தி ஷோரபைத் தாக்கி வெட்டியுமிருக்கும். ஆனால் தந்தைக்கு நிகரான பயிற்சி பெற்றிருந்த ஷோரப் மிகத் திறமையாக ஒதுங்கித் தன்னைக் காத்துக் கொண்டான்.

நேரம் ஆக ஆக ருஸ்தம் களைத்து விட்டான். கொஞ்சம் தடுமாறினான். ஷோரப் கலங்கி விட்டான். தந்தையைக்



காயப்படுத்தி விடப் போகிறோமோ என்று கவலைப்பட்டான். தனது கேடயத்தை மெல்லத் தாழ்த்தி கவனித்தான்.

அந்த அரைக்கணத் தயக்கத்தில் ருஸ்தம் தனது வாளை ஓங்கவும் ஷோரப் படுகாயமுற்றுக் கீழே விழுந்தான்.

''தந்தையே! எனது அருமைத் தந்தையே!'' என்று அலறியபடி விழுந்தான் ஷோரப்.

''எனது எதிரியை வீழ்த்தி விட்டேன் பார்,'' என்று கத்தியை உயர்த்தித் தனது



படை வீரர்களைப் பெருமையுடன் நிமிர்ந்து பார்த்த ருஸ்தம் காதில் இந்த அலறல் விழுந்தது. ''அப்பாவா?' யாரை இவன் இந்தப் போர்க்களத்தில் அப்பா என்று அழைக்கிறான்!'' என்று வியந்தபடி ருஸ்தம் குனிந்து மகனைப் பார்த்தான்.



கத்தி காயத்தினால் இரத்தம் சொட்ட வீழ்ந்து கிடந்த ஷோரப் முனகி னான். ''அப்பா, ருஸ்தம் அப்பா, நான் வேறு யாருமில்லை! உங்கள் மகனே தான்! இது அம்மாவுக்கு நீங்கள் தந்து விட்டு வந்த பவழமாலை. இங்கே வரக் கிளம்பிய போது அம்மா கொடுத் தாள்.''


ருஸ்தம் திகைப்போடு ஷோரப் பைப் பார்த்தான்! பெண் பிறந்ததாக தஸ்மினா வேண்டுமென்றே தவறான செய்தி அனுப்பியது பற்றியும் சொன் னான். பவழ மாலையை வாங்கிப் பார்த் தான். சந்தேகமில்லை. அது தான் தஸ்மி னாவுக்குக் கொடுத்ததே என்பதை உறுதி செய்து கொண்டான். தன்னால் அடி பட்டு வீழ்ந்தது தனது மகன்தான் என்று தெரிந்ததும் ருஸ்தம் ஒரே கணத்தில் பெருமகிழ்ச்சியும் அளவிலாத துக்கமும் அடைந்தான். இத்தகைய சிறந்த மாவீர னான ஒருவன் தனது மகன் என்பதில் மகிழ்ச்சி; அவனுக்குத் தன்னாலேயே மரண காயம் ஏற்பட்டு விட்டதே என்று துக்கம்.

மரண காயமுற்ற மகனைக் கட்டித் தழுவிக் கதறினான் ருஸ்தம். ''அப்பா, நீங்கள் பெரு வீரர். அழ வேண்டாம். நான் வீரப் போர் புரிந்துதான் மரண மடைகிறேன். என் ஆசை ஒன்றே. நீங்கள் மறுபடி அம்மாவுடன் சேர்ந்து வாழ வேண்டும். என் பிரிவால் வருந் தும் அம்மாவை நீங்கள்தான் தேற்ற வேண்டும்'' என்றான் ஷோரப்.

''என் வீர மகனே, உன் விருப் பத்தைக் கண்டிப்பாக நிறைவேற்று வேன். உன் தாயாரை நான் பார்த்துக் கொள்ளுவேன்'' என்று மகனுக்கு உறுதி கூறினான் ருஸ்தம்.

மகன் மறைந்த பிறகு ருஸ்தமுக்கு எதுவுமே பிடிக்கவில்லை. மின்னல்கண நேரமே தோன்றி, உலகையே ஒளி வெள் ளத்தில் ஆழ்த்தி மறைவது போலல் லவா அருமை மகன், அவன் முன் வந்து, தனது வீரத்தைக் காட்டி வியக்க வைத்து விடைபெற்றுக் கொண்டு போய் விட் டான் என்று கலங்கினான். வாளுக்கு விடைகொடுத்து விட்டு ஊர் திரும்பி னான். தஸ்மினாவுடன், அருமை மக னின் வீரத்தைப் புகழ்ந்து பேசி வியந்த படி, அவன் நினைவாகவே வாழ்ந்தான்!

ருஸ்தம் ஷோரப் கதை இரான் மக்க ளிடம் சாகா வரம் பெற்ற கதையாகத் திகழ்கிறது!


சிரிப்...
யானையை தண்ணியிலே இறக்கினா என்ன ஆகும்?
"நீர் யானை" ஆகும்!
குடந்தை சுவீட்ரவி
அந்தக் கடைக்காரர் ரொம்ப சிக்கன மானவர்னு, எப்படிச் சொல்றே?
நாலு கடையிலே வாங்கின சுண்டலை வெச்சே ஆயுத பூஜை கொண்டாடிட்டாரே?
எஸ். பாண்டியராஜ்
ஒருவர் நீரில் விழுந்தா அவர் கையைப் பிடித்துத் தூக்கக் கூடாது. தலைமுடியைப் பிடிச்சுத் தூக்கணும்
அவர் மொட்டை அடித்திருந் தால்?
திருமலைக்குமார், கல்லிடை
நான் செக்கிங் இன்ஸ்பெக்டர்டா!
டிரைவர் கண்டக்டர் விளையாட்டு விளையாடும்போது திடீர்னு குறுக்கே வரே?
குடந்தை சுவீட் ரவி
ஏது முப்பது ரூபாய்?
பாடப் பத்து ரூபாய் தந்தாங்க. நிறுத்த இருபது தந்தாங்க!
ந. நவமணி
செ

கலகமா செய்தாய்?



ரா.ஜமிநாதன்

பல நூற்றாண்டுகளுக்கு முன் குமாலூன் பகுதியைக் குமெளன் என்ற அரசன் ஆண்டு வந்தான். அவனது நீதி நெறி தவறாத ஆட்சி ராமராஜ்யத்தை நினைவு படுத்தியது. எனவே, நன்றி மிக்க மக்கள், அப்பகுதியைத் தங்களது அருமை மன்னனின் பெயராலேயே குமாலூன் என்று அழைத்தனர். மக்களின் நலத்தையே தனது நலனாகக் கொண்டு குமெளன் ஆட்சி புரிந்தான்.

ஒரு நாள், மன்னனிடம் ஒரு முறையீடு வந்தது. புகார் செய்தவர் குமாலூன் இராஜ்ஜியத்தின் ஒரு பகுதிக்கு அதிகாரியாக இருந்த ஒரு பிரபு.

'எனது அதிகாரத்திற்கு அடங்கிய பகுதியில் நளன், தளன் என்ற இரட்டையர்கள் அடிக்கடி புரட்சி செய்கிறார்கள். எத்தனை கூலி கொடுத்தாலும் போதவில்லை என்று கலகம் செய்து, வீண் வம்புக்கு வருகிறார்கள். சண்டை செய்வதில் வல்லவர்களாக இருப்பதால் யாராலும் இவர்களை அடக்க முடியவில்லை. இவர்களை வளர விடுவது ஆட்சியைப் பாதிக்கும். அரசர் இதில் தீவிரம் காட்டி இவர்களை அடக்க வேண்டும்' என்று அந்தப் பிரபு முறையிட்டிருந்தார்.

''தரும நீதி தவறாத எனது ஆட்சியில், இப்படிப்பட்ட அரக்க குணம் படைத்த மக்களா!'' என்று அதிசயப்பட்ட மன்னன், தனது படைத் தலைவனை அழைத்து ''அந்த இரட்டையர்களை உடனே சென்று சிறைப் படுத்தி வாருங்கள்'' என்று உத்திரவிட்டான்.

இரட்டையர்களான நளனும், தளனும், புகார் வந்தது போல் கலகக்காரர்கள் அல்ல. மிகச் சிறந்த வீரர்கள். எந்தவிதக் கடினமான பணிக்கும் அஞ்சாதவர்கள். உண்மையான உழைப்பாளிகள். தரும நியாயங்களுக்குக் கட்டுப்பட்டவர்கள். இருவரும் சேர்ந்து ஐம்பது பேர் செய்யக்கூடிய அசுர வேலையைத் துரிதமாக நொடியில் முடித்து விடுவார்கள்!

ஐம்பது ஆள் வேலையை அவர்கள் இருவருமே செய்வார்கள் என்றால் அந்த அளவுக்கு அவர்களுக்குப் பசி வருமல்லவா? அதனால் நாற்பது ஆள் சாப்பிடவேண்டிய சாப்பாட்டைச் சாப்பிட்டால்தான் அவர்களது பசி அடங்கும்!

அவர்களை வைத்து வேலை வாங்கிய பிரபு, ஐம்பது ஆள் வேலையை மட்டும் கடுமையாக வாங்கிக் கொண்டு, கூலி தரும்போது ஒரு ஆள் கூலியை மட்டும் தந்து வந்தார். நளனுக்கும் தளனுக்கும் அது போதவில்லை. அவர் செய்வது அநியாயம் என்று சுட்டிகாட்டி அதிகக் கூலி கேட்டனர். பிரபு தருவதற்கு மறுத்தார். இரட்டையர்கள் விடவில்லை. பிரச்னை பெரிதானது. கூடவே வேலை செய்தவர்கள், இரட்டையர்களின் வேண்டுகோளில் இருந்த நியாயத்தை எடுத்து உரைத்தனர். பிரபு அந்த நியாயத்தைக் கேட்கவில்லை. குமாலூனிடம் புகார் செய்துவிட்டான். அதுவும், அவர்கள் அதிகக் கூலி கேட்டு புரட்சி செய்கிறார்கள் என்று! அவர்கள் ஐம்பது ஆள் வேலையைச்

செய்கிறார்கள் என்பதை அரசரிடம் தெரிவிக்கவில்லை!

அரசன் அனுப்பிய படைத் தலைவன் வந்து சேர்ந்தான். தங்களைச் 'சிறைப் பிடித்து வரும்படி அரசர் அனுப்பியுள்ளார்' என்பதைக் கேட்டதும் இரட்டையர்கள் வெகுண்டனர்.

''தரும நீதி தவறாத நம் அரசரா இப்படிப்பட்ட அநியாய உத்தரவைப் பிறப்பித்தார்! என்ன குற்றத்திற்காக எங்களைச் சிறைப் படுத்த விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்காத வரை நாங்கள் சிறைப்பட விரும்பவில்லை'' என்று இருவரும் பணியவோ; சிறைப் படவோ மறுத்தனர்.

படைத்தலைவன் ஒரு முரடன். தன் படைகளோடு, நிராயுத பாணிகளாக நின்ற இரட்டையர்களை அவன் வளைத்துக் கொண்டான். அவர்களுக்குப் போக்குக் காட்டிய இரட்டையர்கள் அங்கிருந்து தப்பி ஓடினர்.

''இரட்டையர்களைச் சிறைப் பிடிக்க முடியவில்லை. அவர்கள் எதிரே நின்றால் நம்முடைய பலத்தில் பாதி அவர்களிடம் போய்விடுகிறது'' என்று அரசனுக்குச் செய்தியனுப்பினார் படைத்தலைவர்.

தப்பி ஓடிய இரட்டையர்கள் ஓடி ஒளியவில்லை. படைத் தலைவன் தனது படையை நடத்தித் தலைநகருக்கு வர ஏழுநாட்கள் எடுத்துக் கொண்ட தொலைவை, மூன்றே நாட்களில் கடந்து, அவர்கள் அரண்மனையை அடைந்தனர்.

அவர்களுடைய நெடிய உருவத்தைப் பார்த்து நடுங்கினர் காவலர்கள். ''அரசர் தேடிக் கொண்டிருக்கும் நளனும் தளனும் வந்திருக்கிறார்கள் என்று தெரிவி'' என்று காவலர்களிடம் தெளிவாகத் தெரிவித்தனர் இரட்டையர்கள்.

அரசனுக்கு ஒரே வியப்பு. படைத் தலைவன் என்னவானான் என்பது தெரியவில்லையே என்று எண்ணிய படி, இரட்டையர்களை வர அனுமதித்



தான்.

உள்ளே வந்து அரசனைப் பணி வுடன் வணங்கிய இரட்டையர்கள், ''அரசே, எந்தக் குற்றமும் செய்யாத எங்களை, தரும நீதி தவறாத தாங்கள் சிறைப்படுத்தி வரச் சொன்னீர்க ளாமே?'' என்று துணிச்சலாகக் கேட் டனர்.

அவர்களது எளிமையான தோற்றத் தாலும் பணிவான பேச்சாலும், துணிவு மிக்க கேள்வியாலும் கவரப்பட்ட மன் னன், ''நீங்கள் கலகம் செய்கிறீர்க ளாமே? புரட்சி செய்பவர்களைக் கைது செய்யாமல் என்ன செய்வது?'' என்று கேட்டார்.

''எங்களுக்குத் திறமை இருக்கிறது என்று ஐம்பது ஆள் வேலையை வாங்கிக் கொள்ளும் பிரபு, ஓர் ஆள் கூலியை மட்டும் கொடுத்தால் எங்கள் பசிக் கொடுமை எப்படித் தீரும்? இதைப் பற்றிக் கேட்டால், கலகம் செய்கிறார்கள் என்று உங்களிடம் புகார் கூறுகிறார். இது நியாயமா'' என் றனர் இரட்டையர்.

''அப்படியா! இதை, பிரபு என் னிடம் மறைத்து விட்டாரே!'' என்று வியந்தான் அரசன்.

"எங்களைக் கடுமையாக வேலை வாங்குங்கள், அதே சமயம் வயிறு நிறையச் சாப்பாடு போடுங்கள்!'' என்று பணிந்தனர் இருவரும்.

அரசன் யோசித்தான். பிறகு, ''அதோ தெரிகின்றதே பனிமலை... அதில் ஆணிச் செருப்பு அணிந்து கொண்டு, வேகமாக ஏற வேண்டும். அங்கிருந்து சறுக்கிக் கொண்டு கீழே வர வேண்டும். இப்படி மூன்று முறை



செய்து காட்டுங்கள். முடியுமா உங்களால்?" என்று கேட்டார்.

''இதோ!'' என்று கிளம்பிய இருவரும், நொடியில் அதை முடித்துக் காட்டினர். அன்று இரவு அரசர் அவர்களுக்கு விருந்து கொடுத்தார்.


''பாதி வயிறுதான் நிறைந்தது!'' என்றனர் இரட்டையர் இருவரும்.

அடுத்த நாள் இருவரையும் அழைத்த மன்னன், "பத்து காத தூரத்தில் ''மோதியா பாதா'' என்ற முத்து மலை இருக்கிறது. அதிலிருந்து மாவுக் கல் பாளங்களை உடைத்து வந்து, கண்டவர், வியக்கும்படி ஓர் அழகான மாளிகையைக் கட்டுங்கள். முடியுமா உங்களால்?'' என்று கேட்டார்.

இரட்டையர்கள் கி ள ம் பி ன ர். யானைகளையே உருட்டி வரும் பயங்கர வேகம் நிறைந்த பனி ஆறுகளைக் கடந்து இரட்டையர்கள், அபாயம் நிறைந்த மோதியா பாதா மலையை அடைந்தனர். இ ர வு பகல் பாராது உழைத்தனர். மன்னனும் அவர்களுக்குத் தெரியாது அவர்களது வேலையைக் கண்காணித்தான். அவர்கள் மேல் இருந்த சந்தேகம் தீர்ந்தது. உண்மையான உழைப்பாளர்கள் என்ற எண்ணம் வலுப் பெற்றது.

தங்களது அயரா உழைப்பால் இரட்டையர்கள் காண்போர் பிரமிக்கத் தக்க அளவில் அற்புதமான மாளிகை ஒன்றை உருவாக்கினார்கள். அரசன் மனம் மகிழ்ந்து போனான்! அந்த மாளிகை அமைந்த ''சாலம்பட்டி'' என்ற ஊரையே அவர்களுக்குப் பரிசாக வழங்கினான். பெருமைப் படுத்தினான். பிரபுவை அழைத்துத் தண்டித்தான்.

சாலம்பட்டியில் இரட்டையர்கள் நடத்திய நீதிநெறி வழுவாத ஆட்சியை இன்னமும் குமாவூன் பகுதி மக்கள் பெருமையோடு தங்கள் நாட்டுப் பாடல்களில் நினைவு கூர்கிறார்கள். சில குடும்பத்தினர் அவர்களைத் தெய்வமாகவே கூட வழிபட்டு வருகின்றனர்.



ரப்பர்

ஆழி

தாவரங்கள் தங்களிடமிருந்து, வண்ணப் பசை, எண்ணெய், கோந்து, குங்கிலியம், பால் போன்ற பலவிதமான திரவப் பொருள்களை வெளிப்படுத்துகின்றன. அவற்றில் ஒன்றுதான் ரப்பர் பால். ரப்பர் பால் என்பது, கோந்து, எண்ணெய், புரோட்டீன், அமிலங்கள், உப்புக்கள், சர்க்கரை, ஹைட்ரோ கார்பன் முதலியவை கலந்ததுதான். 'லாடெக்ஸ்' என்னும் ரப்பர் பாலில் 50 அல்லது 60 சதவீதம் ஹைட்ரோகார்பனும் ரெஸின் என்னும் பொருளும் தான்.

முதன் முதலில் ரப்பரின் உபயோகத்தைத் தென் அமெரிக்கர்கள் தாம் அறிந்திருந்தார்கள். சுமார் 475 ஆண்டுகளுக்கு முன்பு தான் ரப்பரைப் பற்றி உலகின் மற்றபாகங்களுக்கும் தெரிய வந்தது.



தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களைத் தேடி அலைந்த ஸ்பானிஷ் மக்கள், தென் அமெரிக்காவின் கிராமங்களைக் கொள்ளையடிக்கச் சென்ற போது அங்கே சில குழந்தைகள் ஒரு மரத்தின் பட்டையிலிருந்து வழியும் பாலை எடுத்து...




...உருண்டையாக உருட்டி வைத்துக் கொண்டு விளையாடுவதையும், அந்தப் பொருள் பூமியில் விழுந்தால் எம்பிக் குதிப்பதையும் கண்டார்கள்.



தென் அமெரிக்க கிராம மக்கள் அந்த மரத்தைக் 'கூச்சீ' என்று குறிப்பிட்டார்கள். கூச்சீ என்றால் 'கண்ணீர் வடிக்கும் மரம்' என்பது பொருள். அந்த மரங்கள் உலகில் வேறெங்கும் வளர்வதை அவர்கள் விரும்பவில்லை.

1870- இல், ஹென்றி விக்ஹாம் என்பவர் மிகுந்த சிரமத்துடன் பிரேஸில் நாட்டிலிருந்து, ரப்பர் மரத்தின் 70,000 விதைகளை ஒருவருக்கும் தெரியாமல் கொண்டு போனார். அவை இங்கிலாந்தில் பயிரிடப்பட்டன. அங்கே சுமார் 2000 ரப்பர் மரக் கன்றுகள் முளைத்தன. அங்கிருந்து ரப்பர் மரக் கன்றுகள் மிக ரகசியமாக 1905-இல் இலங்கைக்கும், பிறகு அங்கிருந்து மலேசியாவுக்கும் கொண்டு செல்லப்பட்டன.






ரப்பர் பாலுக்கு லாடெக்ஸ் என்று பெயர். ரப்பர் பாலின் நிறம் வெள்ளைதான் என்றாலும், பருவ காலத்திற்குத் தகுந்தாற் போல் அது மஞ்சளாகவும் வெளிர் ஆரஞ்சாகவும், சாம்பல் நிறத்திலும் இருக்கும்!



சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பே, தென் அமெரிக்க செவ்விந்தியர்கள், ரப்பர் பாலிலிருந்து செருப்புகளும், கிண்ணங்களும், புட்டிகளும் செய்தார்கள்.




ஒரு காலத்தில், இங்கிலாந்தில் சுமார் ஒரு கன செ.மீ. அளவுள்ள ரப்பர் துண்டு 75 அமெரிக்க செண்ட் மதிப்புக்கு விற்கப்பட்டது.

1770-இல், ஜோஸப் பிரிஸ்ட்லி என்னும் வேதியல் அறிஞர் (ஆங்கிலேயர்) இது பென்சில் கோடுகளை அழிப்பதால் இதற்கு 'ரப்பர்' என்று முதன் முதல் பெயரிட்டார்.




ரப்பரைப் பயன்படுத்தி 'மழைக் கோட்டு' தயாரிக்கலாம் என்பதை 'சார்லஸ் மாசின்டோஷ்' என்னும் ஸ்காட்லாந்துக்காரர் 1823-இல் கண்டுபிடித்தார்.

உருகிய நிலையில் ரப்பருடன் கந்தகத்தைச் சேர்த்தால் உறுதியாகவும் பயனுள்ளதாகவும் இருக்கும் என்பதை 1839-இல் 'குட் இயர்' என்னும் அமெரிக்கர் கண்டுபிடித்தார். அதன் பிறகுதான் ரப்பரின் உபயோகம் அதிகமாயிற்று.



1896-இல் தான் வாகனங்களுக்கான காற்றடைக்கப்பட்ட ரப்பர் டியூப்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

ரப்பர் மரம் 18 முதல் 30 மீட்டர்கள் உயரம் வரை வளரும். 2 முதல் 3 மீட்டர்கள் சுற்றளவு இருக்கும். வளர்ந்து 7-வது வருடத்திலிருந்து பலன் தர ஆரம்பிக்கும். அதிலிருந்து சுமார் 50 வருடங்களுக்கு ரப்பர் பால் சேகரிக்கலாம்.




ஒரு வருடத்தில் ஒரு மரத்தில் 150 வெட்டு வாய்களை உண்டாக்கலாம். அடிமரத்தின் மேலும் கீழும் சுமார் 35 செ.மீ. விட்டுவிட்டு, மற்றப் பகுதிகளில் இந்தக் கீறல்களை உண்டாக்குவார்கள். 10 வருடங்களில் அதன் பட்டை மறுபடியும் வளர்ந்துவிடும். ஒரு கூரிய கத்தியால், சுமார் 1.25 செ.மீ. கனத்திற்கு ரப்பர் மரத்தின் பட்டை அகற்றப்பட்டு அதில் ஓர் உலோகக் கிண்ணம் பொருத்தப்படுகிறது. அதில் பால் வடிகிறது. சேகரிக்கப்பட்ட பால், நீர் நீக்கப்பட்டு உறைய வைக்கப்பட்டுப் பதப்படுத்தப்படுகிறது.

பட்டை நீக்கம் மூன்று விதங்களில் செய்யப்படுகிறது




அதிகாலை நேரம்தான் மரத்தைக் கீற ஏற்றது. 3 மணி நேரத்தில் ஒருவர் 200 முதல் 300 மரங்களில் பால் சேகரிப்பார். முதல் 6 வருடங்கள் மரத்தின் ஒருபக்கம் கீறுவார்கள்; மறு 6 வருடங்கள் அடுத்தப்பக்கம் கீறுவார்கள்.



உலக ரப்பர் உற்பத்தியில் முதலிடம் 1. இந்தோனேஷ்யா, அடுத்து, 2. மலேசியா, அடுத்து 3. பர்மா. மேலும், 4. பிரேஸில், 5. சீனா, 6 இந்தியா.

ரப்பர் உற்பத்தியில் கடைசியாக இருப்பது, ரப்பரை உலகத்துக்கு அறிமுகப்படுத்திய 'லாட்டின் அமெரிக்கா'தான்!



கேரளா	91%
தமிழ்நாடு	7%
கர்நாடகா	1%
அந்தமான்	0.1%

இந்திய மாநிலங்களில் கிடைக்கும் ரப்பரின் சதவீதம்

பிருந்தாவனக்




தை மாதம் பிறந்தது
தங்க நெல்லும் குவிந்தது
தரணி எல்லாம் குளிர்ந்தது
துட்டும் கையில் சேர்ந்தது!

புதிய பானை வந்தது
புதிய கரும்பும் வந்தது
புதிய துணிகள் வந்தது
புதிய பொலிவு நிறைந்தது

மாடும் கன்றும் வந்தது
மாலை போட்டு நின்றது
கூடத் திலே கோலமிட
குத்து விளக்கும் வந்தது

பொங்கல் பொங்கி வைத்தனர்
பூசை செய்து வணங்கினர்
சங்க டங்கள் விலகவே
சேர்ந்து கும்மி அடித்தனர்!

- சி. என். சத்தியநாராயணன்






ஏன்? ஏன்?

குயிலே குயிலே கூவுவதேன்?
குழந்தை கேட்டு மகிழவா?
மயிலே மயிலே ஆடுவதேன்?
மற்றவர் பார்த்து மகிழவா?

நாயே வாலை ஆட்டுவதேன்?
நன்றியை எமக்குக் காட்டிடவா?
முயலே முயலே துள்ளுவதேன்?
முன்னேற எம்மை ஊக்கிடவா?

பசுவே பசுவே கத்துவதேன்?
பாலைக் கறக்க அழைத்திடவா?
பச்சைக் கிளியே அழைப்பதேன்?
பழுத்த பழத்தைக் காட்டிடவா?

- ரா. விஜயா



பூந்தோட்டம்

பூந்தோட்டம் பாருங்க
பச்சைப் பசேல் தானுங்க
விந்தை இதைக் காணுங்க
வியந்து போவீர் உறதிங்க!

கனகாம்பரப் பூவுங்க
கண்ணைப் பறிக்கும் காணுங்க
மணக்கும் மல்லிகைப் பூவுங்க
மாமி கேட்டால் தாருங்க!

சிரிக்கும் ரோஜா பாருங்க
சின்ன முள்ளு இருக்குங்க!
மருக் கொழுந்து இதுவுங்க
மனதை மயக்கும் மணமுங்க!

அடிக்கடியே வாருங்க
அன்பாய் வார்த்தை சொல்லுங்க!
அடியேன் உழைப்பைக் காணுங்க
அப்பா கிட்டே சொல்லுங்க!

- ரா. மகேஷ்



கவியரங்கம்

பார் பார்!



சூரிய மேகம் திரளுது பார்
கதிர வனை மறைக்குதுபார்
இருட்டு ஓடி வருகுது பார்
இன்பக் காற்று வீசுது பார்!

குளுமை எங்கும் கூடுதுபார்
குளிர்ந்து காற்று வீசுதுபார்
கிளைகள் ஆடிக் களிக்குதுபார்
காற்றின் வேகம் கூடுதுபார்!

மழைத் துளிகள் விழுகுது பார்
மண்ணில் கூடிச் சேருது பார்
பழைய அழுக்கைக் கரைக்குதுபார்
பயிரை வளர்க்க ஓடுதுபார்!

— ச. ராஜேஷ்சிவா

உயர்வோமே!

இரண்டு அடிக்கும் குறைந்தது
இனியே தமிழில் செய்தது
திரண்ட கருத்து நிறைந்தது
திருக்குறள் என்றே அழைப்பது!


சொல்லில் சிக்கனம் கொண்டது
சொல்லும் கருத்தோ பரந்தது
நல்லோர் மனதில் நிலைத்தது
நல்லது எல்லாம் புகல்வது!

காலம் கடந்து நின்றது
கற்றோர் போற்றிப் புகழ்ந்தது
இல்லை இதற்கு இணையேதும்
இன்றே கற்போம் உயர்வோமே!

— வி. ஆறுமுகம்



ரோஜா



சின்னச் சின்ன ரோஜா
சிவந்த வண்ண ரோஜா
என்னை மயக்கும் ரோஜா
எனக்குப் பிடித்த ரோஜா!

முள்ளம் பன்றி போல
முள்ளைக் குத்தும் ரோஜா!
கள்ளம் இல்லா வெண்மை
காட்டி அழைக்கும் ரோஜா!

நேரு கோட்டில் அமர்ந்து
நித்தம் சிரித்த ரோஜா!
பாரில் இதனைப் போல
பெருமை யாருக்கு உண்டு?

— ஜி. தேவன்

பாம்பு சொன்னது?

காட்சி 1

(பூங்காவின் மூலையில் ரவி அமர்ந்திருக்க தொலைவில் பெரிய 'ஹாண்ட் பாக்'குடன் கோபு வருகிறான்)

ரவி : *(தனக்குள்)* கோபு வறான்! எப்படியாவது இனிமையாகப் பேசி மயக்கி அவனைக் கோவிந்தசாமியின் வீட்டிற்குக் கூட்டிச் செல்லணும். அவனைப் பணயப் பொருளாகப் புடிச்சு வைச்சு, அவன் அப்பாவிடம் லட்ச ரூபாய் கறக்க அவர் திட்டமாம்! எவன் எப்படிப் போனால் நமக் கென்ன? இரண்டு நாளைக்கு வெளியே விடாமல் அவனை அவர் அடைச்சு வைத்திருந்தால் நமக்கு லாபம்! நாளை நடக்கும் விளையாட்டுப் போட்டிகளில் 'சாம்பியன்' பட்டம் எனக்குத்தான். இல்லைன்னா, ஏழு பிறவி எடுத்தாலும் கோபுவை வெல்ல முடியுமா?

கோபு : *(வந்து கொண்டே)* என்ன ரவி! பூங்காவில் தனியா ஏதோ பேசிக் கொண்டிருக்கிறாயே?.

ரவி : அதெல்லாம் ஒன்றுமில்லை! உயிர் நண்பனான உன்னைக் காணோமேன்னு துடிச்சுக்கிட்டிருந்தேன்!

கோபு : அப்படியா? *(ரவியின் அருகில் வந்து அமர்கிறான்)*

ரவி : ஆமாம்! தேவையானா உன்னைக் காப்பாற்ற ஓராயிடம் துப்பாக்கிக் குண்டுகளையும் ஏற்பேன்! உன் விரலசைந்தால் விஷத்தைக் கூட 'மடக் மடக்' எனக் "குடித்துச் சாவேன்!

கோபு : அவ்வளவு அன்பா என்மேல்! அதிருக்கட்டும் ரவி! உன் முதுகுப் பக்கம் என்னவோ 'உஸ் உஸ்'னு சத்தம் வருதே! அதைப் பாரு முதல்லே!

ரவி : *(திரும்பிப் பார்க்க, பாம்பு ஒன்று படமெடுத்து ஆடுகிறது!)* ஹா!... பாம்பு.... பாம்பு! நல்ல பாம்புக் குட்டி! படம் எடுத்து நிக்குதே! வழி விடு எனக்கு! *(எதிரில் அமர்ந்திருக்கும் கோபுவைக் கீழே தள்ளி விட்டு ஓடுகிறான்!)*

கோபு : என்ன ரவி இது! உயிரைக் குடுப்பேன்னு சொன்னே! இப்ப என்னைக் கீழே தள்ளி விட்டுக் கண்மண் தெரியாமல் ஓடறயே! *(பாம்பு அருகே வருகிறது)* ஆ! இதோ, பாம்பு என் பக்கத்திலே வந்து விட்டதே!

ரவி : *(மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க)* ஆ! அப்பாடா! கோபுவிற்கு என்ன ஆயிருக்கும்? திரும்பிப் பார்ப்போம்! ஆ.....! இதென்ன? தன் இடக் கையால் படம் எடுக்கும் பாம்பின் மென்னியைப் பிடித்துத் தூக்குகிறானே! அட! வலக்கையால் 'ஹாண்ட் பாக்' கைத் திறந்து பாம்பைத் திணித்து ஜிப்பை மூடுகிறானே! இப்பத்தான் நினைப்பு வருது! அவங்க அண்ணன் பொழுது போக்காகச் சில பாம்புகளை வளர்க்கிறான்! அவர்கிட்டேருந்து பாம்பைப் பிடிக்கக் கத்துக்கிட்டான் போலிருக்கு! சரி.... இனிப் பயமில்லை! அவனருகில் போவோம்! *(செல்கிறான்)* ஹி... ஹி! சாரி கோபு!

கோபு : *(கோபமாக)* சாரியாவது பூரி

எம். சோலையன்

யாவது?' பாம்பைப் பிடிப்பது எப்படி என்று என் அண்ணனிடம் கற்றுக் கொண்டிருந்ததால் நான் தப்பினேன்! உன் நட்பே இனி வேண்டாம்! குட்பை! ('ஹாண்ட் பாக்கை' எடுத்துக் கொண்டு திரும்பிப் பாராமல் நடந்து பூங்காவிற்கு வெளியே நிற்கும் பஸ்ஸில் ஏறுகிறான். பஸ் நகர் கிறது!)

ரவி : அடேடே! பஸ்ஸில் ஏறிப் போய் விட்டானே! என் திட்டம் எல்லாம் குட்டிச் சுவராகிவிட்டது! இனி இந்த ஆண்டும் விளையாட்டுப் போட்டிகளில் அ வ ன் தா ன் சாம்பியன்! ஹூம்! ஏமாந்தாயே! கோபுவைப் பிடிக்கக் கொடுத்து குறுக்கு வழியில சாம்பியனாக நினைச்சதுக்கு சரியான தண்டனை! இந்தவரை உயிர் தப்பினோமே! (போகிறான்)

காட்சி - 2

(கோபு பயணம் செய்யும் பஸ் கடைசி



ஸ்டாப்பிங்கில் வந்து நிற்கிறது)

கண்டக்டர் : எல்லாரும் இறங்கிக்கங்க சார்! இதுக்கப்புறம் பஸ் போகாது! அட, இதென்ன ஹாண்ட் பேக் ஒண்ணு பேந்த பேந்த விழிச்சுக்கிட்டிருக்கு! (எடுத்துப் பார்த்து) கனத்த ஹேண்ட்பேக்! இதை போலீஸ் ஸ்டேஷனிலே ஒப்படைச்சிருவோம்!

டிரைவர் : என்னப்பா, நீ பாட்டுக்கு என்னவோ தனக்குத்தானே பேசிக்கிட்டிருக்கே!

கண்டக்டர் : யாரோ ஒரு ஹாண்ட் பேக்கை விட்டுட்டுப் போயிட்டாங்க அண்ணே! டெப்போவுக்குப் போற வழியிலே போலீஸ் ஸ்டேஷன்கிட்டே நிறுத்துங்க! இதை ஒப்படைச்சிட்டுப் போயிடுவோம்!

டிரைவர் : ஹாண்ட் பேக்கா! அடப் பைத்தியமே! இப்படிக் கொண்டு வா அதை! போலீஸ்கிட்டே ஒப்படைச்சா நமக்கு நஷ்டமாச்சே!

கண்டக்டர் : அண்ணே, எனக்கு உங்க லாப நஷ்டக் கணக்கு வேணாம்! அது அநியாயம்! தப்புப் பண்ணினா ஆண்டவன் கூலி தந்துடுவான்!


டிரைவர் : ஆண்டவனாவது ஒன்னாவது! நான் சொல்றபடி செய்! முதல்லே ஹாண்ட் பேக்கைத் திறந்து எவ்வளவு பணம் இருக்குன்னு எண்ணிச் சொல்லு!

"என் மகனுக்கு வயசானவனாச்சேன்னு கூட என் மேல இரக்கம் இல்லே."

"ஏன் தாத்தா?"

"என்னை முதியோர் பள்ளியில சேர்த்து விட்டுட்டானே...!"

– சீர்காழி. வி. ரேவதி



கண்டக்டர் : சரி அண்ணே! இதோ திறந்திட்டேன். (பாம்பு தலையைத் தூக்கிச் சீற) ஹா..... பாம்பு! பாம்பு!.... (ஹாண்ட் பேக்கொடு தன் பேக்கையும் வெளியே தூக்கி எறிகிறான்)

டிரைவர் : அடடே! என்னப்பா இது! ஹாண்ட் பேக்கோட, உன் பேக்கையும் தூக்கி வெளியே எறிஞ்சுட்டியே! உனக்கென்ன பைத்தியமா!

கண்டக்டர் : அண்ணே! பைல நோட்டு இல்லே! நல்ல பாம்பு இருந்தது! அதான் எறிஞ்சேன்! அந்தப் பாம்பு அதோ பாருங்க அந்தப் புடலங்காய்க் கட்டுமேலே போய் ஜம்னு விழுந்திருச்சு! ஐயோ பாவம், அந்தப் பையன் பயமில்லாம புடலங்காய்க் கட்டைத் தலையிலே சுமந்துக்கிட்டுப் போய்கிட்டே இருக்கான்!

டிரைவர் : அப்படியா! அதுசரி உன் கலெக்ஷன் பேக்கையும் அதோட தூக்கி வெளியே எறிஞ்சுட்டியே அதைப் பார் முதல்லே! அட! யாரோ ஒருத்தன் உன் பேக்கைத் தூக்கிக்கிட்டு ஓடுறான் பார்! விடாதே! ஹா ம்! ஆண்டவனாவது ஒன்னாவதுன்னு மோசம் பண்ணத் தூண்டினேனே! சரியான தண்டனை!... வா....வா.....

காட்சி - 3

(பாம்பு ஒளிந்திருக்கும் புடலங் காய்க் கட்டைச் சுமந்து செல்கிறான் சிறுவன்)

சிறுவன் : (தனக்குள்) வீட்டை விட்டுக் கிளம்பறப்பவே லேட்டாயிடிச்சு! வழியிலே அந்தத் தடியன் வேறே மாமூல் கேட்டு வழிமறிப்பானே! என்னத்தைச் செய்ய? வர்றது வரட்டும்! இன்னிக்கு அவனோட சண்டை போட்டே பார்த்துடணும்! மாமூல் தரக்கூடாது.... (மார்க்கெட் வாசலை நெருங்குகிறான்)

முரடன் : டேய், புடலை! மாமூல் காசு ஒரு ரூவா தராமலா தப்பிப் போகப் பார்க்கறே! அது நடக்காது. எடு

தம்பி! (பிடித்து இழுக்கிறான்)

சிறுவன் : ஒனக்கு ஏன்யா மாமூல் கட்டணும்! நான்தான் ஒழுங்காக மார்க்கெட்டிலே காய் விக்கிறதுக்கு வரிப் பணம் கட்டி ரசீது வாங்கி வெச்சிருக்கேனே! மாமூல் கேக்கிற துக்கு நீ யாரய்யா? இத்தினி நாளா பொறுத்துப் பார்த்திட்டேன்! இனிமே பொறுக்க முடியாது! நமக்கு மேலே ஆண்டவன் ஒருத்தன் இருக்கான். உனக்கு அவன் கூலி கொடுக்காம விட மாட்டான்! ஆமா.

முரடன் : என்னடா கதை விடறே? மேல ஆண்டவன் இல்லேடா. புட லங்கா கட்டுதான் மேல இருக்கு. எடுடா மாமூலை? (புடலங்காய் கட்டைப் பிடித்து இழுக்க 'பாம்பு நிட ரெனப் படம் எடுத்து ஆடுகிறது?)

முரடன் : ஆ! இதென்ன! புடலங்காய் ஒண்ணு நாகப் பாம்பா மாறிடுச்சே! ஆண்டவனைப் பழிச்சதுக்கு தண்ட னையா? பிடிச்சுக்கப்பா பணத்தை! என்னை மன்னிச்சிடு! (பணத்தைக் கொடுத்துவிட்டு ஓடுகி றான்)


சிறுவன் : (திகைத்து) இன்னிக்கு இந்தத் தடியனுக்கு என்ன ஆச்சு?

பூக்கடைக்காரர் : புடலங்காத் தம்பி! நல்லதா ரெண்டு புடலங்கா வேணும்! எங்க பாட்டிக்குப் புடலங் காய்ன்னா ரொம்பப் பிடிக்கும்! அதான் வாங்கி வரச் சொல்லிற்று.

சிறுவன் : அம்மாடி.... ஒரு கை பிடிச்சுக் கட்டை இறக்குங்க அண்ணே.... (இறக்கி)... இந்தாங் கண்ணே! நல்ல புடலங்கா.... அருமையான காய்ங்க. பாட்டிக்குக் கொடுங்க! (உருவி எடுத்துத் தரு கிறான். பாம்பு வெளியே வந்து மாலைக் கட்டுக்குள் போய் விடு கிறது!) (சிறுவன் போக, முனுசாமி வருகிறான்)

முனுசாமி : கடைக்காரரே! சூப்பர் ஜுவல்லரி நகைக் கடைக்காரர் பூமாலைக்கு ஆர்டர் கொடுத்திருந் தாராமே!

பூக்கடைக்காரர் : ஆமா! இதோ, ரெடி



"யாருக்காவது வேறு மொழிப் பாடல் தெரியுமா?"
"தெரியும் சார். வங்க மொழி."
"எங்கே பாடு?"
"ஜன கண மன அதி....!!"
- ப. கணேஷ்

யாயிருக்கு! (பாம்பு பதுங்கி யிருக்கும் மாலைப் பொட்டலத் தைத் தந்து) ஆமாம், உங்க முத லாளி புதுசா மூணு லெட்ச ரூபா செலவிலே வைர நெக்லஸ் ஒண்ணு சாமிக்காக வாங்கிக் கோயிலுக்குக் காணிக்கை கொடுத்திருக்காராமே!

முனுசாமி : அந்த நெக்லசை இன்னிக் குத்தான் சாத்தப் போறாரு. அதுக்குத் தான் பூமாலை. வரட்டுமா! ஆமா... இது என்ன! பூமாலைக்குள்ளே என் னவோ நெளியற மாதிரி....!

பூக்கடைக்காரர் : பயந்துட்டீங்களா! மாலைன்னாலே நெளிஞ்சு வளையற மாதிரிதானே இருக்கும்? துப்பாக்கிக் கட்டை மாதிரி இருந்தால், அதை மாலைன்னு சொல்லுவாங்களா? சும்மா கொண்டு போங்க! ஸ்பெஷல் மாலை! கொஞ்சம் கனமா இருக்கும்! வேறே ஒண்ணுமில்லே!

முனுசாமி : சரி.... வர்றேன்! (போகிறான்)

காட்சி - 4


(கோயிலுக்கு வெளியே கொள் ளையன் காத்திருக்கிறான். சூப்பர் ஜுவல்லரி ஓனர் குடும்ப சகிதமாக சாமியை வணங்கிவிட்டு வெளியேறு கிறார்)

கொள்ளையன் : சூப்பர் ஜுவல்லரி

ஓனர் குடும்ப சகிதமாக வந்து மூணு லெட்ச ரூபாய் நகையை ஆண்டவனுக்கு சூட்டி விட்டுப் பரம திருப்தியோடு போகிறார்! எனக்கும் பரம திருப்தி தான்! துப்புக் கிடைத்து நகையை அடித்துக் கொண்டு போகத் தானே நான் வந்திருக்கிறேன். ஹூம்.... கோயிலுக்குள்ளே அர்ச்சகரைத் தவிர வேறு யாரும் இல்லை! உம்.... உள்ளே போவோம்... இது தான் சரியான சமயம். (மணியடிக்கிறது) ஆகா! நல்ல சகுனம் வேறே! ஆண்டவனே! எல்லாம் நல்லபடியா முடிஞ்சு எனக்கு வைர நெக்லஸ் கிடச்சா உனக்கு அபிஷேகம் செய்யறேம்பா! ஆகா! வைர நெக்லஸூம், மாலையுமா சாமி என்னமா ஜொலிக்கிறார்! என் நெஞ்சிலே கூட பக்தி வெள்ளம் கரைபுரண்டு மோதுகிறதே! பகவானைக் கும்பிட்டு விட்டுப் போய் விடுவோமா? சேச்சே! வெறுங்கையோடு போவதா? அது நம்ம சரித்திரத்திலேயே இல்லையே! அதோ.... அர்ச்சகர் விபூதித் தட்டுடன் என் பக்கம் வருகிறார்! பையிலிருந்து துப்பாக்கியை எடுத்துக் கொள்கிறேன்.....

(அர்ச்சகர் தட்டுடன் வருகிறார்.)

கொள்ளையன் : அர்ச்சகரே, இதோ பாரும்! துப்பாக்கி! சத்தம் போட்டால் தொலைந்தீர்! ஹூம் இப்படி என்னுடன் கருவறைக்குள் வாரும்.... எனக்கு வேறு எதுவும் வேண்டாம். அந்த சூப்பர் ஜூவல்லரி ஓனர் நன்கொடையாகத் தந்த வைர நெக்லஸ் மட்டும் போதும்! உம்.... ம்..... ம்... இதோ நெக்லஸ் எப்படி ஜொலிக்கிறது! (நெக்லஸில் கை வைக்கிறான். மாலையில் இருக்கும் பாம்பு கடிக்கிறது) ஹா! என்ன இது! என் கையை ஏதோ கடித்து விட்டதே! ஐயோ விக்கிரகத்திலே நாகப்பாம்பு படம் எடுத்து ஆடுகிறதே! ஐயோ, விஷம் ஏறுகிறதே! கண்ணை இருட்டுகிறதே! நான் செய்த தவறுக்கு உடனே தண்டனை தந்து விட்டாயே! ஈசா... நீ இல்லைன்னு யார் சொன்னது? (கீழே சாய்கிறான்)






கேளுங்கள் சொல்லப்படும்

★ பூ. பவளம், பூ. தாமரை,
கோடிக் கரை.

? மிகப் பெரிய மூளை எந்த விலங்குக்கு அமைந்துள்ளது?

திமிங்கலத்திற்குத்தான் உலகத்தில் மிகப் பெரிய மூளை அமைந்துள்ளது. மனித மூளையின் சராசரி





எடை 1.4 கிலோ. ஆனால் திமிங்கலத்தின் மூளை எவ்வளவு எடை தெரியுமா? சராசரி 8 கிலோ!

★ மு. கதிரேசன், சீர்காழி.

? வௌவால்கள் எல்லாமே ஓசை எதிரொலியால்தான் வழியறிந்து பறக்கின்றனவா?

எதிரொலி உணர்வைக் கொண்டு வழி யறியும் ஆற்றலுக்கு, எதிரொலிக் களம் (ECHO LOCATION) என்று பெயர். இதை அறிவித்த பெருமைக்கு உரியவர் கிரிஃபின் (GRIFFIN) என்ற அமெரிக்க அறிஞர் (1938). இந்த 'எக்கோ லொகேஷன்' என்ற ஆற்றல் பூச்சிகளை உணவாகக் கொள்ளும் அசைவ வௌவால்களுக்கு மட்டுமே இருக்கிறது என்பதையும், இவற்றின் மூளைப் பகுதியில் உள்ள இன்ஃபிரியார் கேலிகுலஸ் (INFERIOR COLLICULUS) என்ற நுட்ப உறுப்பே இந்த ஆற்றலைத் தருகிறது என்பதையும் கண்டுபிடித்துள்ளார்கள். இந்த நுட்ப உறுப்பு, பழந்தின்னி (சைவ) வௌவால்களுக்கு இல்லை என்றும், அதனால், பழந்தின்னி (சைவ) வௌவால்கள் மற்ற பறவைகளைப் போல் கண்களாலேயே கண்டுதான் வழியறிந்து பறக்கின்றன என்றும் இப்பொழுது கண்டுபிடித்துள்ளார்கள்!

வௌவால் பற்றிய பாடத்தை இனிமேல் மாற்றி எழுத வேண்டும்!

★ ஜி. சுல்தான் அகமத், ஆற்காடு - 2.

? பொன்சாய் என்பது என்ன?

குட்டை மரம், செடி, கொடி வளர்ப்புக் கலை என்று இதைக் கூறலாம். பொன்சாய் என்பது ஜப்பானியச் சொல். இது முதலில் சீனாவில் தோன்றி, அமெரிக்கா வழியாக மற்ற நாடுகளுக்குப் பரவி, இன்று ஜப்பா

சோதம்பி



னின் பெருமைக்குரிய நவீன தோட்டக் கலையாக வளர்ந்து வருகிறது. நவீன முறையில் பல புதுமைகளைச் செய்து இதை ஒப்பற்ற ஒரு கலையாக்கியுள்ள பெருமை ஜப்பானையே சேரும். தொட்டியில் சப்போட்டா மரம், ஊது வத்திக் குழலில் குண்டு மல்லிகைச் செடி, டால்டா டப்பாவில் பப்பாளி மரம் என்று இப்படி எத்தனையோ புது மைகள்! இன்னமும் பல புதுமை களைத் தோற்றுவித்தவண்ணம் இருக் கிறார்கள். இதை ஒரு தெய்வீகக் கலை யாக மதித்து, இதைக் கொண்டு வீட் டையே அலங்கரிக்கிறார்கள். நீர்வளம் குறைந்து கொண்டே வரும் நிலையில், 'பொன்சாய்' கலையை ஒரு தவிர்க்க முடியாத வேளாண்துறையாக அரசாங் கமே மேற்கொள்ளும் காலம் தூரத்தில் இல்லை.

★ **வ. மரியதாஸ், வேளாங்கண்ணி.**

? **எந்த ஒரு நூலைப் பார்த்தாவது நீங்கள் அசந்திருக்கிறீர்களா?**

பலமுறை அசந்திருக்கிறேன். சமீ பத்தில் அசத்திய நூல் இங்கிலாந்தின் KATHARINE BRIGGS என்பவர்



தொகுத்து 3வது பதிப்பாக வெளிவந் துள்ள A DICTIONARY OF FAIRIES என்ற விவரத் தொகுப்பு நூல். இதில் இங்கிலாந்திலும் அயர்லாந்திலும் உள்ள தேவதைகளைப் பற்றி அகர வரி சையில் தக்க படங்களோடு தகவல்கள் தரப்பட்டுள்ளன. அதோடு இந்தத் தேவதைகள் எந்த புராணங்களில், எந்த காப்பியங்களில் வந்துள்ளன என்ப தையும் கொடுத்துள்ளார்! எல்லா வய தினரையும் கவரக்கூடிய புத்தகம். இந்த ஆசிரியை ஏற்கனவே பல தேவதைக் கதைகளைக் குழந்தைகளுக்காக எழுதி யவர். இது உலகப் புகழ்பெற்ற பெங்கு வின் வெளியீடு.

★ **வ. வேணி, வ. சுதா, வ. கண்ணன் குடும்பத்தினர், வேலூர்.**

? **உலகின் முதல் உண்ணாவிரதப் போராட்டம் எங்கு நடந்தது?**

உண்ணாவிரதம் என்பது ஏதோ ஓர் இலட்சியத்திற்காக சாப்பிடாது; நீர்



கூட அருந்தாது இருந்து உயிர் நீப்பது தானே? அப்படிப் பார்த்தால் சங்க காலத்தில் தங்கள் கடமையை முடித்த பல சான்றோர் 'வடக்கிருத்தல்' என்ற பெயரில் உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்திருக்கிறார்களே. சேர மன்னன் கணைக்கால் இரும்பொறை கழுமலம் என்ற இடத்தில் நடந்த போரில் சோழன் செங்கணானிடம் தோற்று சிறைப்படுகிறான். சிறையில் தாகத்

திற்கு நீர் கேட்க, சேர மன்னன் காவலர்களால் அலட்சியப்படுத்தப்படுகிறான். இந்த அவமானத்தைத் தாங்க முடியாத சேர மன்னன் சிறையிலேயே வடக்கிருந்து இறக்கிறான்! சங்க காலம் கி.பி. 2-3வது நூற்றாண்டு.

★ கு. புண்யகோடி, கு. தனகோடி, தாராபுரம்.

? காந்தி திரைப்படத்தைத் தயாரித்த அட்டன்பரோ ஓர் எழுத்தாளரா?

ரிச்சர்ட் அட்டன்பரோ காந்தியைப் பற்றி ஒரு புத்தகம் எழுதியுள்ளார். சர்ச்சைகளைக் கடந்த இந்தப் புத்தகத்தின் பெயர் IN SEARCH OF GANDHI. இது பிரிட்டிஷ் இந்தியப் பதிப்பாளர்களின்



கூட்டுத் தயாரிப்பு. B.1 Publiciations, New Delhi என்ற முகவரிக்கு எழுதிக் கேளுங்கள்.

★ வி. சாந்தி, கண்ணமங்கலம்.

? இன்று பிரபலமாக விளங்கும் சன்லைட் சோப்பின் வரலாறு என்ன?

இதைத் தயாரித்த பெருமைக்கு உரியவர் பிரிட்டிஷ்காரரான வில்லியம் ஹெஸ்கித் லீவர் (WILLIAM HESKETH LEVER – 1851 – 1925) மெர்சி நதிக் கரையில் 1888 ஆம் ஆண்டு வாக்கில்



"பையனை ஏன் எங்க பள்ளில சேர்க்க விரும்புறீங்க?"

"வீட்டுல அடிக்கிற லூட்டி தாங்கலை; இந்த ஸ்கூல்லதான் அதிக நேரம் கட்டி மேய்க்கிறதா எல்லாரும் பேசிக்கிட்டாங்க... அதான் சார்!"

– சீர்காழி. வி. ரேவதி

சிறிய அளவில் இவர் சன்லைட் சோப் தயாரிக்கும் தொழிற்சாலையைத் தொடங்கினார். அதற்கு முன்பு வரை, சோப் இப்பொழுது உள்ளது போல் தனித்தனிக் கட்டிகளாக இருக்காது. நீளமான 'பார்'க்களாகத்தான் இருக்கும். தேவையான அளவு வெட்டி, காகிதத்தில் கட்டித் தருவார்கள். தனித் தனித் துண்டுகளாக்கி, கவர்ச்சியான வண்ணத் தாளில் கட்டி 'சன்லைட்டை' அறிமுகப்படுத்தினார் லீவர். இவர் 'சன்லைட்'டுக்காக அறிவித்த பரிசுகள், சவால்கள், மற்ற சோப் தயாரிப்பாளர்களை மண்ணைக் கௌவ வைத்தன! இன்னமும் கூட சன்லைட்டில் இந்தப் பரிசு அறிவிப்பைக் காணலாம்.



எவ்வளவு பொருள்கள்? - போட்டி முடிவு

வழக்கம் போலவே இந்தப் போட்டியில் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை பிரமிப்பைத் தருவதாக இருந்தது. 1800க்கு மேல் போய் விட்டது! அதிக எண்ணிக்கையான சொற்களைக் காட்ட வேண்டும் என்பதற்காக பலரும் சிறுமி, தங்கை, அக்கா என்று பல சொற்களை ஒரே பொருளுக்கு எழுதியிருக்கிறார்கள். ஒன்று தெரிகிறது. எல்லோரும் அகராதிகளைப் புரட்டி ஒரு பொருள் கொண்ட பல சொற்களைத் தேடியிருக்கிறார்கள்! அந்த வரை மகிழ்ச்சி; பெருமை!

சரியான விடை

1. வாசல் (குடிசைக்குக் கதவு கிடையாது)
2. கீற்று (கூரையில்)
3. கம்பி (சன்னலில்)
4. மரம்
5. பையன்
6. வாட்சு
7. முயல்
8. தவளை
9. மலர்
10. பந்து
11. ஜிம்மி (நாய்)
12. மொட்டு
13. இட்லி (அல்லது) புட்டு
14. தட்டு
15. பொம்மை (ஆமை + பையன் பொம்மை)
16. கோப்பை
17. சாசர்
18. ரிப்பன் (சிறுமி கையில்)
19. கெட்டில் (சதுரத் தட்டில்)
20. சட்டை (சிறுவன்)
21. சிறுமி
22. கவுன் (சிறுமி)
23. பாதம் (சிறுமி)
24. பொட்டு (சிறுமி)
25. விரல் (சிறுவன் + சிறுமி)
26. மூக்கு (சிறுவன் + சிறுமி)
27. ஷா ட்ஸ் (அரை டிராயர் பையனுக்கு)
28. கயிறு (கூடாரத்தில்)
29. குச்சி (கூடார உச்சி)
30. மேகம்
31. சுவர் (குடிசைக்கு)
32. முதுகு (பையன்)

சில தம்பி தங்கைகள் 45 சொற்கள் கூட அனுப்பியிருக்கிறார்கள்! ஏற்கெனவே மேலே குறிப்பிட்டபடி ஒரே பொருளுக்குப் பல சொற்களைத் தந்து (உதாரணம் இட்லி, புட்டு, பாதுஷா, முட்டை) எண்ணிக்கையை அதிகரித்துக் காட்டியிருக்கிறார்கள். இவை ஒன்றாகவே கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. அப்படியும் கூட எல்லாவற்றையும் எழுதியவர்கள் நூற்றுக் கணக்கில் இருந்தார்கள்! எனவே, பரிசு பெற்றவர்களைக் குலுக்கல் முறையில்தான் தேர்ந்தெடுக்கும்படி இருந்தது! பரிசு பெற்றவர்களுக்கு கோகுலம் வாசகர் சார்பில் பாராட்டுகள்.

ரூபாய் பதினைந்து பரிசு பெறுவோர் :

1. எஸ். துங்கா,
பிளாட் 7 - பாரதி நகர்,
வயலூர் ரோடு, திருச்சி - 620 017.
2. ஆர். ராதிகா,
20, நாகையன் தோட்ட வீதி,
ஒண்டிப்புதூர், கோவை - 16.
3. ஆ. லூர்துராஜ் பிரான்சுவா,
24, குமரப் பிள்ளை வீதி,
கோட்டுச்சேரி, காரைக்கால் - 609 609.
4. வே. பூங்குன்றன்,
த/பெ. திரு. இரா. வேதநாயகம்,
வடபாதி மங்கலம் - 606 907.
5. டி. கே. ஸ்ரீவத்சன்,
14. முதல் கிராஸ் தெரு,
கண்ணன் நகர், மடிப்பாக்கம்,
சென்னை - 91.
6. ஏ. முகமத் யூசுப்,
51, புதுத் தெரு, கோட்டுச்சேரி,
காரைக்கால் - 609 609.
7. க. விவேக்,
3 ஆம் வகுப்பு,
காயத்ரி வித்யாலயா,
ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125.
8. பி. விக்னேசுவரன்,
த/பெ. திரு. ஜி. பாலு,
பழையனூர் அஞ்சல்,
கூத்தா நல்லூர் வழி,
நீடாமங்கலம் வட்டம் - 614 101.

ஊர்ப் பெரிய மனிதர்கள் அனைவரும் பண்ணையார் வீட்டுக்குள் நுழைந்தனர்.

''வாருங்கள் வாருங்கள்'' என்று எதிர் கொண்டழைத்து வரவேற்ற பண்ணையார், எல்லோரையும் உட்காரச் சொல்லி காப்பி வழங்கினார்.

''இன்னும் அரைமணியில், சரியாகப் பத்தரை மணிக்கு அம்மன் கோவிலில் திருவிழாக் கொடியேற்றம். வந்து விடணும்'' என்று கை கூப்பினார் ஜவுளிக்கடை சொர்ணவேலு.

''கோவிலே உங்க முன்னோர்கள் கட்டினது தானே? ஏதோ நகரத்துக்குக் குடியேறிவிட்டாலும், திருவிழா சமயத்திலாவது இங்க வந்து உங்க முன்னோர்கள் கட்டிய வீட்டில் தங்கி, திருவிழா ஏற்பாடுகளைக் கவனித்து வருவது எங்களுக்கு ரொம்ப மகிழ்ச்சி'' என்றார் மாவுமில் துரை முத்து.

''ஒரே நிமிஷம், குளித்துவிட்டு உடனே வந்து விடுகிறேன். நீங்களெல்லாம் கோவிலுக்குப் போங்க. பின்னாலேயே நான் காரில் வந்து விடுகிறேன்'' என்று அவர்களை அனுப்பி வைத்தார் பண்ணையார்.

அவசரம் அவசரமாகக் குளித்து விட்டு உடை மாற்றிக் கொண்டு பண்ணையார் காரில் ஏற வந்த போது,நேரமாகிவிட்டது. வேட்டுச் சத்தம் கேட்டது. கொடியேற்றம் முடிந்து விட்டதற்கு அது அடையாளம்!

''இதோ வந்து விடுகிறேன்'' என்று சொல்லியனுப்பியும் நான் இல்லாமலேயே கொடியேற்றி விட்டார்களே! இனிமேல் போவதா வேண்டாமா என்ற தயக்கத்தோடு பண்ணையார் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். மணி பத்து முப்பது மூன்று.

சிறிது நேரத்தில் பண்ணையாரின் கார் நகரத்திற்குச் செல்லும் சாலையில் பறந்து கொண்டிருந்தது!

பண்ணையார் வராமலேயே கொடியேற்றம் நடந்து விட்டதையும், திருவிழாவுக்காகவே நகரத்திலிருந்து வந்த பண்ணையார் யாரிடமும் சொல்லிக் கொள்ளாது நகரத்திற்குத் திரும்பி விட்டதையும் அறிந்து திருவிழாக் குழுவினர் திடுக்கிட்டுப் போயினர்.

வெறும் வாயையே மெல்லுகிறவர்களுக்கு இது போதாதா? கூடிக்கூடி, தனித்தனியே பேசிப் பகையை வளர்த்துக் கொண்டனர். ஊர் இரண்டு கட்சியாகப் பிரிந்தது. வேலை வெட்டி இல்லாதவர்கள் இந்தப் பகையில் நன்றாகக் குளிர் காய்ந்தனர். திருவிழாவே நின்று விடும் போன்ற நிலை ஏற்பட்டு வெட்டு குத்து நிலைக்கு எல்லாம் வளர்ந்தது. போலீஸ் வந்து தலையிட்டு தெருவுக்குத் தெரு காவல் போடும் நிலை ஏற்பட்டது.

ஊர்ப் பெரியவர்கள் ஒன்று கூடி இரண்டு கட்சியினரையும் அழைத்துப் பேசினர். விட்டுக் கொடுத்து



முத்துப் பல்லக்கு

ஹாரிஸ்

இணைந்து போக இரு கட்சியினருமே தயாராக இல்லை. தனித்தனியாக திருவிழா கொண்டாடவே இரு தரப்பினரும் முனைப்பாக இருந்தனர். ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு கட்சியினர் நடத்தலாம் என்று முடிவு செய்தனர். முதலில் எந்தக் கட்சி என்பதைத் தீர்மானிக்க திருவுளச் சீட்டு போடப்பட்டது. அந்த ஆண்டு, மாவுமில் துரையின் கட்சிக்குச் சீட்டு விழுந்தது. பண்ணையார் கட்சி பகைமை பாராட்டி ஒதுங்கிக் கொண்டது.


ஊரில் பண்ணையாருக்கு வேண்டாதவர்கள் மாவுமில் துரையின் கட்சியினருக்கு போட்டி போட்டுக் கொண்டு பொருளுதவி செய்ய, திருவிழா ஏற்பாடுகள் மும்முரமாக நடந்தன. வீதி உலாவுக்கு யானை கூட வர இருந்தது.

பண்ணையாரின் பேத்தி எட்டு வயது மணிமொழி. அவளுக்குத் திருவிழாவுக்குப் போவதென்றால் ஒரே கொண்டாட்டம். தொட்டில் ராட்டினம், குடை ராட்டினம், பொம்மலாட்டம் எல்லாம் இருக்கும் என்று அவள் ஆண்டு தவறாது பண்ணையாருடன் கிராமத்துக்கு வந்து திருவிழாவைக் கண்டு களிப்பாள்.

''இந்த முறை கிராமத்தில் மழை இல்லையாம். பாதிப்பேர் காலி செய்து கொண்டு போயிட்டாங்க. அதனால் அடுத்த ஆண்டுதான் திருவிழா. அப்ப உன்னைக் கண்டிப்பா அழைச்சிட்டுப் போறேன்'' என்று திறமையாகப் பொய் சொல்லி சமாதானப் படுத்தினார் பண்ணையார். மணிமொழியும் அதை நம்பி விட்டாள்.

அன்று பள்ளியிலிருந்து மணிமொழி வீடுதிரும்பிய போது, வரவேற்பு அறையில் கிராமத்திலிருந்து வந்திருந்த ஜவுளிக்கடை சொர்ணவேலு, பண்ணையாரோடு ஏதோ இரகசியமாகப் பேசிக் கொண்டிருந்தார்.

''திருவிழாவை அவங்க சிறப்பா



நடக்கும்படி விட்டு விடக் கூடாதுங்க, என்னமாவது குழப்பம் செய்து அவங்க ளுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தி, இனிமே அவங்க எந்த ஆண்டுமே திரு விழாவை நடத்த முடியாதபடி பண்ண னுங்க'' என்று குழைந்தார் சொர்ண வேலு.


''என்ன பண்ணலாங்கறீங்க?'' என்று கேட்டார் பண்ணையார்.

''இங்கேதான் நம்ம ஊர்ல பெரு மாள் கோவில்ல இருக்கிற யானையை, எட்டாம் நாள் முத்துப் பல்லக்கு தினத் தன்று வரவழைக்கப் போறாங்களாம். தினமும் வாண வேடிக்கை உண்டு. நமக்குத் தெரிஞ்ச பையன்தான் வாண வேடிக்கை தயாரிப்பு - யானை வரும் தினத்தன்று, ஒரு ராக்கெட் வெடியை யானையை நோக்கித் தரையில் பாயும் படி வைக்கச் சொல்றேன். யானை மிரண்டு கூட்டத்தில் பாயும். குழப்பம் ஏற்பட்டுக் கெட்ட பெயர் உண்டாக இது போதாதா?'' என்றார் சொர்ண வேல்.

திருவிழா நடக்கவில்லை என்று தாத்தா கூறியது பொய் என்பதை மணி மொழி உணர்ந்து கொண்டாள்.

முத்துப் பல்லக்கு நாள். மாலையி லிருந்தே முக்கள் அம்மன் கோவிலில் கூட ஆரம்பித்து விட்டார்கள். உள்ளூர் மக்களோடு, அக்கம் பக்க கிராமத்து மக்களும் வண்டி கட்டிக் கொண்டு வந் திருந்தனர். பொய்க்கால் குதிரை, கரகம், மயிலாட்டம் என்று கூட்டத் தைக் கவர பல புதுமைகள் இருந்தன. பக்கத்து நகரத்தில் இருந்து யானை வேறு வந்திருந்தது. கூட்டம் பயங்கர மாக இருந்தது. முத்துப் பல்லக்கில் அம்மன் திருவுலா கிளம்பிய போது இரவு ஒன்பது மணியாகிவிட்டது. வாண வேடிக்கையோடு வீதி உலா கிளம்பியது.

அடுத்த நாள் காலை பண்ணையார்



எழுந்திருக்கும் போதே நேரமாகி விட்டது. மணிமொழிதான் வந்து எழுப்பினாள்.

''தாத்தா, கிராமத்துலேருந்து ஜவுளிக்கடை சொர்ணவேலு போன் பண்ணினார். ராக்கெட் வாணம் சீறி யானை மேல் பாய, யானை மிரண்டு கூட்டத்தினரை மிதித்து ஓட, நம்ம கிராம திருவிழாவில் இருபது பேர் இறந்து விட்டார்களாம்! நூறு பேருக்கு மேல் காயமாம். அம்மன் வீதி உலா பாதியிலேயே நின்னு போச்சாம். நீங்க எழுந்ததும் சொல்லச் சொன்னாரு'' என்றாள் மணிமொழி.

தான் வரும் வரை காத்திருக்காது கொடியேற்றம் செய்தவர்களை மட்டம் தட்ட வேண்டும் என்றுதான் பண்ணையார் எண்ணினாரே தவிர, சொர்ணவேலு செய்த ஏற்பாடு இப்படிக் கலவரத்தை ஏற்படுத்தும்; உயிர்களைப் பலி வாங்கும் என்பதை அவர் எதிர்பார்க்கவே இல்லை. குல தெய்வத்தின் வீதி உலா பாதியில் நின்று போன தகவல் அவரைக் கலங்க வைத்தது. அதோடு, இருபது பேர் இறந்ததற்கும் நூற்றுக் கணக்கானோர் காயமடைந்ததற்கும் அவர் காரணமாகிவிட்டாரே! எவ்வளவு பெரிய பாவத்தை அவர் சம்பாதித்து விட்டார்! அவர் கண்கள் கலங்கின.

''என்ன ஆச்சு தாத்தா?'' என்று எதுவும் தெரியாதவள் போல் கேட்டாள் மணிமொழி.

''ஒரு போலி கௌரவத்திற்காகப் பெரிய பாவம் பண்ணிட்டேம்மா'', என்று அழுத பண்ணையார் எல்லாவற்றையும் கூறினார்.


''உண்மையில் யாருமே என்னை அசட்டைப் படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் நான் இல்லாதபோது கொடியெத்தவில்லை. என்னுடைய வரட்டு கௌரவம், நானா அப்படி எண்ணிக்கிட்டு, ஊர் இரண்டு பட்டு நிற்கவும், இத்தனை கலவரம், இறப்பு எல்லாத்துக்கும் காரணமாகிவிட்டேன். அம்மன் என்னை மன்னிப்பாளா?'' என்று விசும்பினார் பண்ணையார்.

''கவலைப் படாதீங்க தாத்தா. எந்தக் கலவரமும் நடக்கலே. வாணங்கள் எல்லாத்தையும் தண்ணியில முக்கி, வெடிக்காமல் இருக்க நான் ஏற்பாடு பண்ணிட்டேன். உங்க திட்டம் வெற்றி பெற்றால் அதன் விளைவு எத்தனை பயங்கரமா இருக்கும் என்பதை உங்களை உணர வைக்கவே, சொர்ணவேலு தொலை பேசியில் கூறியதாகப் பொய் கூறினேன்'' என்று சிரித்தாள் மணிமொழி.

''உண்மையாவா!'' என்று ஆனந்தப்பட்டு, அமைதிப் பெருமூச்சு விட்டார் பண்ணையார்.

''சரி தாத்தா இனிமே என்ன பண்ணப் போறீங்க?''

''இரண்டு பட்டுக் கிடக்கிற ஊரை ஒன்று படுத்தப் போறேன். பண்ணையார் கட்சி, எதிர்க் கட்சின்னு இரண்டு இனிமே இல்லே. ஒரே கட்சிதான். இப்பவே கிளம்பறேன் கிராமத்துக்கு'' என்று கிளம்பினார் பண்ணையார்.



8-வது அதிசயம்!

1880 ஆம் ஆண்டில் லிஃப்ட் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் பல மாடிக் கட்டடங்களைக் கட்டுவதில் வேகம் ஏற்பட்டது. 1930-ல் பாங்க் ஆஃப் மன்ஹட்டன் பில்டிங் (927 அடி உயரம்), 1930ல் க்ரிஸ்லர் பில்டிங் (1046 அடி உயரம்), 1931ல் எம்பயர் ஸ்டேட் பில்டிங்கும் (1250 அடி உயரம்) கட்டப்பட்டன. உலகத்தின் மிக உயர்ந்த கட்டடம் என்ற பெருமையை எம்பயர் ஸ்டேட் பில்டிங் 29 ஆண்டுகள் வரை பெற்று வரலாற்றில் நிலைத்தது. இதையும் தூக்கிச் சாப்பிட சீர்ஸ் டவர் சிகாகோ (1472 அடி உயரம்) கட்டப்பட்டது.

மற்ற கட்டடங்களுக்கு இல்லாத சில சிறப்புகள் எம்பயர் ஸ்டேட் பில்டிங்குக்கு உண்டு. இதில் 102 மாடிகள் உள்ளன. இதைக் கட்டுவதற்கான காலம் ஞாயிற்றுக் கிழமைகள், விடுமுறை நாட்கள் உட்பட ஒரு ஆண்டும் நாற்பத்தைந்து நாட்களும்.

கட்டடத்திற்குள் காலடி வைத்ததுமே ஏதோ கனவுலகில் இருப்பது போன்ற ஒரு நினைப்பு ஏற்படும். மிகவும் வேகமாக, மிகக் குறுகிய காலத்தில் கட்டப்பட்ட மிக உயரமான கட்டடம் என்ற பெருமையும் இதற்கு உண்டு. இதன் கட்டுமானப் பணிகளுக்குத் தேவைப்பட்ட கட்டடப் பொருள்களைக் கொண்டு வர தனி சரக்குக் கப்பல்களும், சரக்கு ரயில்களும் விடப்பட்டன.

விருந்தினர்களும், வருவோர்களும் காத்திருக்க அமைத்த தலைவாசல், வரவேற்பு அறை ஆகியவை அழகு சொட்டும் சலவைக் கற்களால் ஆனவை. இவை இந்தியா, பிரான்ஸ், ஜெர்மெனி, பெல்ஜியத்தில் இருந்து தருவிக்கப்பட்டன. இது கட்டப்பட்டு வரும்போதே நியூயார்க் மக்களின் மனம் கவர்ந்த கதாநாயகனாக இருந்திருக்கிறது. இந்தப் பெருமையை வேறு எந்தக் கட்டடமும் பெறவில்லை. இதன் 102 ஆவது மாடியில் இருந்து பார்த்தால், மேக மூட்டம் இல்லாத நாட்களில் 20 மைல் தொலைவு வரை சுற்றுப்புறக் காட்சிகளைக் காணலாம்!

உலகத்தின் இந்த 8ஆவது அதிசயம் இரண்டு ஏக்கர் பரந்துள்ள புகழ்பெற்ற மன்ஹட்டான் புல்வெளிப் பகுதியில், 5ஆவது அவின்யூவின் 34வது தெருவில் அமைந்துள்ளது.

நியூயார்க்குக்கு வரும் பல நாட்டு மன்னர்கள், உலகத் தலைவர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், அறிஞர் பெருமக்கள், பொறியியல் நிபுணர்கள் ஆகிய அனைவருமே தாங்களாகவே இந்தப் புகழ்பெற்ற கட்டடத்தைக் காண வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். இதன் வருகையாளர் பதிவேட்டில் கையெழுத்திடாத உலகத் தலைகளை விரல் விட்டுக் கூறி விடலாம். இத்தகைய பெருமை மிக்க இந்தக் கட்டடத்தைக் காண வந்து பெருமைப்படுத்துங்கள் என்று ஒரு

வி.ஐ.பி.க்கு, கட்டடத்தின் கார்ப்பரேஷன் தலைவர் தானே ஒரு அழைப்பு விடுத்தார். ஆனால், அந்த வி.ஐ.பி.யோ, வர மறுத்து விட்டார் அவர். அது வேறு யாருமில்லை. எம்பயர் ஸ்டேட் கட்டடம் உருவாகும் வரை. உலகத்தின் மிக உயர்வான கட்டடம் என்ற பெருமையைப் பெற்றிருந்த க்கிரிஸ்லர் 70 மாடிக் கட்டடத்தின் உரிமையாளர் வால்டர் செரஸ்லர்தான்!

உலகத்தின் 8ஆவது அதிசயமான இந்தக் கட்டடத்தைக் காண, ஆண்டுதோறும் இரண்டரை மிலியன் மக்கள் வருகிறார்கள். கட்டணம் சுமார் 35 ரூபாய் பெரியவர்களுக்கு, பத்தொன்பது ரூபாய் குழந்தைகளுக்கு. (1985 கணக்குப்படி). டிக்கெட் வழங்கும் இடம் கீழ்த் தளத்தில் உள்ள வரவேற்பு மண்டபத்தில் உள்ளது. புகழ்மிக்க இந்தக் கட்டடத்திற்கு வருகை தந்த வி.ஐ.பி.க்களின் புகைப்படங்களை இங்கே காணலாம். எக்ஸ்பிரஸ் எலிவேட்டர்ஸ் என்ற அதிவேக லிஃப்ட்டுகள் 60 செகண்டுகளில் மேலே கொண்டு சேர்க்கிறது.


102 மாடிகள் கொண்ட உலகத்தின் இந்த 8ஆவது அதிசயத்தை ஒரு பெரிய நகரம் என்றே கூறலாம். இதில் நூற்றுக் கணக்கான அ லு வ ல க ங் க ளு ம் கடைகளும் இருக்கின்றன. இவற்றில் மட்டும் 16,000 பேர் பணியாற்றுகிறார்கள். இதில் பணியாற்ற வந்தவர்களில் பலர் ஓய்வு பெற்று விட்டார்கள். கட்டடத்திற்கு 60 வயதாகி விட்டதே!

மேலேயிருந்து பார்த்தால் பெரிய லாரிகள் அளவிலான வாகனங்கள் எறும்பு போல் தோற்றமளிக்கிறதாம்! இதை வடிவமைத்து உருவாக்கித் திறப்பு விழா செய்த போது இதில் 46% பகுதிகளே வாடகைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன. மீதி எல்லாம் காலி! யாருமே வாடகைக்கு வரவில்லை! 'எம்டி ஸ்டேட் பில்டிங்' என்று பலரும் எள்ளி நகையாடினர். என்ன செய்தால் மீதி இடங்கள் நிரப்பப்படும் என்று இதன் கார்ப்பரேஷன் மண்டையைக் குடைந்து கொண்டது. பலரிடமும் ஆலோசனை கேட்டது.

எம்பயர் ஸ்டேட் பில்டிங்கில் 102 மாடிகள். மொத்த படிகள் 1860. போலந்து நாட்டின் ஒலிம்பிக் ஆட்டக் குழு இந்தப் படிகளில் நடந்து, கடந்து ஏறி வருவதை ஒரு புதிய ஆட்டமாக அறிவிக்க முயற்சி எடுத்தது. 1860 படிகளை ஒருவர் 21 நிமிடங்களில் ஏறி 102 வது மாடியை அடைந்தார். ஆனால் இந்தப் போட்டி வன்முறைக்கு இடம் தரவே, பில்டிங் கார்ப்பரேஷனின் அதிகாரிகள் இந்தப் போட்டியை நிறுத்தினர். ஆனால். இந்தப் படிகளின் அமைப்பு, அவற்றில் ஏறி இறங்குவதால் ஏற்படக்கூடிய பயிற்சி ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, நியூயார்க் ரோடு ரன்னர் கிளப் இதற்கு அனுமதியளிக்கத் தொடர்ந்து போராடியது. இறுதியில் 1978 ஆம் ஆண்டு, அல்ட்ரா மாரத்தான் போட்டியை (31 மைல்கள்) முடித்தவர்களை மட்டும் பங்கு கொள்ள கார்ப்பரேஷன் அனுமதித்தது.

இந்த 102 மாடிக் கட்டடத்தை சுத்தமாக வைத்துப் பராமரிக்க 200க்கு மேற்பட்ட நிரந்தரப் பணியாளர்கள் இருக்கிறார்கள். இதில் அமைக்கப்பட்டுள்ள கழிவறைகளின் மொத்த பரப்பளவு 37,999 சதுர அடிகள். பொது மக்கள் அனுமதிக்கப்பட்டு புழங்கும் இடங்களின் பரப்பளவு 3,00,000 சதுர அடிகள், மற்ற அலுவலங்கள் பயன்படுத்தும் பரப்பளவு 1.8 மிலியன் சதுர அடிகள். ஒவ்வொரு மாதமும் இந்தக் கட்டடத்தை சுத்தம் செய்து மெருகூட்டி வைக்க 250 கேலன் உருகிய மெழுகு, 150 கேலன் சுத்தமாக்கும் லோஷன், 500 பவுண்டு காட்டன்

''அவையோரே, நமது தலைவர் குரங்காரைப் பாராட்டிப் பேசலாம். ஆனால் மாலையை மட்டும் அவர் கையில் தந்து விட வேண்டாம்!''



வேஸ்ட் ஆகியவை சராசரி தேவைப் படுகின்றன.


இவ்வளவு உயரமான கட்டடத்தைக் கட்டும் போது ஒன்றிரண்டு பணியாளர்கள் இறப்பது சாதாரணம் தானே? கட்டடம் உருவாகும்போதே கட்டடப் பணியாளர் ஒருவர் தவறி விழுந்து இறந்தார். கட்டடத்திற்கான திறப்பு விழா நடந்ததும் மிகவும் கவனமாக இருந்தும் 18 மாதங்களுக்குப் பிறகு ஒருவர் கீழே விழுந்து தற்கொலை செய்து கொண்டார்.

விமானங்களுக்கு இரவில் எச்சரிக்கை விளக்கு இருந்தும் B-25 பாம்பர் விமானம் ஒன்று 1945 ஆம் ஆண்டு ஜுலை 28ஆம் நாளன்று இதில் மோதியதில் 14 பேர் இறந்தனர். ரிப்பேர் செலவு மட்டும் 1.3 கோடி ரூபாய் ஆயிற்று! கட்டடத்தில் ஏதோ கெட்ட ஆவி இருக்கிறது என்று ஸ்பெஷல் சடங்குகள் நடத்தினார்கள்.

இந்த 102 மாடிக் கட்டடத்தில் ஆடை, அணிகலன், அழகு அணி வகுப்புகள் நடத்தத் தனி அரங்குகள் இருக்கின்றன. மேலுள்ள 30 மாடிகளும் தினமும் இரவில் 9 முதல் 11 மணி வரை வண்ண விளக்குகளால் ஒளிர்கின்றன.

இவ்வளவு உயரமான கட்டடம் யாருக்குச் சொந்தமானது? ஜான் ஜேகப் ரஸ்கோப், கோலிமேன் டி பொன்ட், லூயி ஜி. காஃப்மென், எலிஸ் ஏர்ல் ஆகியோர் அடங்கிய கார்ப்பரேஷனுக்கே இது சொந்தமானது. இந்த கார்ப்பரேஷனின் தலைவர் நியூயார்க் நகரின் முன்னாள் மேயரான அல்ஃப்ரெட் ஈ ஸ்மித் என்பவர்.

உலகத்தின் 8ஆவது அதிசயமாக உருவான இது, இருபத்தெட்டரை ஆண்டுகள் வரை உலகத்தின் மிக உயரமான கட்டடம் என்ற பெருமையோடு திகழ்ந்தது. இப்பொழுது இந்தப் பெருமையைத் தட்டிக் கொண்டிருப்பது, இதற்கு அருகிலேயே உயர்ந்து நிற்கும் சீர்ஸ் டவர் கட்டடம்தான். உயரத்தில் மட்டும்தான் இது தாழ்ந்து விட்டதே தவிர, மற்ற சிறப்புகளைப் பொறுத்தவரை இதுவே இன்னும் சாதனை மன்னனாகத் திகழ்கிறது."இது வெறும் கட்டடமல்ல. இதன் அடித்தளத்தில் விடாமுயற்சி, நம்பிக்கை, ஒத்துழைப்பு போன்ற எல்லாம் அடைக்கலமாகி இதை மிளிர வைத்துக் கொண்டிருக்கிறது'' என்ற இதைப் பற்றிப் பெருமையாக பார்வையாளர் புத்தகத்தில் எழுதியிருப்பவர் யார் தெரியுமா? பேசும் திறனும், பார்வை ஒளியும், கேட்கும் ஆற்றலுமில்லாத அதிசயப் பெண் ஹெலன் கெல்லர் தான்! அவர் எழுதியிருப்பது உண்மை தானே?



இந்த 102 மாடிக் கட்டடத்தின் வயது இப்பொழுது என்ன தெரியுமா? 60 முடிந்து விட்டது! இது முடிக்கப் பட்டு திறப்பு விழா செய்யப்பட்ட நாள் 1931, மே முதல் நாள்.




♦ திரு. பி. எல். என். குப்தா, திரு. கமலநாதன்.

கையில் இருந்தால் பொம்மை! வானில் பறந்தால் உண்மை!

பெரிய யானைகளை விட குட்டி யானைகளை அதிகம் விரும்புகிறோம். காரணம், குட்டி யானை பழகுவதற்கு எளியது. அதனால், அதனோடு பழகி, அதைக் கொண்டு பெரிய யானையின் பொதுவான குணங்களை நாம் அறிய முயல்கிறோம்.

செவிப்பறை கிழிய வானில் சத்தமிட்டபடி விமானம் பறப்பதைக் காண்கிறோம். அவை ஐநூறு பேர் பயணம் செய்யக் கூடியவை. நூற்றுக்கணக்கான டன் எடையுடைய சரக்குகளை ஏற்றிச் செல்லக்கூடியவை என்பதை அறியும் போது நமது பிரமிப்பு அதிகமாகிறது. மனிதனாலேயே செய்யப்பட்டு, மனிதனாலேயே செலுத்தப்படும் விமானத்தைப் பற்றி அறிய ஆவல் பிறக்கிறது. பெரிய விமானமாக இல்லாவிட்டாலும், ஒரு குட்டி பொம்மை விமானத்தையாவது நம்மால் செய்து பறக்க விட முடியாதா என்ற ஏக்கம் உடைய குழந்தைகள், இளைஞர்கள், பெரியவர்கள் பலர் இருக்கிறார்கள். இவர்களுடைய ஏக்கத்தைத் தீர்த்து வைக்க உருவாகியுள்ளதுதான் "ஏரோ மாடலிங்"

'ஏரோ மாடலிங்' மேலை நாடுகளில் பிரபலமாகியுள்ள ஒரு பயனுள்ள பொழுது போக்கு. இயந்திர இயல் என்னும் 'மெக்கானிகல்' பிரிவில் ஆர்வமுள்ளவர்கள் இதில் அதிக ஈடுபாடு காட்டுகிறார்கள். தாங்களும் மினி விமானத்தைச் செய்து, இயங்க வைத்து, வானில் பறக்க வைக்க வேண்டும் என்பதுதான் இவர்களுடைய தணியாத ஏக்கம். இவர்களுடைய ஏக்கத்தைப் பூர்த்தி செய்ய, இவர்களுக்குத் தேவையான அவ்வளவு பாகங்களும் தனித்தனியே விலைக்குக் கிடைக்கின்றன. இவற்றை இவர்களுக்காகவே தயாரிக்கும் பல நிறுவனங்கள் உள்ளன. இவர்கள்



♦ திரு. பி. எஸ். என். குப்தா, திரு. பி. எஸ். ஏ. குப்தா தங்கள் மாடல்களுடன்.

ஒன்று சேர்ந்து ''ஏரோ மாடலிங் கிளப்'' என்று சங்கங்கள் கூட வைத்திருக்கிறார்கள்.


இவர்கள் வாரா வாரம் ஒரு பெரிய மைதானம் அல்லது பரந்த வெளியில் கூடுகிறார்கள். உதிரி பாகங்களைக் கொண்டு தாங்கள் உருவாக்கிய பொம்மை விமானங்களை அங்கே பறக்க விட்டுக் காட்டுகிறார்கள். குட்டிக்கரணம் போட வைக்கிறார்கள். தரையில் மோதுவது போல் இறங்க வைத்து சேதமில்லாது மேலே எழுப்பிப் பறக்க வைத்து பார்ப்பவர்களைத் திகைக்க வைக்கிறார்கள். இதில் போட்டி, சாதனை என்று திறமைகளைக் காட்ட எல்லா வாய்ப்புகளும் இருக்கின்றன. எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது, எதிர்காலத்தில் சிறந்த 'பைலட்'டாக வர வேண்டும் என்ற இலட்சிய ஆர்வமுடையவர்கள் இதில் தனி ஆர்வம் காட்டுகிறார்கள். விமானத்தை ஓட்டுவது பற்றிய அரிச்சுவடிப் பாடத்தை, குட்டி யானையைக் கவனித்து பெரிய யானையின் குணங்களை அறிவது போல் 'ஏரோ மாடல்' மூலம் நேரடியாக அறிகிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை 'ஏரோ மாடலிங்' பணம் அதிகம் செலவாகும் பொழுதுபோக்கு. அதோடு, நம் நாட்டில் சாதாரண மக்களிடையே விமானத்தில் பறப்பது என்றாலே, இன்னமும் தயக்கம் இருந்து வருகிறது. அதனால், மேலை நாடுகளில் இருப்பது போல் இந்த 'ஏரோ மாடலிங்' பொழுதுபோக்குக்கு நமது நாட்டில் அதிக வரவேற்பு இல்லை. மேலும் பொது மக்களிடையே இந்தப் பொழுதுபோக்கு பற்றிய விவரங்களும் பரவவில்லை. எல்லாவற்றையும் விட மிக முக்கியமானது இந்த 'ஏரோ மாடலிங்'கைச் செய்யத் தேவைப்படும் உதிரி பாகங்கள் நமது நாட்டில் கிடைப்பதில்லை. வெளிநாடுகளில் இருந்து வரவழைத்துக் கொள்ள வேண்டும். அப்படியே வரவழைத்தாலும் இது பற்றி வழிகாட்ட அதிக அளவிலான அனுபவசாலிகள் இல்லை.

இவ்வளவு இடையூறுகள் இருந்தும் இந்த 'ஏரோ மாடலிங்'கைச் சென்னையில் விடாப்பிடியாக 30 ஆண்டுகளுக்கும் மேலாகச் செய்து வருகிறார்கள் என்றால் அவர்களைப் பாராட்டாமல் இருக்கலாமா? இந்த 'விடாப்பிடி' முயற்சியைச் செய்து வருபவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் திரு. பி. எஸ். என். குப்தா, திரு. பி. எஸ். ஏ. குப்தா, திரு. கமலாகரன் மற்றும் அவரது நண்பர்கள். இவர்களையும் இவர்களது ஏரோ மாடல்களையும் எல்லா ஞாயிற்றுக் கிழமைகளிலும் காலையில் சென்னையை அடுத்துள்ள சோழாவரத்தில் காணலாம். தாங்கள் ஏரோ மாடலிங் செய்வதோடு இதில் ஆர்வம் காட்டுவோர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்து வழிகாட்டுகிறார்கள். சிங்கப்பூரில் இருந்து உதிரி பாகங்களை வரவழைத்துத் தருகிறார்கள். பயிற்சி வகுப்பைப் போலவே நடத்தி உற்சாகமூட்டுகிறார்கள்.

அண்மையில் மீனம்பாக்கம் 'ரோட்டரி கிளப்'பில் நடைபெற்ற 'ஏர்ஷோ'வில் இவர்கள் பறக்க விட்டுக் காட்டிய மாடல்கள் ஆயிரக்கணக்கான பார்வையாளர்களை அசத்தி விட்டன. இந்தப் பொழுதுபோக்கை வெகு விரைவில் பள்ளிகளில் அறிமுகப்படுத்த அரசு ஆர்வம் காட்டி வருகிறதாம்.


அட்டையில் : விஜய், மேத்தா
ரகுநாத், ரகுநாத் கௌசிக்
வண்ணப்படம் : யோகா



ஐந்து வயதில் சாப்ளின்!

★ சார்லி சாப்ளினின் தாயார் ஒரு பாடகி. ஒரு சமயம் அவர் இசை அரங்கில் பாடிக் கொண்டிருக்கும் போது குரல் கம்மிக் கொண்டு பாட முடியாமல் தவித்தார். உடனே அருகிலிருந்த ஐந்து வயது சார்லி சாப்ளின் அம்மா நிறுத்திய பாட்டைத் தொடர்ந்து பாடினார். அரங்கிலிருந்தவர்கள் உற்சாகத்துடன் ரூபாய் நோட்டுகளையும் கைதட்டி காசுகளையும் மேடை மீது வீசினர். உடனே சிறுவன் சாப்ளி ''முதலில் இறைந்து கிடக்கும் பணத்தை எடுத்துக் கொள்கிறேன். பிறகு பாடுகிறேன்'' என்றாராம். இசை அரங்கே 'கொல்'லென்று சிரித்தது. இந் நிகழ்ச்சியே சார்லி நகைச்சுவையாக நடிக்க ஆதாரமாக இருந்தது.

- எஸ். விஜயா சீனிவாசன்,
கைலாசபுரம்.





★ அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தில் ஆலன் என்பவர் வசித்து வருகிறார். திடீரென்று ஒருநாள் இவர் வீட்டுச் சுவரில் இருந்து தேன் வடிய ஆரம்பித்ததாம்...! ஆச்சர்யப்பட்டுப் போய் ஆலன் விஷயத்தை வெளியே சொல்ல, ஆயிரக்கணக்கானோர் அவர் வீட்டில் குவிந்து விட்டார்களாம். சுவரை இடித்துப் பார்த்த பிறகுதான் விஷயமே தெரிந்தது. சுவரினுள் 300 பவுண்டு எடையுள்ள தேனடை இருந்ததாம்...!

- கே. எல். குமணன், கல்லிடை.

பூங்காச் செய்திகள்!

★ கல்கத்தாவில் உள்ள பூங்காதான் ஆசியாவிலேயே மிகப் பெரிய பூங்காவாகும்.

பாரசீக மாடலில் பூங்காக்களை திட்டமிட்டு உருவாக்கும் முறையை இந்தியாவில் புகுத்தியவர் யார் தெரியுமா? பாபர்.

இயேசுவை ஜூடோஸ் காட்டி கொடுத்தது ஒரு பூங்காவில்தான்! அந்த பூங்காவின் பெயர் ஜெத்சமேனி!

- செஞ்சிகுமார், செஞ்சி - 2.



★ ஜெர்மனியிலுள்ள பிரிபர்க் நகரில் $6\frac{1}{2}$ அடி உயரமுள்ள வாத்து சிலை ஒன்று இருக்கிறது! வாத்துக்கு நன்றி தெரிவிக்கத்தான்!

இரண்டாம் உலக யுத்த சமயத்தில் ஒருநாள் அந் நகரிலுள்ள வாத்துகள் பயங்கரமாய் சப்தம் போட்டு ஊரையே கதி கலங்க வைத்தன! இதைக் கண்ட மக்கள், வாத்துகளின் சப்தம் தங்களுக்கு ஏதோ ஒரு முன் எச்சரிக்கையென எண்ணி எல்லோரும் பாதுகாப்பான இடங்களில் பதுங்கிக் கொண்டார்கள். சிறிது நேரத்தில் யுத்த விமானங்கள் குண்டுகளைப் பொழிந்தன. பொருட்கள் சேதம் அதிகம். மக்கள் சேதமில்லை!

வாத்துகளின் எச்சரிக்கையால் மக்கள் பிழைத்தனர். அந்த நன்றிக்கடனுக்காக வாத்துக்குச் சிலை வைத்தனர்!


- ந. க. பரமசிவம், புரசை.



இராமர் என்றால் கோபம் வரும்..!

★ நம் தமிழகத்தில் இராமர் பெருமைக்குரிய தெய்வமாகக் கருதப்படுகிறார். ஆனால், அஸ்ஸாமில் வசிக்கும் 'மிகிர்' என்ற இனத்தினர், சுக்ரீவனுக்காக பரிந்து இராமர் கொன்ற வாலியைத் தெய்வமாக வணங்குகின்றனர். அவர்கள் தங்களை 'வாலியின் வாரிசுகள்' என்று பெருமையாகச் சொல்லிக் கொள்கிறார்கள். இராமபிரான் பெயரைச் சொன்னால் இன்னும் அந்த மக்களுக்குக் கோபம் வருமாம்...!

- கே. எல். குமணன், கல்லிடை.



தபால் பெட்டிகளின் வண்ணம்

★ தபால் பெட்டிக்கு எந்த ஆண்டில் சிவப்பு வண்ணம் பூசும் பழக்கம் ஏற்பட்டது தெரியுமா? 1876-ல். விமான நிலையத்தில் மட்டுமே நீலநிறம் பூசப்பட்ட தபால் பெட்டிகளைக் காண இயலும்.

- சி. அருள்மணி, மொரப்பூர்.



பேய் மியூசியம்

★ விநோதமான மியூசியம் ஒன்று ரஷ்யாவில் 'KAUHAS' என்ற நகரில் இருக்கிறது. இங்கு பல நாட்டுப் பேய்களின் சிற்பங்கள், ஓவியங்கள் காணப்படுகின்றன. பேய்கள் பயன்படுத்தியதாகச் சொல்லப்படும் பொருட்களையும் மற்றும் சில வகை ஆயுதங்களையும் கூடப் பார்வையாளர்கள் காண்பதற்காக வைத்துள்ளார்கள். ''பயந்தாங்கொள்ளிகள் உள்ளே வர வேண்டாம்'' என்ற அறிவிப்புப் பலகையை முன்னெச்சரிக்கையாக மியூசியத்தின் வாசலிலேயே தொங்க விட்டுள்ளார்கள்.

- தி. பாலு, செஞ்சி.




சிறுவனின் சமார்த்தியம்!

★ ஒரு வெளிநாட்டுப் பயணி இந்தியச் சிறுவனிடம் கேட்டார். ''அன்பே உருவான இந்தியத் தெய்வங்கள் கையில் எல்லாம் அரிவாள், ஈட்டி... என பயங்கரமான வன்முறையைத் தூண்டும் ஆயுதங்களாக இருக்கின்றதே! பார்க்கப் பயமாக உள்ளதே! ஏன் இப்படி?'' என்று கிண்டல் கலந்து கேட்டார்.

"ஓ! அதுவா! இந்தியர்களாகிய நாங்கள் சமாதானத்தையே விரும்புகிறோம். எனவே, எங்களிடமிருந்த ஆயுதங்களையெல்லாம் இறைவனிடம் கொடுத்து விட்டோம் அவ்வளவே!''ஃ என்றான் புத்திசாலியான சிறுவன்!

- சுகா ராஜ், மதுரை.



வைக்கோல் கடிகாரம்!

★ கடிகாரம் பெரும்பாலும் உலோகத்

தினால்தான் செய்யப்படுகிறது. சில பிளாஸ்டிக்கால் செய்யப்படுகின்றன. ஆனால்,சுவிட்சர்லாந்தில் சமீபத்தில் கடிகாரத்தில் உள்ள சக்கரம், ஸ்பிரிங், பெண்டுலம் எல்லாமே வைக்கோலால் செய்துள்ளனர் என்றால் (என்னாலேயே கூட) நம்ப முடியவில்லை!

- சி. அருள்மணி, மொரப்பூர்.



தப்பிக்க

★ மேல்நாடுகளில் தபால்காரர்கள் நாய்களுக்குப் பயந்து, தம் இரு கால்களிலும் 'DOG GONE' என்னும் மருந்தைப் பூசிக் கொள்கிறார்கள். மருந்தின் வாசனை நாய்களுக்குப் பிடிப்பதில்லை! அதனால் கடிக்க வருவதில்லை!


- ந.க. பரமசிவம், புரசைவாக்கம்.




பெரிய மெழுகுவத்தி

★ ஸ்வீடனில் ஸ்டாக்ஹோம் நகரத்தில்தான் 1897-ஆம் ஆண்டு உலகிலேயே மிகப் பெரிய மெழுகுவர்த்தி தயாரிக்கப்பட்டது. இந்த மெழுகுவர்த்தியின் உயரம் 24.38 மீட்டர் குறுக்களவு 2.59 மீட்டர்!

- டி. ஏ. சரவணன், சிங்காநல்லூர்.





சார் தபால்!

குடும்பப் பத்திரிகை!

★ துளசிச் செடியின் மகிமையை ஜெய பாலனுக்கு மட்டும் அல்லாமல் எங்களைப் போன்றவர்களுக்கும் புரியும்படி விளக்கி யது. எதுக்கு தாத்தா இது?
சேலம் - 1, எம். கே. முத்துவேல்.

★ டிசம்பர் பிருந்தாவனக் கவியரங்கம். பிருந்தாவனத்திற்கே என்னை அழைத்துச் சென்றது போல் அமைந்திருந்தது.
திருவண்ணாமலை - 1, ஆர். ராஜாராம்.

★ 'கோகுலம்' சிறுவர்கள் மட்டும் படிக்க வேண்டிய இதழ் அல்ல; பெரிய வர்களும் படித்து அறிந்து கொள்ள வேண் டிய பல அரிய செய்திகள் நிரம்பிய 'குடும்ப இதழ்'. பாராட்டுகள்!
தி. வெ. நல்லூர், எஸ். வைத்தியநாதன்.

★ பழைய 'விறகு வெட்டி' கதையை சுவைக்கும்படி மாற்றி எங்களுக்குப் புது அறிவுரையை வழங்கிய கோகுலத்தையும் ஆனந்தி - லலிதாவையும் பாராட்ட வார்த் தைகளே இல்லை!
செஞ்சி, தா. ஷேக் உசேன்.

★ மாதந்தோறும் வெளிவந்து எங்களை மகிழ்விக்கும் கோகுலம் பதினைந்து நாட்க ளுக்கு ஒருமுறை வெளிவருமா?
செஞ்சி, சு. முரளி ராசன்.

★ பாரதியாரோடு பிறந்த ஈகை குணத்தைப் பறைசாற்றியதோடு 'தர்மம்' செய்ய வேண்டும் என்பதையும் வலியுறுத் தியது ''மாட்டேன் போ'' சிறப் பான சிறுகதை.
கருமத்தம்பட்டி, அ. இராஜப்பன்.

★ 'உழைப்பே உயர்வு தரும்' என்ற உயர்ந்த கருத்தை, ராஜாஜி அவர்களின் 'யாருக்கு வேண்டும் வரம்?' கதை, தெளி வாக; எளிதாக விளக்கியது.
சென்னை - 15, ஜி. கே. வெண்ணிலா.

★ 'திமிங்கிலங்கள்' பற்றி ஆழி கூறியி ருந்த செய்திகளைப் படித்து விட்டு, ஆச்சர் யத்தால் மூக்கின் மேல் விரல் வைத்தோம்!
கல்லிடைக்குறிச்சி, கே. எல். குமணன்.

★ வெறி நாய்க் கடிக்கு மருந்து கண்டு பிடித்த லூயி பாஸ்டியர் பற்றி எங்களுக்குத் தெரியாத பல தகவல்களைத் தெரிந்து கொண்டோம். நன்றி!
சேலம் - 5, என். சுரேஷ்.

★ பால்ராஜின் பெருந்தன்மை படிக்கும் மாணவர்களுக்கு மிக அவசியம் என்பதை ''தேவனே...! தேவனே...! மூலம் உணர்ந்து கொண்டேன்.
மொரப்பூர், ''பிஜு''

★ ''கிருஸ்துமஸ் ஸ்பெஷலா? கவிதை' ஸ்பெஷலா...? சிறுகதை ஸ்பெஷலா? கோகுலத்தைப் படிக்கும் பொழுது - எழுந்த - இந்த அடுக்கடுக்கான சந்தே கங்கள் இன்னும் தீர்ந்தபாடில்லை!
மொரப்பூர், அ. நவ்சாத்.


★ 'காசுக்கா ஓசிக்கா' கருத்துமிக்க சிறு கதை. நெஞ்சைத் தொட்டுப் பாராட்டு கிறேன். சூப்பர்.
பேர்ணாம்பட்டு, ஓ. கே. என். நுருல்அமீன்.

★ 'கற்பனைக் கடிதம்' படித்த பிறகு என்னை அறியாமல் கற்பனையில் மிதந்து விட்டேன். அருமை!
பேர்ணாம்பட்டு, என். சலீம் பாவா.

★ மற்றவர் பொருள் மீது பற்று வைத்தல் கூடாது என்பதை உணர்த்தியது 'பூமாதேவி கொடுத்தது' சித்திர சிறுகதை.
விசலூர் - 1, ஜி. ஜி. கண்ணன்.

★ கிருஸ்துமஸ் தாத்தாவை அட்டையில் அழகாய்த் தந்தது மட்டுமின்றி பக்கத்திற்கு பக்கம் கிருஸ்துமஸ் சிறப்புகளைத் தந்த கோகுலம் குழந்தைகள் முதல் பெரிய வர்கள் வரை அனைவரின் இதயத்தையும் கவர்ந்தது.
காங்கயம் - 1, ஜெ. ரவிக்குமார்.

பரதன் அச்சகத்தில் பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக அச்சிட்டு வெளியிட்டவர்: வி. முரளி. ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. தொலைபேசி: ஆசிரியர் குழு அலுவலகம்: 2344145: சர்குலேஷன் மானேஜர்: 2344190: விளம்பரம் — சந்தா: 2344157: டைரக்டர்: 2341543.
ஆறு மாதச் சந்தா: உள்நாடு: ரூ. 18/-: வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 60/-: விமானத் தபால்: ரூ. 135/-
ஆண்டுச் சந்தா: உள்நாடு: ரூ. 36/-: வெளிநாடு: கப்பல் தபால்: ரூ. 120/-: விமானத் தபால் ரூ. 270/-.



குளிக்கத் தண்ணி வேணுங்க!
கொஞ்சம் எனக்கு உதவுங்க!

REGISTERED NO. TN MS (S) 281
Registered as a Newspaper in SriLanka

